

கல்கி
KALKI 29.4.1962
30
காசு



*மாடல் A-730

நீங்கள் தேர்ந்தெடுக்க **நேஷனல் எக்கோ** ரேடியோக்களின் பல்வேறு மாடல்கள்

நேஷனல்-எக்கோ ரேடியோக்களின் விதவிதமான மாடல்களில் ஒன்று உங்கள் மனதைக்கவரும் என்பது திண்ணம்! நேஷனல்-எக்கோ ரேடியோ, கொடுக்கும் விலைக்கு சிறந்த மதிப்பு; மிகத் தரமாக பல்லாண்டுகள் உழைக்கும்; உங்களுக்கு மணிக்கணக்கில் இசை இன்பத்தை அளிக்கும்.

நேஷனல்-எக்கோ ரேடியோக்களின் 10 அற்புதமான மாடல்கள் உள்ளன...விலை மிகக் குறைவான ரூ.125 லிருந்து ரூ.725 வரை.




மாடல் U-764: ஏஸி/டிஸி ஸெட். 5 வால்வுகள், 3 பாண்டுகள், பிளாஸ்டிக் பெட்டி.

மாடல் B-764: ட்ரை பாட்டரி ஸெட் 4 வால்வுகள், 3 பாண்டுகள்.

ரூ. 280.75

*மாடல் A-730: ஏஸி ஸெட். 9 வால்வுகளின் வேலையைச் செய்யும் 6 'நோவல்' வால்வுகள், 8 பாண்டுகள். மரப் பெட்டி.


மாடல் U-730: ஏஸி/டிஸி ஸெட். 9 வால்வுகளின் வேலையைச் செய்யும் 6 'நோவல்' வால்வுகள், 8 பாண்டுகள். மரப்பெட்டி. ரூ. 574.25



மாடல் U-755: ஏஸி/டிஸி ஸெட். 6 'நோவல்' வால்வுகள், 3 பாண்டுகள். மரப் பெட்டி.

மாடல் B-755: ட்ரைபாட்டரிஸெட். 5 'நோவல்' வால்வுகள், 3 பாண்டுகள், மரப்பெட்டி.

ரூ. 351.00




மாடல் U-756 (ஜனதா): ஏஸி/டிஸி ஸெட். 3 வால்வுகள் மற்றும் ரெக்டிபையர், 2 பாண்டுகள், மத்திய அலை, சிற்றலை. அழகிய பெட்டி.

மாடல் A-744: ஏஸி ஸெட். 9 வால்வுகளின் வேலையைச் செய்யும் 6 'நோவல்' வால்வுகள், 4 பாண்டுகள். கண்ணைக் கவரும் பெட்டி.

மாடல் B-751: ட்ரை பாட்டரி ஸெட். மொத்தம் 9 வால்வுகளின் வேலையைச் செய்யும் 3 டிரான்ஸிஸ்டர்களும், 4 வால்வுகளும். 4 பாண்டுகள். கண்ணைக் கவரும் பெட்டி.

ரூ. 430.00



நேஷனல்-எக்கோ ரேடியோக்கள் சிறந்தவை—அவை மான்ஸ ஸினேஸ் செய்யப்பட்டவை

எல்லா விலைகளும் எக்ஸைஸ் ட்யூடி உட்பட; வரிகள் தனி

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்

பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி . பாட்னா . பெங்களூர் . ஸெகந்திராபாத்

JWT/GRA-3470

சுபகிருது
சித்திரை 16

கல்கி

ஏப்ரல், 29
1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

ஆந்திரத்தின் குண்டூர், கிருஷ்ணா, கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி ஜில்லாக்களில் புகையிலை பதனிடல் நூதன முறையில் நடைபெறுகிறது. அந்த ஜில்லாக்களில் விரவியுள்ள பண்டகசாலைகளில் சிகரெட் தயாரிப்புக்காக வர்ஜீனியா புகையிலை கணப்புப் போடப்பட்டுப் பக்குவப்படுத்தப்படுகிறது. அத்தகைய புகையிலையை, அதற்கான விற்பனைத் தலமாகிய குண்டூரில், ஐக்கிய ராஜ்யம், ருஷியா மற்றும் இதர நாடுகளின் சிகரெட் தயாரிப்பாளர்கள் வாங்கி ஏற்றுமதி செய்கின்றனர்.



புகையிலையின் வரலாறு... 5



பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GT.705 TM

Greens' Advtg.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 39

முதல் பரிசு

தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

தேர்தலில் வாக்காளர்கள் காங்கிரஸ் கட்சிக்கு வோட்டுப் போட்டு அதைப் பாராளும் மன்றத்துக்கு ஆட்சி செலுத்த அனுப்பி வைத்திருக்கின்றனர். எதற்காக வோட்டுப் போட்டார்கள் என்று வாக்காளர்களைக் கேட்டால் சரியான விடை கிடைக்காது. காங்கிரசின் சோஷலிஸ பாணி சமுதாயக் கொள்கைக்கா, அல்லது காங்கிரஸின் ஐந்து ஆண்டுத் திட்டங்களுக்கா, அல்லது காங்கிரஸின் அப்பழுக்கற்ற நிர்வாகத் திறனுக்கா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனால் காங்கிரஸ் கட்சியினர் சாதாரணமாக எந்த வெற்றி பெற்ற கட்சியினரும் கூற நினைப்பது போல, தங்களுக்குக் கிடைத்த வெற்றி, தங்கள் சோஷலிஸக் கொள்கைக்கு மக்கள் அளித்த ஆதரவு என்று மார்தட்டிப் பேசுகின்றனர். கொள்கைகளுக்கு மட்டும் அல்ல, கொள்கைகளை அமுல் நடத்தும்போது மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும், விதிக்கப் போகும் வரிகளுக்கும், அதனால் நாட்டுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கும் கூட மக்கள் ஆதரவு அளித்துவிட்டதாகவே காங்கிரஸ் கட்சி கருதுகிறது. இப்போது அதன்படி செயலாற்றவும் தொடங்கிவிட்டது.

இப்பொழுது ரயில்வே மந்திரி பதவிக்கு வந்துள்ள ஸர்தார் சுவரண் சிங் 21.26 கோடி ரூபாய்க்கு ரயில் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறார். இதுவே புது காங்கிரஸ் ஆட்சி மக்களுக்கு அளிக்கும் முதல் பரிசு.

இவ்வரிகளின் சுமை ரயிலை உபயோகிக்கும் எல்லா வகுப்பினர்கள் மீதும் விழுகிறது. ஆபீஸுக்குப் போய்வரத் தினந்தோறும் ரயிலில் பிரயாணம் செய்யும் 'சீசன் டிக்கட்டு'க்காரர்களிலிருந்து முதல், இரண்டாவது, மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள், தொழில் ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் வரை எல்லா மக்களும் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

சாமான்கள்மீது விதிக்கப்படும் அதிகக் கட்டணங்களை, முதல் கட்டத்தில் யார் செலுத்தினாலும், அவையெல்லாம் உற்பத்தி செய்யப்பட்டு ரயிலில் ஏற்றப்படும் பொருள்களின்மீது திணிக்கப்பட்டு அடக்க விலையில் சேர்ந்துவிடும். பொருள்களின் விற்பனை விலை உயர்ந்து விடும். விலை உயர்ந்து விட்டால், அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியவர்கள் மக்கள்தானே. ஆலைப் பொருள்கள் மட்டும்தான் இம்மாதிரி நிலையில் இருப்பதாக எண்ணிவிட வேண்டாம். எல்லாப் பொருள்களுக்கும் இந்த அதிகக் கட்டணம் உண்டு. ஆகவே அண்டை ராஜ்யங்களிலிருந்து ரயில் மூலம் தருவிக்கப்படும் பொருள்களின் விலைகளும் உயர்ந்துவிடும். ஆகக்கூடிக் கடைசியில் இதையெல்லாம் ஏழை மக்கள்தான் தாங்க வேண்டும்.

முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் பெரும்பாலும் அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவோ, வியாபார ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களாகவோ இருப்பார்கள். கூடுதல் கட்டணத்தை அவர்கள் சுலபமாகக் கொடுத்துவிடக் கூடும். அந்தச் செலவுகளை வேறிடங்களிலிருந்து அவர்கள் வசூலித்து விடுவார்கள். ஆனால் சாதாரண ஏழை மக்களாகிய மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் கொடுக்க வேண்டிய அதிகக் கட்டண விகிதங்களை அவர்களேதான் தாங்க வேண்டும். இம்மாதிரி அவர்களே ஏற்க வேண்டியது ஏறக்குறைய 10 கோடி ரூபாய். அதாவது 21.26 கோடியில் கிட்டத்தட்ட பாதி அவர்கள் நேரடியாகவே கொடுக்க வேண்டும். இதனுடன் பண்டங்களுக்குப் புதிதாக

செய்ததெல்லாம் வீணாயிற்று!



ஏற்றப்படும் கட்டணத் தொகையும் சேர்த்து 21 கோடியும் ஏழைகள் தலை மேல் குவியும்.

ரயில் மூலம் உல்லாசப் பயணத்துக்காகச் சாதாரண மக்கள் போவதில்லை. அவசியமுள்ளபோது மட்டுமே போகின்றனர். ரயிலில் பிரயாணிகளுடைய வசதிகளில் அதிக முன்னேற்றம் இல்லாவிட்டாலும், செலவு மட்டும் அதிகரித்திருக்கிறது.

கட்டண உயர்வுக்குக் காரணங்கள் பல. ஏற்கனவே நிர்வாகச் செலவு அதிகமாகிக் கொண்டு வருவதால், ஆண்டுதோறும் ரயில்வே இலாகா பொது நிதிக்குக் கொடுக்க வேண்டிய தொகையில் துண்டு விழுகிறதாம். இதைச் சரிக்கட்டவும், பொது நிதிக்கு அதிகப் பங்கு செலுத்தவும், ரயில்வேக்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதாம். மற்றொன்று: நவம்பர் 1961-லிருந்து 20 லட்சம் மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் கிராக்கிப்படியின் உயர்வினால் ரயில்வேக்கு மட்டும் சுமார் 12 கோடிக்கு மேல் செலவு உயர்ந்து விட்டிருக்கிறது. இதைச் சரிக்கட்டவும் கட்டண உயர்வு தவிர்க்க முடியாததாகி யிருக்கிறது. ரயில் டிக்கெட்டுகளின் விலையின் மேல் மத்திய சர்க்காரின் வரியும் ஒன்று உண்டு. மொத்தத்தில் ரயில் கட்டணங்களை உயர்த்த வேண்டியதாயிற்று.

நமது பொருளாதாரத்தின் தற்போதைய பரிதாபகரமான நிலையை இது எடுத்துக் காட்டுகிறது. விலைவாசிகள் உயர்ந்து விட்டன என்பதற்காகச் சம்பள உயர்வும், கிராக்கிப்படியும் கொடுக்கப்படுகின்றன. சம்பள உயர்வுக்காக ஏற்படும் அதிகச் செலவைச் சரிக்கட்ட, கட்டண உயர்வும், அதிக வரிகளும் விதிக்கப்படுகின்றன. இவற்றின் விளைவு மீண்டும் விலைகளின் ஏற்றம். இப்படி விலை உயர்வும் சம்பள உயர்வும் மாறி மாறிச் சுழன்று கொண்டிருக்கும் சூழ்நிலையில் மக்கள் அகப்பட்டுத் தவிக்கின்றனர்.

புதிதாகக் கொடுக்கப்பட்ட சம்பள உயர்வு இந்தப் புதிதாக ஏற்பட்டுள்ள ரயில் கட்டண உயர்வில் கரைந்துவிடும்.

ரயில்வே பட்ஜெட் மீது வழக்கம் போல் மக்கள் சபையில் விவாதம் நடக்கும். மந்திரியும் வழக்கமான பதிலைச் சொல்லி விடுவார். கட்சி பலத்தினால் கட்டண உயர்வுகள் அங்கீகரிக்கப்பட்டு விடும். அவற்றின் விளைவுகள் மக்களைத்தான் வாட்டும்.

இதை முதல் பரிசு என்று சொன்னோம். இந்த இதழ் வாசகர்கள் கையில் கிடைக்கும்போது நிதி அமைச்சர் திரு மொரார்ஜி தேசாய், அவர் பங்குக்கு விதிக்க வேண்டிய வரி விகிதங்களை அறி

வித்திருப்பார். இது 40-லிருந்து 50 கோடி வரையில் இருக்கும் என்று விஷய மறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இது இரண்டாவது பரிசு.

காங்கிரஸ் கட்சியினர் சொல்லுவது போல் இந்த விளைவுகளை யெல்லாம் எதிர் பார்த்துத்தான் மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு வோட்டுப் போட்டார்களா? தெரிந்து தான் போட்டார்கள் என்பது உண்மையானால், அவர்கள் வினை விதைத்தவர்கள். வினையைத்தான் அறுவடை செய்ய வேண்டும். அதிக கட்டணத்தை முணுமுணுக்காமல் கொடுத்து விட்டுக் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டும். வினையைத் தினை என்று நினைத்துக் கொண்டு காங்கிரஸுக்கு வோட்டுப் போட்டவர்கள் இனிமேலாவது காங்கிரஸின் போலிப் பிரசாரங்களைக் கண்டு மயங்குவதில்லை என்று உறுதி கொள்ள வேண்டும். சோஷலிஸம் என்றால் ஏழைகளைக் கைதூக்கி விடுவது என்று பொருள் சொல்லுகிறார்கள். இது வரையில் ஏழைகளின் நிலைமை சீர்ப்படுவதற்கு ஏதாகிலும் செய்யப்பட்டதா என்று ஆராய வேண்டும். வெறும் பேச்சைக் கண்டு மயங்கலாகாது. விலை உயர்வும் வரி உயர்வுமே சோஷலிஸத்தில் நாம் கண்ட பலன். நேர் வரி யுகம் முடிந்துவிட்டது. இனிமேல் போடுவதெல்லாம் மறைமுகவரியே என்று சந்தேகமின்றிச் சொல்லி விட்டார்கள். அதாவது ஏழைகளுக்குத்தான் வரிச் சுமை. இதுதான் காங்கிரஸ் சோஷலிஸத்தின் அர்த்தம்.

விலைவாசி ஏற்றம்தான் மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கூடுதல் கிராக்கிப்படி கொடுத்ததின் காரணம் என்கிறார்கள். விலை ஏற்றம் மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு மட்டுமா? கோடிக்கணக்கான மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவதியை மூடி வைக்கப் பார்க்கிறார்கள்.

மீண்டும் சீன ஆக்கிரமிப்பு

இந்திய சீன எல்லைப்புறத்தில் மீண்டும் சீன ஆக்கிரமிப்பு செய்திருக்கிறதென்று மக்கள் சபையில் அறிவிக்கப் பட்டதைக் கேட்டு மக்கள் மனம் பதறும். ஆனால் மனம் கொதிப்படைவதை விட, வேறு ஒன்றும் செய்ய அவர்களால் முடியாது. விவகாரம் முற்றிலும் பிரதமரின் நேரடிப் பார்வையில் உள்ளது. அவரோ, ராஜதந்திர முறையில் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறார். கண்டனங்களும், எதிர்க் கண்டனங்களும் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, சீனர்கள் காரியத்தில் கண்ணாகத் தங்கள் வேலையைத் தொடர்ந்து நடத்துகின்றனர். பாதுகாப்பு மந்திரி வேறு இடத்தில் இதர வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார். ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து நடத்தும் ஒரு நாடு நம் நாட்டு அரசாங்கத்துக்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கிறது என்பது வெளிப்படை. விமர்சனம் தேவையில்லை.

என்ன சேதி?

ஸ்ரீபிரகாசாவின் குமுறல்

பம்பாய் கவர்னர் பதவியிலிருந்து விலகும் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்களுக்கு, பம்பாய் பாரதிய வித்யாபவனத்தினர் சென்ற 12-ம் தேதி ஒரு பிரிவுபசார விருந்து நடத்திக் கௌரவித்தனர்.

இவ்வைபவத்தில் பேசிய ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் தீவிர உணர்ச்சியோடு சில விஷயங்களைக் குறிப்பிட்டார். "பாரத தேசம் சுதந்திரம் அடைவதற்குமுன் நாம் நாகரிகத்தில் மிக முன்னேறிய மக்கள் என்றும், உலகத்துக்கே போதிக்கக் கூடிய உயர் நிலையிலிருப்பவர்கள் என்றும் நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால் சுதந்திரத்துக்குப் பிறகு இமேர் என்று நாம் பிற்போக்கானவர்கள் என்றும் நம் நாடு மிகமிக பிற்போக்கான நாடாக இருப்பதாகவும் கூறப்படுகிறது! நாம் முன்னேற்றம் அடைய உலகில் ஒரு நாடு பாக்கியின்றி உதவி கோரிப் பிச்சை எடுக்கும் நிலையை அடைந்திருக்கிறோம். இது மிகவும் விந்தையான நிலை!

"இவற்றை யெல்லாம் பற்றி என் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருக்கும் எண்ணங்களை நான் வகிக்கும் பதவி காரணமாகப் பிரயாசைப்பட்டு அடக்கி வைத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. ஜனாதிபதியிடமிருந்து, 'நீ இப்படிப் பேசியிருக்கக் கூடாது', 'அப்படிப் பேசியிருக்கக் கூடாது' என்று கடிதங்கள் வந்து விடுமோ என்ற தயக்கம்

இருந்தது. அந்தப் பயம் இன்னும் இரண்டு நாள் கழித்து எனக்கு இராது. மீண்டும் நான் சுதந்திர புருஷனாகி விடுவேன்; என் உள்ளத்தில் எழும்உணர்ச்சிகளைப் பகிரங்கமாக வெளியிடும் வாய்ப்புப் பெறுவேன்'' என்று கூறினார்!

இப்படிப் பேசியவருக்கு விலங்கு பூட்ட மறுபடியும் முயற்சி நடக்கிறது. அவரைக் காங்கிரஸ் அக்கிராசனராக்கப் பிரதமர் நேரு முயன்று வருவதாகத் தெரிகிறது. காங்கிரஸ் அக்கிராசனர் என்றால் ஆட்சித் தலைவராகிய பிரதமருக்கு ஒரு கையாளாகத்தான் இருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சித் தலைவருக்குச் சுதந்திரமோ அதிகாரமோ கிடைக்காது.

விஞ்ஞானியின் எச்சரிக்கை

அணு ஆராய்ச்சியில் புகழ் பெற்று, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க விஞ்ஞானி டாக்டர் லீனஸ் பாலிங் என்பவர் இதுவரை நடைபெற்ற விஷகுண்டு சோதனைகளால் வாயு மண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் விஷம் பலப்பல தலைமுறை வரை நிலைத்து நின்று, இரண்டு கோடி குழந்தைகளை கூனாகவோ, குருடாகவோ அறிவிழந்தோ இன்னும் பல குறைபாடுகளுடனேயோ, அல்லது உயிரிழந்து சவமாகவோ பிறக்கச் செய்யும் என்று கூறுகிறார். இந்த விஷவாயுவின் அளவை மேலும் சோதனைகள் நடத்தி அதிகரிக்கச் செய்ய அமெரிக்காவுக்கு உரிமை கிடையாது என்று தம் நாட்டை நோக்கிக் கூறுகிறார். இது விஷகுண்டு வைத்துள்ள எல்லா நாடுகளுக்குமே உரிய எச்சரிக்கையாகும்.

கிராக்கிப்படி உயர்வு

சம்பளக் கமிஷன் சிபாரிசுகளைப் பரிசீலனை செய்து, மத்திய சர்க்கார், தனது ஊழியர்களுக்கு முன்னர் வாக்களித்தபடி கிராக்கிப் படியை உயர்த்தி யிருக்கிறது. இதனால் சுமார் 20 லட்சம் மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஓரளவு பரிகாரம் கிடைக்கிறது. உண்மையில் இது பரிகாரம் தானா என்பது சந்தேகமே. விலைவாசிகளின் ஏற்றத்துக்கும் இப்போது அளிக்கப்பட்டுள்ள கஷ்ட நிவாரணத்துக்கும் சம்பந்தம் இல்லை. இந்த மட்டிலுமாவது கிடைத்ததே என்று வேண்டுமானால் அவர்கள் ஆறுதல் கொள்ளலாம்.

உழைத்து வேலை செய்யும் மக்களின் எண்ணிக்கையில் மத்திய அரசாங்க ஊழியர்கள் ஒரு சிறு பகுதியினரே. நாட்டின் ஜனத் தொகையுடன் ஒப்பிட்



தமிழ் கவர்னர்

இம்மாதம் 16-ம் தேதி மகாராஷ்டிர கவர்னர் பதவியை டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் நமது நாட்டு அரசியலில் நீண்ட காலம் பங்கெடுத்துக் கொண்டு வந்திருப்பவர். விளையாட்டு உலகத்தில் அவருக்கு நீண்ட நாட்களாகத் தொடர்பு உண்டு. யாருடனும் சரளமாகப் பழகக் கூடிய இனிய பண்புள்ளவர். ஆதலால் மகாராஷ்டிர மக்களின் உள்ளங்களை எளிதில் கவர்ந்து விடுவார் என்ற நம்பிக்கை உண்டாகிறது. அவரது பதவிக் காலத்தில் மகாராஷ்டிர மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் நல்லுறவு வளரும் என்று எதிர்பார்க்கிறோம்.

உங்கள் சருமம் மிருதுவாக, சுத்தமாக

புதுமலர்ச்சியோடு

விளங்க



டாடாவின்
ஓ டி கோலான்
சோப்



டுப் பார்த்தால் இவர்கள் எண்ணிக்கை மிகச் சிறிய பகுதியாகும்.

பெருவாரியான மக்கள் விலைவாசிகளின் உயர்வால் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் 'வாயில்லாப் பூச்சிகள்' என்ற கும்பலைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்காகப் பரிந்து பேசும் கமிட்டியோ, கமிஷனோ ஒன்றும் கிடையாது. முறையிட்டுக் கொள்ள இடமுமில்லை. அவர்களுக்கு மாதச் சம்பளமும் இல்லை. கிராக்கிப் படியும் இல்லை. பலருக்கு நிரந்தரமான வருமானமே இல்லை. தேசிய வருமானம், தலா வருமானம் என்று அதிகாரிகள் அளிக்கும் புள்ளி விவரங்கள்படி ஆண்டுக்கு 300 ரூபாய், அதாவது மாதம் 25 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் அவர்கள். விலை உயர்வுக்காக நிவாரணம் அளிக்கப்பட வேண்டுமானால், அதற்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவர்கள் இவர்களே. நமது காங்கிரஸின் சோஷலிஸ சமுதாயக் கோட்பாட்டில் 25 ரூபாய் மாத வருமானமுள்ளவர்கள்மீது வரி விதித்து, அந்த வருமானத்தைக் கொண்டு 300 ரூபாய் மாத வருமானம் உள்ளவர்களுக்குக் கிராக்கிப் படியிலுள்ள குறைவு ஈடுசெய்யப்படுகிறது. காங்கிரஸ் சோஷலிஸத்தின் நேர்த்தியே நேர்த்தி!

பம்பாயில் படத் திறப்பு விழா

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினர், புத்தாண்டு தினத்துக்கு முதல் நாள் மாலை தங்கள் சங்கக் கட்டடத்தில் அமரர் கல்கி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து ஒரு விழாக் கொண்டாடினர். பம்பாயில் ஐந்தாண்டு காலம் சிறப்பாகக் கவர்



னர் பதவி வகித்த ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் இப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் தமிழர்களின் அரிய கலைப் பண்பை வியந்து பாராட்டினார்.

மகாகவி ரவீந்திரர் போன்றவர்களின் மேதாவிலாசத்தை வங்காளியர்களும், இந்தியர்களும் மேனாட்டினர் கண்டு பாராட்டிய பின்பே உணரலாயினர். ஆனால் கல்கியின் மேதாவிலாசத்தை அந்நியர் வந்து பாராட்டும் வரை தமிழர்கள் காத்திருக்கவில்லை. தாங்களே உணர்ந்து கல்கியின் எழுத்துத் திறமையை எல்லோருக்கும் முன்னால் பாராட்டினார்கள். லட்சக்கணக்கான தமிழர்கள் அவர் எழுத்துக்களை ஆர்வத்தோடு வாரந்தோறும் வாசித்து மகிழ்ந்தார்கள். தமிழர்கள் இலக்கியத்தை ரசிக்கும் பண்பு அத்தகையது என்று வியந்து பாராட்டினார் ஸ்ரீ பிரகாசா.

இந்த இனிய விழாவில் ஸ்ரீ டி. வி. ராமானுஜம் கல்கியின் அரிய இலக்கிய, அரசியல் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்.

இந்த விழாவுக்கு எதிர்பாராத விதமாகச் செங்காவிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீட்சிதர் அவர்கள் விஜயம் செய்து தேனினும் இனிய உரை நிகழ்த்தினார். காந்தி மகான் காலமான போது கல்கி அவர்கள் எழுதிய, ''சத்தியம் செத்ததோ'' என்ற தலையங்கத்தை அவர் நினைவுறுத்திப் பேசியபோது அங்கு கூடியிருந்த தமிழர்கள் உள்ளம் எல்லாம் புல்லரித்து விட்டது. இந்த இனிய விழாவில், தற்சமயம் பம்பாய்வாசியாகி விட்ட, கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் புதல்வி ஸ்ரீமதி ஆனந்தி ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்களுக்கு மாலை அணிவித்துக் கௌரவித்தது மிகப் பொருத்தமாக இருந்தது.

கூட்டுப் பண்ணைக்குச் சாட்டை

முன்னாள் நிதிமந்திரியும், தற்போதைய டில்லி சர்வகலாசாலை உப அத்யட்சகருமான ஸ்ரீ தேஷ்முக் ''தனி மனிதனுக்கும் சொத்துக்கும் ஒட்டிய உறவும் உரிமையும் இல்லாத தொழில் முயற்சிகள் யாவும் முன்னேறுமல் தடைப்படுவதையே பார்க்கிறோம்'' என்றும் ''நாட்டிலுள்ள 3000 கூட்டு விவசாயப் பண்ணைகளில் நாற்பது சத விகிதம் நஷ்டத்தில் நடைபெற்று வருகின்றன; மேலும் நாற்பது சத விகிதம் மிகச் சொற்ப ஆதாயத்தில் நடைபெற்று வருகின்றன'' என்றும் கூறியிருக்கிறார். இதற்குமேல் நாம் சொல்ல என்ன இருக்கிறது?

அமெரிக்கத் தூதுவரின் அறிவுரைகள்

அமெரிக்கத் தூதர் கால்ப்ரெயித் இந்திய அரசாங்கத்தின் திட்டங்களைப் பற்றியும், அவை நிறைவேற்றப்படும் விதங்களைப் பற்றியும், ஏற்கனவே பல சமயங்களில் அரிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். சமீபத்தில் அவர் நிகழ்த்திய சில பிரசங்கங்களில் அவர் கூறியுள்ளவைகளில் சிந்தனைக்குரியவை வற்றைக் கீழே தருகிறோம்.

''பொருளாதாரத்தில் பின்தங்கிய ஓர் ஏழை நாட்டில் சேமிப்பு செய்வதும் மூலதனம் சேர்ப்பதும் மிகவும் கஷ்டமானவை. ஏனெனில் தற்போதைய தேவைகளே இங்கு மிக அதிகம். வசதியுள்ள சமூகத்தில் தான் சேமிப்பு செய்வது சுலபம்.

''அயல் நாட்டினர் அளிக்கும் உதவி எவ்வளவு தாராளமாக இருந்தாலும், எத்தனை பெருந்தன்மையுடன் அளிக்கப்பட்டாலும், ஒரு நாடு தன் சொந்த முயற்சியினால் சம்பாதிக்கும் நிதிக்குச் சமமாக ஆகாது. தன் முயற்சியினால் ஏற்படும் தன்னம்பிக்கைக்கும், சுதந்திர உணர்ச்சிக்கும் ஈடாக அது ஒரு போதும் ஆகாது.

''சில நாடுகளில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்ப யந்திர சாதனங்கள், அங்கே ஆள் பலம் குறைவாக இருந்த நிலைமையைச் சமாளிக்க ஏற்பட்டவை. வேலையில்லாத மக்கள் வேலை வாய்ப்புக்குக் காத்திருக்கும் பின்தங்கிய நாடுகளில், முன்னேற்ற நாடுகளில் உள்ள தொழில் நுட்ப யந்திரக் கருவிகளைக் கையாளுவது புத்திசாலித்தனமாகாது. உதாரணமாக, ஓர் ஆசிய நாட்டில், தானாக இயங்கும் விலையுயர்ந்த மின்சாரப் பொறியை ரயில்வே கதவுகளைச் சாத்தவும் திறக்கவும் அமைத்திருந்ததைக் கண்டேன். இந்த வேலைக்கு ஆள் கிடைக்காத நாடுகளில் இந்தச் சாதனத்தைக் கையாளுகிறார்கள். ஆசிய நாடுகளில் இதற்குப் பல ஆட்கள் தயாராக இருக்கையில், இம்மாதிரி சாதனங்களை அமைப்பது வேலையில்லாக் கொடுமையைத் தான் பெருக்கும். எந்த அம்சங்களைக் 'காப்பி' அடிப்பது, எதைத் தவிர்ப்பது என்ற விவேகத்துடன் திட்டங்கள் அமுல் நடத்தப்பட வேண்டும்.''

<u>அட்டைப்பட விளக்கம்</u>

நினைத்ததும் நனைத்ததும்

நீராடி மகிழுகின்றார்
நேரத்தை மறந்துவிட்டார்!
ஊரார்கண் டென்பதையும்
உணர்விழந்து விட்டார்கள்!

சித்திரை மாதத்தைத்தான் வஸந்த காலம் என்பார்கள். இந்த வஸந்த காலத்தில் சர்வ சாதாரணமாகக் கிராமப்புறங்களில் காணக் கூடிய ஓர் அரிய காட்சியை வண்ண ஓவியமாகத் தருகிறார் ஓவியர் இவ்விதழ் அட்டையில்.

''இரவெல்லாம் உங்களையே நினைத்துக்கொண்டு இருந்தேன்'' என்றாள் அவள்.


''அப்படியானால் இப்பொழுது நான் கொஞ்சம் நனைக்கட்டுமா?'' என்றான் அவன்.

ஆம், காதலர்கள் தனி இடத்தில் சந்தித்தால் என்னவெல்லாம் பேசுவார்கள் என்பதனை யாரால் ஊகிக்க முடியும்?

வஸந்த காலம் காதலர்கள் மிக விரும்பிப் பொழுதைப் பல வகையில் கழிக்கும் காலம். அதிலும் ஜலக்கிரீடையில் அவர்கள் அடையும் இன்பம் இவ்வளவு அவ்வளவல்ல.

கண்ணனும் கோபியர்களும் ஜலக்கிரீடை செய்து மகிழ்ந்ததை எவ்வளவு மகான்கள் பாடிப் பரவசமாகி யிருக்கிறார்கள்!

கவுரவத்தை கொடுக்கக் கூடிய துணிகள் —





டெட்டினுல் சலவை செய்யப்பட்டதே

- டெட்டினுல் சலவை செய்யப்பட்ட துணிகள் பிரகாசமாகத் தோற்றமளிக்கும்.

  டெட்டின் சிறந்த சுத்திகரிப்புச் சலவை உங்களுடைய ஆடைகளைப் புத்தம்புதியதுபோல் பிரகாசிக்கச்செய்கிறது.

- டெட்டினுல் சலவை செய்யப்பட்ட துணிகள் மிக வெண்மையாகத் தோற்றமளிக்கும்.

  டெட் ஆடைகளைச் சுத்தமாகவும், பிரகாசமாகவும் வெளுக்கும் சிறந்த பரிசுத்தகாரணி. டெட்டினுல் துவைக்கப்பட்ட துணிகளுடன் நீலத்தையோ அல்லது வெண்மையாக்கும் பொருளையோ சேர்க்கவேண்டிய தேவையில்லை. காரணம் கண்கவரும் வெண்மையைத்தரும் பொருள் டெட்டில் அடங்கியுள்ளது.


- டெட்டினுல் சலவை செய்தல் என்பது நவீன முறையில் சலவை செய்யப்படுவது என்பது பொருள்.

  வெந்நீரிலும், மென்னீரிலும் டெட்டை உபயோகித்து நன்கு சலவை செய்யலாம். டெட் அபரிமிதமாக நுரை தருகிறது. காட்டன், ஸில்க், ரேயான், கம்பளி வெல்லே அல்லது கலர்த்துணிகள்—எல்லாவிதமான ஆடைகளுக்கும் டெட்டைத் தாராளமாக உபயோகிக்கலாம்.

டெட் வெண்மையாகவும் பளபளப்புடனும் சலவை செய்கிறது.

Shilpi Sem 21 TAM

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்—1.



காணமல் போன கழுதங்கள்

'கொக்கி'

பெரியார் ஈ. வே. ரா. வுக்கு ஒரு கொச்சைத் தமிழன் எழுதிப்போட்டது.

நாட்டிலே எல்லோரும் பண்டங்களின் விலைவாசி ஏகமாக ஏறிப் போச்சுது: நாளுக்கு நாள் இன்னும் ஏறிட்டே போவுதுன்னு கதறிட்டு வரும் போது நீங்க, கும்பகோணம் கூட்டம் ஒன்றிலே இதைப் பற்றி உங்க அபூர்வமான கருத்தைச் சொல்லிட்டீங்க.

''விலைவாசி ஏறிப் போச்சுன்னு சில பேர் கத்தறாங்க. ஆனால், விலை ஏற்றத்தால் ஒன்னும் கெடுதல் ஏற்பட்டுப் போகல்லே. ஜனங்க என்ன வெலையானாலும் சாமான்களை வாங்கத் தயங்கல்லே. அவங்க ஒன்னும் கஷ்டப்பட்டுப் போகவில்லை'' என்று நீங்க கருத்து வெளியிட்டதைத்தான் கூறுகிறேன். ஆக பத்திரியிலிருந்து வெளிவந்த பிறகு நீங்க பேசின முதல் கூட்டம் இதுதான்னு நினைக்கிறேன். இது எப்படி வேறு மாறுனாலும் இருந்துட்டுப் போகட்டும்.

விலைவாசி உயர்வது நியாயம்தான்னு நீங்க கருத்து வெளியிட்டதுபோல் இந்தியாவிலேயே யாருமே வெளியிட்டதில்லை. இது ஓர் அபூர்வமான வாதம் தான். ''விலைவாசியைக் குறைக்காதே. உயர்த்து'' என்று சொல்லி நீங்க ஓர் இயக்கம் ஆரம்பித்தால் கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன். ''விலையை உயர்த்து'' என்று ஊர்வலங்கள் நடத்தலாம். கூட்டங்கள் போடலாம். இப்படி எவ்வளவோ வழிகளில் இந்த இயக்கத்தை ஆரம்பிக்கலாம். அல்லது நியாய விலைக் கடைகள் வைப்பதுபோல், அதிக விலைக் கடைகளையும், அநியாய விலை ஷாப்புகளையும், நீங்கள் அங்கங்கே திறந்து வைக்கலாம். ஜனங்கள்தான் விலைவாசி உயர்வை ஆதரிப்பதாகக் கருத்து வெளியிட்டிருக்கிறீர்களே. ''அதிக விலை''க் கடைகள் ஆரம்பித்து வைத்தால் நிச்சயம் அங்கு கூட்டம் அதிகமாக வரும். அவர்கள் பண்டம் வாங்குவார்களா என்பது முக்கியமல்ல. ஒன்றுமட்டும் நீங்கள் சிந்தித்தால் நல்லது. இம்மாதிரி அதிக விலைக் கடைகளை ஆரம்பித்தால், இந்தத் தேர்தலில் தங்களுடைய ஆதரவு பெற்று நின்றவர்கள் வெற்றிக்கு மிக மிக அதிக விலை கொடுக்க வேண்டியிருந்தது. அடுத்த தேர்தலில் இவர்கள் இன்னும் அதிகமாக விலை கொடுக்க வேண்டி யிருக்குமே? ''கொடுக்கட்டுமே அதிக விலை'' என்கிறீர்களோ? ஆமாம், தங்களுடைய யோசனையும் விலைவாசிகள் உயர்ந்திருக்க வேண்டும் என்பது தானே!

— ஒரு கொச்சைத் தமிழன்

ஒரு — பைசாவை ஒழித்துவிட முன் வந்த காங்கிரஸ் சர்க்காருக்கு ஓர் ஓட்டாண்டியார் எழுதிக் கொண்டது.

மகராஜன் காங்கிரஸ் சர்க்கார் நன்றாக இருக்க வேண்டும். இந்த ஒரு நயா பைசா நாணயத்தை ஒழித்துவிட முன் வந்த புண்ணியம் ஒன்றே உங்களைக் கடைத்தேற்றப் போதும். நாலைஞ்சு வருசங்களாக, இந்த ஒரு நயாபைசா காசு வந்ததிலிருந்து எங்கள் பிழைப்பே பாழாகிவிட்டது. அதற்கு முன்னெல்லாம் கோவில் வாசலில் போய் அமர்ந்தால்—பெரிய காசுகள் போட்டு வந்தாங்க. நயா பைசாவைக் கொண்டு வந்ததும், வந்தது ஆபத்து. எங்க திருவோடுகளிலே இந்த அற்பக் காசுகள் விழ ஆரம்பித்தன. ஒரு ரூபாயை நயா பைசாவாக்கி நூறு பேருக்குத் தருமம் செய்து விட்டதாகத் திருப்திப்பட ஆரம்பிச்சுட்டாங்க பக்தர்கள். ஒரு வழியா இதை ஒழிக்கப் போட முன்வந்தீர்களே, இப்பவாவது. நீங்கதான் நிஜமான புண்ணியவான்கள், சாமி பக்தர்கள்!

''நாட்டிலே தாமிரத் தகடு பஞ்சமாயிட்டது. வெளி நாடுகளிலே கேட்டா விலை அதிகம் சொல்றாங்க. விலை பரவாயில்லே, கொடுங்கன்னு கடனுக்குக் கொடுக்க மாட்டேங்கிறாங்க. இதனாலேயே இந்த நயா காசுகளை ஒழிச்சுடப் போறோம்'' என்று நீங்க காரணம் சொல்வதைப் பார்த்து எனக்கு மிகவும் துக்கமே மேலிட்டு விட்டது. புண்ணியவான்களாகிய உங்க நிலைமை இப்படியா ஆக வேண்டும்; எந்தெந்த நாடுகள் தாமிரம் கொடுக்க மறுக்கின்றன? என்னை வேணுமானால் அங்கு அனுப்பிச்சுவையுங்கள். என் திருவோட்டிலே ஏதாவது தாமிரத் துணுக்கு விழுமானால் வாங்கிக்கொண்டு வந்து தருகிறேன். இதற்காக நீங்கள் எனக்கு ஒரு செப்புக் காசுகூடக் கொடுக்க வேண்டாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

— ஓர் ஓட்டாண்டியார்

குறிப்பு: உங்களுக்கு ஓட்டுப் போட்ட ஆண்டியல்ல!

ஜாலக் ஜம்பு

எஸ். பெருமாள்

உத்தியோகக் காரணமாக மனைவி மக்களைப் பிரிந்து ஆறுமாதம் நான் மட்டும் சென்னையில் வசிக்க நேர்ந்தது.

பஸ்ஸுக்கும், சாப்பாட்டுக்கும் வசதியாக மயிலாப்பூரில் குளத்தருகே வீடெடுத்துக் கொண்டேன்.

சென்னை மண்ணை மிதித்த மூன்றும் நான் லஸ் முனைக்கும் மயிலை குளத்துக்குமாகச் செல்லும் ராமகிருஷ்ண மடம் சாலையில் சென்று கொண்டிருந்தேன். கூவம் நதியின் தென் கரையில் ஆண்களும் பெண்களுமாகக் குழுமி நிற்பதைக் கண்டேன். மனத்தை மயக்கும் மாலைப் பொழுது.

''எங்கே சின்னப் பசங்கள்ளாம் ஜோரா ஒரு தடவை கைதட்டுங்க, பார்க்கலாம்...''

கணீரென்று, கூட்டத்தின் அமைதியின் மையைக் கிழித்துக் கொண்டு என் காதில் பாய்ந்தன அவ்வார்த்தைகள்.

ஜனங்களின் பொழுதையும், பணத்தையும் கண்முன்னே பறிக்கும் ஜாலவித்தைக்காரனின் குரல் அது என்பதை நொடியில் உணர்ந்து கொண்டேன். கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு நுழைந்து முன்னால் வந்து நின்றேன்.

நல்ல கட்டுமஸ்தான உடல் அவனுக்கு. சில வருடங்களாகத் தன்னை விட்டுப் பிரிய மனமில்லாத பழைய கால்சராய் அணிந்திருந்தான். சட்டையும் அப்படியே. முறுக்குமீசை, அலையக் குலைய விழுந்து புரளும் அடர்ந்த கேசம். பாக்கெட்டுக்கு ஒன்று வீதம் நாலைந்து கர்சிப்புகள். எந்த நேரமும் அறுந்து விடுவேன் என்று பயமுறுத்தும் சப்பல்லை இழுத்துப் பிணைத்து அணிந்திருந்தான். எண்ணெயையும் சீப்பையும் எப்போதாவது கண்டு மகிழும் தலை.

இவன்தான் ஜாலவித்தை ஜம்புலிங்கம். (ஆமாம்! அந்த வித்தைக்காரனின் பெயர் ஜம்புலிங்கம் என்றுதான் சொன்னார்கள்.)

மீண்டும் ஒரு முறை தன் வெண்கலத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''எங்கே சின்னப் பசங்கள்ளாம் ஜோரா ஒரு தடவை....'' என்று ஆரம்பித்தான். அவன் கூறி முடிப்பதற்குள் படபடவென்று கைதட்டல்கள் கலகலத்தன.

''அதானே கேட்டேன். எங்க அக்கா தங்கச்சிக பெத்த புள்ளைகளெல்லாம் சோடை போனதாவா இருக்கும் மருமகப் பசங்களா.. இன்னொரு தடவை.....''

இந்தத் தடவை பெரியவர்களும் கைதட்டி உற்சாகப்படுத்தினார்கள் அவனை.

தொழில் முறைப்படி, சிறிது நேரம் மாங் கொட்டையை மாமரமாக வளர்த்துக் காட்டுவதாகக் கூறினான். பெட்டிக்குள் வைத்த பர்ஸைக் காணாமற் போகச் செய்து கூடைக்குள்ளிருந்து எடுத்தான். பிறகு உண்மையாகவே தன் உடல் உழைப்பைக் காண்பித்தான். எலும்பற்ற ரப்பர் வளையம் போல் ஒரே வட்டமாகத் தன் உடம்பைச் சுருட்டினான். இரும்பு வளையங்களுக்குள் தலையைக் கொடுத்து உடம்பில் சுழற்றிக் கால் வழியாக எடுத்தான். கைகளிரண்டையும் பின்னால் கட்டி, தரையில் ஊன்றிக் கொண்டு மல்லாந்து படுத்து அப்படியே கரணம் அடித்தான். அப்பப்பா...இந்தக் காட்சிகளைச் சர்க்கஸில் போய்ப் பார்ப்பதற்கு இரண்டு ரூபாய் நான்கு ரூபாய் வரை செலவாகும். இவனோ நடுத்தெருவில் இரண்டணா நாலணாவுக்காகத் தினமும் தன்னைத் துன்புறுத்திக் கொள்கிறான்.

அவனுக்கு முன்னால் விரிக்கப்பட்டிருந்த துண்டில் பொல பொலவெனக் காசு மாரி பொழிந்தார்கள். இரண்டு மூன்று ரூபாய்களுக்குக் குறைவில்லை.

வெறும் உடலை மட்டும் முறுக்கி மகிழ்விக்காமல், வார்த்தைக்கு வார்த்தை நகைச் சுவையை அள்ளித் தெளித்தான். அவனது சரம் கோர்த்த ஹாஸ்யப் பேச்சுக்களுக்காகவாவது அங்கு தினம் கூட்டம் கூடும்.

முதல் நாள்...மறு நாள்....மூன்றும் நாள் அடுத்த நாள்....அடுத்த வாரம்....அடுத்த மாதம்...அடேயப்பா! தொடர்ந்து இரண்டு மாதங்களாக நானும் அவனைக் கவனிக்கிறேன். ஜால வித்தை ஜம்புலிங்கத்தைக் காணும் போதெல்லாம் ஏனோ என் உள்ளத்தில், என் உறவினரின் அறிவுரை ஒலித்த வண்ணம் இருக்கும்.

மூன்றும் தர வாழ்க்கையிலும் உயர்தர எண்ணங்களின் நடுவே வாழ்பவனா அவன்? இருக்கலாம்.

உறுதியான உடலானாலும், மென்மையான உள்ளம் கொண்டவன் அவன்.

பெரியவர்கள் காசு போடும் போது, கூட்டத்திலுள்ள சிறுவர்களும் மிட்டாய் வாங்கிச் சாப்பிட வைத்திருக்கும் காசை அவன் துண்டில் போடப் போனால், ஜம்புவுக்குப் பிரமாத கோபம் வந்து விடும். ''கம்மா சின்னப் பசங்கள்ளாம் சிரிக்கணும்ங்கறதுக்காக நான் உங்களையெல்லாம் இங்க நிக்க வைக்கிறது. பெரியவங்க காசு போடட்டும். ஆனா நீங்க போடக் கூடாது. போய் மிட்டாய் வாங்கித் தின்னுங்கடா மருமகப் பசங்களா. ஒங்களிலே யாரிட்டயாச்சும் காசு இல்லாட்டா எங்கிட்டே கேளுங்க...... நான் மிட்டாய் வாங்கித் தரேன்....'' என்பான்.

சொன்னதைக் காற்றில் பறக்க விட்டு விடாமல், அன்றைய வருமானத்தில் குழந்தைகளுக்கு மிட்டாய் வாங்கி வழங்குவான்.

ஜாலக் ஜம்பு அன்றாடத் தேவைக்கு வேண்டிய வரை பணம் சேர்ப்பான். அதன் பின்னர் துண்டை மூட்டை கட்டி விடுவான்.

''இன்னிக்குச் செத்தா நாளைக்கு ரெண்டாம் நாளு. எனக்கப்புறம் இந்த இரும்பு வளையத்தையும் பிரம்புக் கூடையையும் எச்சி மாங் கொட்டையையும் எவன் தொடப் போறான்?

இருக்கிற வரைக்கும் ஜமாய்டா ராஜா'' என்று கூறிக் கொண்டே எதிரே இருக்கும் மிலிடெரி ஓட்டலைத் தஞ்சம் புகுவான்.

திடீரென்று எனக்கு என் மனைவி குழந்தைகளின் நினைவு வந்தது. ஒருமாதம் லீவு போட்டேன். ஊரோடு இருந்துவிட்டு, குடும்பத்தைச் சென்னைக்கே அழைத்து வரும் எண்ணத்துடன் திருச்சி சென்றேன்.

குடும்பத்துடன் சென்னை வந்து இரண்டு நாட்கள் நகர்ந்தன. அன்று ஆபீஸிலிருந்து திரும்பும் போது, பழக்கம் காரணமாக ஜம்பு இருக்கும் இடத்தை நோக்கி என் பார்வை பதிந்தது. என் கால்கள் தயங்கின. அந்த இடத்தில் கூட்டத்தையோ ஜம்புவையோ, காணாமல் திகைத்தேன். அன்று மட்டுமல்ல, மறுநாளும், அதற்கு மறுநாளும் தவறாமல் அந்த இடத்துக்குச் சென்று பார்த்தேன்.

ஜாலக் ஜம்புவைக் காணோம்!

எங்கே போனான்?

என்ன ஆனான்?

எதிரே இருந்த மிலிடெரி ஹோட்டலில் விசாரித்தேன். இருபது இருபத்தைந்து நாட்களாக அவனைக் காணோம் என்ற தகவலைத் தவிர வேறெதுவும் இல்லை.

ஒரு மாதத்துக்கும் மேலாக, தினமும் ஆபீஸிலிருந்து வரும் போதும், ஜம்பு இருந்த இடத்தைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்ட வண்ணம் இருந்தேன்.

நான்கு நாட்கள் ஆபீஸ் விஷயமாகத் திருச்சி சென்று வரவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. தட்டாமல் அதை ஏற்றுக் கொண்டேன். ஜம்புவின் ஞாபகம் சற்றே குறையுமல்லவா?

ஒன்பது மணிக்கு வண்டியென்றாலும் நான் முன்கூட்டியே சென்று விட்டேன் ஸ்டேஷனுக்கு. ரயில்வே ஸ்டேஷனில் இரண்டு மணி நேரம் இருந்தால், அங்கு நிகழும் சம்பவங்களைக் காண நேர்ந்து, அது பின்னர் எழுதும் கதைகளில் இடம் பெறலாம் அல்லவா? வீட்டுக்குள் அடைபட்டுக் கிடப்பதைத் தவிர, இப்படி வெளியுலகில் சுற்றித் திரிந்தால் அது என்போன்றவர்களுக்கு மிகவும் நல்லதல்லவா?

ஆயிரம் அலுவல்களுக்கிடையே வெளியூர் செல்பவர்களும், வெளியூர் செல்வதையே அலுவலாகக் கொண்டவர்களுமாக எழும்பூர் ரயிலடி நிரம்பி வழிந்தது.

''ஸார்....கூலி!'' என்னும் குரல் கேட்டுத் திடுக்கிட்டேன்.

ஆம்....அந்தக் குரல்...?

"எங்கே சின்னப் பசங்களெல்லாம்..' என்று கணீரென்று தன் குரலால் கூட்டத்தைக் கலகலப்படுத்தும் ஜாலக் ஜம்புவின் அதே குரல்!

என்னை ஒரு நொடியில் அடையாளம் கண்டு கொண்டான் ஜம்பு.

''சார் வணக்கம்...''

நான் வியப்பு மேலிட்டால், ''என்னப்பா ஜாலக் ஜம்பு...'' என்றேன்.

''சார், இன்னொரு தடவை ஜாலக் ஜம்பு என்று சொல்லாதீர்கள் சார். நான் அந்தத் தொழிலை விட்டு ரெண்டு மாசம் ஆச்சுங்க.. கொண்டாங்க இப்படிப் பையை. நான் தூக்கிட்டு வர்றேன்'' என்றவன் பையை என் கையிலிருந்து வாங்கிக் கொண்டான்.

''எந்த வண்டிங்க?''

''முதல் பிளாட்பாரம் போ. சேர்கார் கம்பார்ட்மெண்ட்.''

அவன் தூக்கி வந்த சுமை நாலணா கொடுப்பது கூட அதிகம்தான். ஆனால் ஒரு ரூபாய் நோட்டை நீட்டினேன்.

''சில்லறை மாத்திட்டு வரேன்...''

''வேண்டாம் ஜம்பு. உனக்குத்தான் ஒரு ரூபாய்...''

''இந்தப் பை தூக்கினத்துக்கா ஒரு ரூபாய்? என்ன சார் நீங்க இரண்டணா நாலணா தர்றதே அதிகம். ஒரு ரூபாய் தர்றீங்களே சார்?...'' என்றான் ஜம்பு.

பழைய பாவத்துக்காக அப்படிச் சொன்னானோ என்னவோ! ஒரு ரூபாயை ஏற்றுக் கொள்ள மறுத்தவனை, கட்டாயப்படுத்தி, எடுத்துக் கொள்ளச் சொன்னேன். மணி ஏழு. இன்னும் கொஞ்ச நேரத்துக்கு ரயில் போக்குவரத்து ஏதும் இல்லை. சாவகாசமாக அவனுடன் அரட்டை அடிக்க ஆரம்பித்தேன். அவன் ஏன் கூலியாளாக வந்தான் என்பதை அவன் வாய் வழியே வரவழைக்க எண்ணினேன்.

''நீ ஏன் ஜம்பு கூலியாளாக மாறினே?''




''சொல்றேன் சார்....''

காதைத் தீட்டிக் கொண்டு கதையைக் கவனித்தேன். ஆமாம், அவன் கூறி வந்தது நிஜ வாழ்க்கை மாதிரியாகவா இருந்தது? நெஞ்சில் ஈர உணர்ச்சி கொண்ட ஒவ்வொருவரையும் உலுக்கக்கூடிய சம்பவந்தான் அவன் வாழ்வில் இடம் பெற்றிருந்தது.

ஃ ஃ ஃ

என்றும்போல் அன்றும் ஜாலக் ஜம்புவின் ஹாஸ்யப் பேச்சுக்களுக்காகக் கூட்டம் நிறைந்திருந்தது. சிறியவர்கள், பெண்கள், பெரியவர்கள் இப்படிப் பலர் தத்தம் வேலைகளையும் மறந்து ஜம்புவை — அவன் பேச்சை—



டாக்டர்: இது என்ன அதிசயமா இருக்கே? இரண்டு பேருக்கும் ஒரே சமயத்திலே ஒரே இடத்தில் புடைத்திருக்கிறதே?

மற்றவர்: அவர்கள் எதிரும் புதிருமாக வரும்போது ஒரு பத்து ரூபாய் நோட்டு கீழே கிடந்ததாம். அதை எடுப்பதற்கு அவசரமாக இரண்டு பேரும் குனிந்தார்களாம்!

வௌவாலுக்கு இடம் கொடுத்தால்?



அவன் செய்கையை — உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

கூட்டத்தில் ஒரு பையனின் பேனாவை வாங்கி, தரை மீது வைத்துக் கூடையைப் போட்டு மூடினான். என்னென்னவோ வாய்க்குள் முணுமுணுத்தான். மறு விநாடி தன்னுடைய தகரப் பெட்டியைத் திறந்தான்.

அந்தப் பேனா அங்கு எப்படி வந்தது? கண் கட்டு வித்தையோ கைகட்டு வித்தையோ ஜம்புவின் வித்தைகளை ரசிக்கக் கூட்டத்துக்குக் குறைவில்லை. அநேக பொருள்களைக் காணாமற் போகச் செய்து கண்டுபிடித்துக் கொடுத்தான் ஜம்பு. எல்லாம் வேடிக்கையாக விளையாட்டாகச் செய்து கொண்டிருந்தான். செய்த வழிமுறைகளை தனக்கே உரித்தான வாய்ஜால பாணியில் விவரித்து விஸ்தரித்துச் சொல்லிக் கொண்டுமிருந்தான்.

விரித்துக் கிடந்த துண்டின் மேல் நாணயங்கள் விழ ஆரம்பித்தன. சிறிது நேரத்துக்குள் தனக்கு அன்றையத் தேவைக்குப் பணம் சேர்ந்தவுடன் துண்டை எடுத்து விட்டான். கூட்டம் கலைந்தது. ஜம்புவுக்கு நாலணா இரண்டணா தர்மம் செய்வதில் சினிமாவுக்குச் சென்று வந்த சந்தோஷத்தைத் தேடிக் கொள்பவர்கள் உண்டு. வயிறு புடைக்கத் தின்று வந்து பசியைப் போக்கிக் கொண்ட உணர்வைப் பெற்றவர்கள் உண்டு.

கோவிலுக்குப் போய் வந்த புண்ணியத்தைப் பெற்று விட்டதாக எண்ணுபவர்களும் உண்டு. ஜம்பு அவர்களைக் கண நேரம் மகிழ்வித்தான். அவர்களோ அவனைக் காலமெல்லாம் வாழ வைத்தார்கள்.

எல்லோரும் போன பின் ஜம்பு தன் உடைமைகளைச் சுருட்டி ஒன்றாகக் கட்டிக் கொண்டிருந்தான். தன்னெதிரே நிழலாடுவதைக் கண்டு தலை நிமிர்ந்து பார்த்தவன் ஆறு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் நிற்பதைக் கண்டான். அந்தப் பையனின் கண்களிலே கண்ணீர் கரை கட்டியிருந்தது. அதையும் மீறி ஆவல் மிதப்பது தெரிந்தது.

ஜம்புவிடம் ஏதோ கேட்கத் துடித்துக் கொண்டிருந்தான் சிறுவன். ஜம்பு சாமான்களை அப்படியே போட்டு விட்டு அவனை நெருங்கி வந்தான்.

''என்ன வேணும் தொரை?'' என்று இரக்கம் பெருக்கெடுக்கும் குரலில் கேட்டான் ஜாலக் ஜம்பு.

குழந்தையின் உதடு துடித்தது. அந்தத் துடிப்பினூடே வார்த்தைகள் வெளி வந்தன.

''நீ....நீ...காணாமப் போன எல்லாத்தையும் கண்டு பிடிக்கக் கொடுப்பியா?''

''ஏன்...என்ன வேணும் உனக்கு?''

''சொல்லு...நிச்சயமா கண்டு பிடிக்கக் கொடுப்பியா?''

ஜம்பு ஊகித்துக் கொண்டான். அந்தப் பையன் சிலேட்டுப் பலகை அல்லது புஸ்தகம் எதையாவது தொலைத்து விட்டிருப்பான், வீட்டுக்குத் தெரிந்தால் கோபிப்பார்களே என்று பயப்படுகிறான் போலும். காணாமற் போனதைக் கண்டுபிடித்துத் தருவதாக ஜாலவித்தை செய்யும்போது கூறியிருக்கும் தன்னை அந்தச் சிறுவன் தேடி வந்ததை எண்ணி மலைத்தான் ஜம்பு. தானே அவன்

மனத்தில் வளர்த்து விட்ட நம்பிக்கையைத் தகர்க்க விரும்பவில்லை.

"கண்டிப்பா கண்டு பிடிச்சுத் தருவேன் குழந்தை....."

அன்றைய வருமானத்தில் சிலேட்டுப் பலகையோ புத்தகமோ குழந்தை எதைத் தொலைத்தானோ அதை புதிதாகவே வாங்கித் தந்து விடலாம் என்று எண்ணினான் ஜம்பு. இரக்க மனம் கொண்டவன் அவன்.

"நீ கண்டுபிடிச்சுத் தந்திடுவியா?"

மீண்டும் மீண்டும் அந்தச் சிறுவன் அதையே கேட்டானே தவிர எது காணமற் போய் விட்டது என்பதைக் கூறவில்லை அவன்.

"சிலேட்டுப் பலகையைக் காணேமா...? வா. உன் சிலேட்டுப் பலகையைப் புதிதாகவே கண்டு பிடிச்சுத் தரேன். கண்டிப்பா கண்டு பிடிச்சுத் தரேன்...."

'கட்டாயமா கண்டு பிடிச்சுத் தரேன்' என்ற ஜம்புவின் வார்த்தைகள் சிறுவனுக்கு ஊக்கம் தந்தன. தன் நம்பிக்கை தளராது. ஜம்பு தளரவிட மாட்டான் என எண்ணினான். அவனது முகம் பயம் நீங்கி மலர்ந்தது. ஆனாலும் முகத்தில் தயக்கம் தேங்கிக் கிடந்தது.

"சிலேட்டுப் பலகையுமில்லே...புஸ்தகமுமில்லே...."

"பின்னே என்னது?"

"வந்து....வந்து....."

"சொல்லு கண்ணு...."

"கட்டாயமா கண்டு பிடிச்சுத் தருவியா?"

"அடடா. நம்ப மாட்டேங்கறியே..நிச்சயமாக் கண்டு பிடிச்சுத் தரேன்!"

"வந்து வந்து...."

இருள் கவிந்த நேரத்தில் சாலையை விட்டுச் சற்றே தள்ளியிருந்த இடத்தில் ஜம்புவும், ஆறு வயதுச் சிறுவனும் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தனர். கன்னங்களில் கண்ணீர் உருண்டு வழியத் தயங்கித் தயங்கி நின்ற அச்சிறுவனை எப்படிச் சமாதானப் படுத்துவதென்றே புரியவில்லை. அவனிடமிருந்த காணமற்போன பொருள்தான் என்ன?

"ம்.....வந்து...."

"சொல்லுடா ராஜா. தைரியமாச் சொல்லு. நான் நிச்சயமா கண்டுபிடிச்சுக் கொடுப்பேன்."

"வந்து....வந்து....எங்க அப்பா...."

"என்னது....?"

ஜம்புவின் வார்த்தைகள் ஏனோ தடுமாறித் தத்தளித்தன.

"எங்க அப்பா...."

"உங்க அப்பா?...."

"ஆமா. எங்கப்பா தான்."

அதற்கு மேல் சிறுவனால் ஏதும் கூற முடியாமல் போகவே, முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு 'ஓ'வென அழுது விட்டான்.

"எத்தனை நாட்களா காணேம் தம்பி?"

"ரொம்ப நாட்களாவே காணேம். 'அப்பா எங்கேம்மா?' என்று அம்மாவைக் கேட்டா, 'காணமப் போயிட்டா........சீக்கிரம் வந்துடுவா!' அப்படின்னு சொல்லு. ஆனா அப்பா தான் வரவே மாட்டேங்கறு...."

"உன் அப்பா எப்படி இருப்பார் கண்ணு?"

"ஒல்லியா நெட்டையா சிவப்பா இருப்பார். சுருட்டை சுருட்டையா அவருக்கு முடி இருக்கும்....."

"உன் வீடு எங்கே...?"

"அதோ. அந்த வல் பழக்கடை யெல்லாம் தாண்டி...." எனச் சுட்டிக் காண்பித்தான்.

தானே அவன் மனத்தில் இத்தனை நேரமாக வளர்த்து விட்ட நம்பிக்கையை எப்படி வேருடன் பிடுங்கி யெறிவது எனத் திகைத்துத் திணறினன்.

இதற்குள் ஒரு பெண் பாலத்தைக் கடந்து வந்து கொண்டிருந்தாள். அவள் பார்வையை இருபுறமும் பதற்றத்துடன் சுழலவிட்டுக் கொண்டு வருவதிலிருந்து யாரையோ தேடி வருகிறள் என்பது உறுதியாயிற்று.

ஜம்புவின் அருகில் தன் குழந்தை நிற்பதைப் பார்த்துப்பதறி ஓடி வந்து. "எத்தனை நாழிடா கண்ணு?" என்று ஒரு கணம் எரிட்டு நோக்கினுள். அவனது தோற்றத்தையும் அவனைச் சுற்றியிருந்த பொருள்களையும் பார்த்துவிட்டு, "நீதான் அந்த வித்தைக்காரனு? கண்ணன் தினமும் சொல்லுவானே...." என்றுள்.

"ஆமாம் தாயே..." என்ற ஜம்பு, விளக்கு வெளிச்சத்திலே அவளை ஒரு தடவை கூர்ந்து கவனித்தான்.

மறுவிநாடி ஜம்புவின் முகம் வெளிறியது.

குழந்தை, தன் தகப்பன் காணமற் போய் விட்டார் என்றதே, அந்தக் காணமற் போன




பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் வனிதைக்கு ஒரு பெயரை அளித்து

ஒரு சிறந்த பரிசைப் பெறுங்கள்!



அவள் யார்? அவளுடைய பெயர் என்ன?
அவள், ஏற்கனவே, **பாண்ட்ஸ்** ட்ரீம்ப்ளவர் விளம்பரங்கள்
மூலம், உங்களுக்குப் பரிச்சயமானவள் தான்! பெயரா?
நீங்கள் தான் அவளுக்கு ஒரு பொருத்தமான பெயரை
அளியுங்களேன்! இன்றே ஒரு பெயரைத் தேர்ந்தெடுங்கள்—
இந்தப் பரிசுகளில் ஒன்றை நீங்கள்
பெறக்கூடும்!




1ம் பரிசு:
லாம்ப்ரெட்டா ஸ்கூட்டர்



2ம் பரிசு:
7-வால்வ் பிலிப்ஸ்
ரேடியோ



3ம் பரிசு:
ஒமேகா தங்க
கைக் கெடியாரம்



4ம் பரிசு:
கோத்ரெஜ்
'ஸ்டோர்வெல்' பீரோ



5ம் பரிசு:
ஹெர்குலிஸ்
சைக்கிள்



மற்றும், பரிசுப் பத்திரங்களாக இதர 100 பரிசுகள்!

விதிகளும் கூபன்களும் உங்களுக்கருகில் உள்ள பாண்ட்ஸ் வியாபாரியிடமிருந்தோ அல்லது கீழ்க்கண்ட விலாசத்திலிருந்தோ பெறலாம்:

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
தபால் பெட்டி 1012, பம்பாய் 1

சேரக் கடைசி தேதி 8 - 5 - 1962

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)


தகப்பன் எங்கே போயிருக்கிறான் என்பது தெரிந்து விட்டது.

சுமங்கலித் தன்மையை எடுத்துக் காட்டும் நெற்றித் திலகமிழந்தவள் அந்தப் பெண். மங்கையருக்கே உரித்தான மலரும் மஞ்சளும். குங்குமமும் அவளுக்கு உதவாதவை!

அவள்...விதவை!


குழந்தை கண்ணன் "அம்மா....இந்த ஆள் காணாமப் போன எல்லாத்தையும் கண்டு பிடிக்கக் கொடுப்பாம்மா......இப்பக்கூட நானே பார்த்தேன். அம்மா. அப்பாகூட 'காணாமப் போயிட்டார்'ம்பியே அம்மா. இந்த ஆள்கிட்டே நீயும் ஒரு தடவை சொல்லும்மா. கட்டாயமா கண்டுபிடிச்சுத் தரு வாம்'மா. சொல்லும்மா. அப்பா சீக்கிரம் வரணும் அம்மா...."என்றான்

"கண்ணா..!" அந்தப் பெண் குலுங்கினாள். அவள் உள்ளத்து வேதனையை யெல்லாம் கண்ணனின் வார்த்தைகள் கிளறி விட்டு



"நீங்கள் எழுத்தாளரானதற்கு ஏதாவது காரணம் உண்டா?"

"உண்டு. இங்கியும் பேனாவும் சீப்பாகக்கிடைத்ததுதான் காரணம்!"



அடப் பிராரப்தமே! நாம் நல்லா பொய் நோட்டு அச்சடித்து வாழ்ந் தோம்! எந்த நூறு ரூபாய் நோட்டை ஆதாரமாக வைத்துக் காப்பியடித் துக் கோடிக்கணக்கான நோட்டுக்களை அச்சடித்தோமே, அந்த நோட்டே பொய் நோட்டு !!!

விட்டன. கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வழிந்தது. அந்தக் குழந்தையின் கேள்விக்கு அவளால் என்ன பதில் சொல்ல முடியும்?

"அம்மா!' நீ அப்பா வந்தாத்தான்பொட்டு இட்டுப்பேன்' னு சொல்லுவியே. அப்பாவை வரவழைக்கச் சொல்லும்மா.....நீ பொட்டு இட்டுக்கோம்மா. எல்லாரும் நெத்திக்கு நன்னு அழகா பொட்டு இட்டுக்கறு. பொட்டு இட்டுண்டா நீ எத்தனை அழகாய் இருப்பே தெரியுமா....?"என்றான் கண்ணன்.

ஜம்புவின் இதயம் சுக்கல் சுக்கலாக உடைந்தது. எல்லாப் பெண்களையும் போல. தன் தாயும் நெற்றிக்கிட்டுக் கொள்ள வேண் டும்: அவள் நெற்றி நிறைந்திருக்க வேண் டும் என ஆசைப்படும் அந்தக் குழந்தையை ஏமாற்றுவது எப்படி?

பிஞ்சு மனத்தில். "கட்டாயமாகக் கண்டு பிடித்துத் தருவேன்' என்று கூறி ஆசையை வளர்த்து விட்டு. நம்பிக்கையை வேரூன்றச் செய்து விட்டு அவனே அதை வேரறுக்க வேண்டுமா?

வேறு வழி?

"தொரை...சத்தியமா சொல்றேன். நான் ஒண்ணுக்கும் உதவாதவன். சும்மாவாவது ஜாலக் அப்படி இப்படின்னு அம்பக் பண்ணி னாத்தான் இந்த உலகம் சோறு போடுது. காணாமற் போனதைக் கண்டுபிடிச்சுத் தரு வேன்னு சொல்றதெல்லாம் வயித்துப் பொழைப்புக்காகத் தான். இதோ இப்பவே இங்கேயே. உன் மேல் ஆணையா இந்தத் தொழிலை விட்டுட்டேன். மூட்டை தூக்கி வயிறு வளர்த்தாலும் வளர்ப்பேனே தவிர. இனிமே ஜால வித்தை செய்து. பிஞ்சு நெஞ் சங்களிலே ஆசையை மூட்டி நம்பிக்கையை வளர்த்து. பிறகு அதை அறுத்தெறிய முடியா மல் தவிக்க மாட்டேன். இது சத்தியம் தொரை...."

குழந்தையைக் கையெடுத்துக் கும்பிட்டான் ஜம்பு. திகைக்கும் செயலற்றவளாய் அந்தப் பெண் குழந்தையைக் கையில் பிடித்துக் கொண்டு புறப்பட்டாள்.

"அம்மா.......அப்பா வருவாராம்மா?" என்று தேம்பினான் குழந்தை.

"அப்பா....! வரமாட்டார் இனிமே...நீ வா பேசாமல்" என்றவாறே அவனைக் கையில் பிடித்துக் கொண்டு போய் விட்டாள். அவள் அழுது கொண்டே செல்கிறாள் என்பது முதுகு குலுங்குவதிலிருந்து தெரிகிறது.

ஜம்பு தன் உடைமைகளை யெல்லாம் ஒன் றாகத் திரட்டிப் பக்கத்தில் ஓடிக் கொண் டிருக்கும் கூவத்தில் வீசி எறிந்தான். அவன் வாழ்க்கை நடத்த உதவிய ஜாலப் பொருள்க ளெல்லாம் இப்பொழுது சின்னாபின்னமாகச் சிதறி நீரில் அமுங்கின.

'மூட்டை தூக்கியாவது பிழைப்பேன்' என்றானல்லவா? அதை வார்த்தையளவில் நிறுத்தி விடவில்லை. வயிறு வளர்க்கவே பயன் செய்தான்.

சத்தியத்தை. தெய்வத்தின் முன்னால் செய் தால் என்ன? குழந்தையின் முன்னால் செய் தால்தான் என்ன? கொண்டாடும் இடத் திலும். கும்பிடும் இடத்திலும் தெய்வமும் குழந்தையும் ஒன்றாயிற்றே?

நாங்கள் ரொம்ப ரொம்ப ஏழைகள். எங்கள் வீடு ரொம்ப ரொம்பச் சின்ன வீடு. மாத வாடகை இரண்டு ரூபாய். எங்கள் வீடும், என் அப்பாவுடன் கோவில் மடப்பள்ளியில் வேலை பார்க்கும் கரிநாக்குக் கிச்சாமியின் வீடும்தான் எங்கள் கிராமத்திலேயே மிகச் சிறிய வீடுகள்.

என் அப்பாவுக்கு மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம். பூதலிங்கம் பெருமாள் எங்களுக்குப் படியளக்கிறார். சம்பளம் தவிர தினமும் இரண்டு கட்டிச் சாதமும் அப்பாவுக்குக் கிடைக்கும். காலையில் ஒரு கட்டி. கட்டி பெரிசாகவே இருக்கும். நாங்கள் — நான், அப்பா, அம்மா, என் தங்கை அம்புஜா, பாட்டி. எல்லாரும் ஒரு வேளைக்கு ஒரு கட்டிச் சாதத்தைப் பங்கிட்டுக் கொள்வோம். ஆறு மாசத்துக்குக் கறுப்புச் சாதம் வந்தால் மறு ஆறு மாசத்துக்குச் சிவப்புச் சாதம் வரும். வெள்ளைச் சாதம் வருவதே இல்லை. எனக்கு வெள்ளைச் சாதம் தான் ரொம்பப் பிடிக்கும். கோவிலுக்கு என்று எங்கிருந்து தான் இந்தக் கறுப்பு அரிசியையும், சிவப்பு அரிசியையும் தேடிப் பிடித்துக் கொண்டு வருகிறார்களோ, தெரியவில்லை!



''இந்தச் சாதம் எனக்குப் பிடிக்கவே இல்லை பாட்டி!'' என்று ஒரு நாள் பாட்டியிடம் சொன்னேன்.

''ஸ்வாமியே இதைத்தானே சாப்பிடுகிறார். நமக்கு என்னடா வந்தது வரிசை'' என்று ஏதோ கோபத்தில் பதில் சொல்வது போல் அடித்துப் பதில் சொன்னாள் பாட்டி. பாட்டி சொன்னதை அப்படியே ஒலிப்பதிவு செய்து அம்மாவிடம் போய் ஒலிபரப்பினேன். அம்மா அப்போது அடுக்களையில் சிவப்புச் சாதம் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''ஒங்க பாட்டிக்குத்தெரியாததுதான் இந்த உலகத்திலே ஒண்ணுமே இல்லையே. ஸ்வாமியே இந்தக் கட்டிச் சாதத்தைச் சாப்பிடுகிறார் என்று சொன்னால், அதிலே என்ன அர்த்தம் இருக்கு? ஸ்வாமியாலே முடியும்; நம்மாலே முடியுமா? மலையை முழுங்கின மகாதேவருக்கு இந்தக் கட்டிச் சாதம் ஒண்ணும் பிரமாதம் இல்லே. நம்ம விதி. இதைத் தின்ன வேணும்னு நம்ம தலையிலே எழுதியிருக்கு... ஆனால் ஸ்வாமி இதுக்காவது வழி விட்டிருக்கிறாரே! சாப்பிட்டு விட்டு நம் வாயாலே குறை சொல்லப்படாது.....'' — நீளமாகப் பேசிக் கொண்டு வந்த அம்மாவின் கண்களில் நீர் முட்டிவிட்டது. இடது கையால் புடவைத் தலைப்பை இழுத்துக் கண்ணைத் துடைத்து விட்டுக் கொண்டாள். ஒரு வாய்ச் சாதத்தைத் தேங்காய்த் துவையலில் தோய்த்து வாயில் போட்டு உருட்டினாள். அடுத்த வாய்க்குச் சாதத்தை உருட்டியபடி ''ஒங்க பாட்டிக்கு எல்லாமே அமிர்தம்தான். தண்டத்துக்கு ஒருத்தன் சோறு படைச்சா ஏன் கசக்கப் போகிறது? சும்மா கெடச்சா, ஒங்க பாட்டிக்கு வாழை மட்டைக்கறிகூட நன்றாகத்தான் இருக்கும். இருக்கிறவர்கள் போறாது என்று இவளோட கழுத்தறுப்பு. தன்பிள்ளை எக்கேடு கெட்டுப் போனாலும் சரி, தன் பெண்ணுக்குப் பணம் சேரணும். அது ஒண்ணுதான் ஒங்க பாட்டி நினைப்பு. இந்தக் கிழவியாலே கால் காசுக்குப் பிரயோசனம் நமக்குண்டா?'' என்றுகோபமும் வருத்தமும் முகத்தில் மாறி மாறியும் கலந்தும் வீச, கூச்சல் போட்டாள் அம்மா. அம்மாவுக்கு ஒரு சௌகரியம். பாட்டியின் காது சற்று மந்த மாதலால் எவ்வளவு தான் கூச்சல் போட்டாலும் இலேசில் பாட்டியின் காதில் விழாது.

அம்மா பேச்சு எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அம்மாவுக்கு எப்போதுமே கோபம் கொஞ்சம் அதிகம்தான். அம்மாவைச் சொல்வானேன், எங்கள் வீட்டில் எல்லோருமே அப்படித்தான். அப்பா முன் கோபி. அம்புஜாவுக்கு ஒரு நாளில் இருநூற்று எழுபது முறை கோபம் வரும். நானும் கோபத்தில் குறைந்தவனல்ல. கோவில் சாதத்தைச் சாப்பிட உட்காரும் போதெல்லாம் எனக்கு அசாத்தியமான கோபமும், எரிச்சலும் வரும். ஆனால் எங்கள் பாட்டி இதற்கெல்லாம் விதிவிலக்கு. ஆடிக்கு ஒரு முறை, ஆவணிக்கு ஒரு முறைதான் அவளைக் கோபப் பிசாசு பிடிக்கும். அப்படிப் பிடித்தாலும் பிடித்த பிசாசை நிமிஷத்தில் அடித்து விரட்டி விடுவாள்.

அம்மாவுக்குப் பாட்டியைப் பிடிக்கிறதோ, இல்லையோ எனக்கும் அம்புஜாவுக்கும் ரொம்ப ரொம்பப் பிடிக்கும். பாட்டி எங்களிடம் மிகவும் பிரியமாக இருப்பாள். ராத்திரி எங்க

கிருஷ்ணன் நம்பி

ளுக்குக் கதைகள் சொல்லுவாள். வெகு ஜோரான கதைகள். தேசிங்கு ராஜா கதை, பிள்ளையாருக்குக் கொம்பு முறிந்த கதை, பரமசிவனுக்கு நெற்றிக் கண் முளைத்த கதை, முருகனுக்கு மாம்பழம் கிடையாமற் போன கதை - இப்படி எத்தனை எத்தனையோ கதைகளை எத்தனை எத்தனையோ இரவுகளில் அற்புதமாகச் சொல்லியிருக்கிறாள். பாட்டிக்கு நன்றாகப் பாடவும் தெரியும். ஒரு விதமான கீச்சுக் குரலில் ஒன்று ஆழமான கிணற்றுக்குள் ளிருந்து கூவுவது போலப் பாடுவாள். அவளுடைய சுலோகங்கள் கீர்த்தனைகள் பாசுரங்கள் - இவை எதுவும் எனக்குப் பிடிக்காது. எனக்கு ரொம்பப் பிடித்தது அவளுடைய 'அக்கினி பிக்கினி'ப் பாட்டுத்தான்.

அக்கினி பிக்கினி சண்டை.
ஆறுமாசம் கோண்டை
கிண்ணத்திலே எண்ணெய்
தாலத்திலே சோறு
கச்சேரிக்குப் போனேன்
ஆனையைக் கண்டேன்
பூனையைக் கண்டேன்
அடிச்சிப் பொண்டு விழுந்தேன்!

இந்தப் பாட்டை ராகத்தோடு பாடிக் கொண்டு அம்புஜாவும் நானும் தட்டாமாலை சுற்றுவோம். 'தட்டாமாலைத் தாமரைப் பூ. சுற்றிச் சுற்றிச் சுண்ணாம்பு' என்கிற தட்டா மாலைப் பாட்டும் எங்களுக்குத் தெரியும். எல்லாம் பாட்டி கற்றுக் கொடுத்ததுதான்.

''நீ நன்னாப் பாடறே பாட்டி'' என்பாள் அம்புஜா.

''ஆமாம் பாட்டி, நீ நன்னாப் பாடறே'' என்று நானும் சொல்லுவேன்.

பாட்டியின் முகம் மலரும். உடனே வாடியும் விடும். கண்களில் சோகம் கலந்த ஒரு பிரகாசம் தோன்ற அவள் பேசுவாள்:

''என்னெல்லாம், நவராத்திரி வந்தால் ஊரிலே கொலு வெச்சிருக்கிறவாளெல்லாம் - 'வாடீ வாடீ'ன்னு என் கையைப் பிடிச்சு இழுத்துண்டு போய் உபசாரம் பண்ணுவா. நான் போய் அம்பாள் முன்னாலே உட்கார்ந்து ரெண்டு சுலோகம் சொன்னாத்தான் அவாளுக்கெல்லாம் மனசு திருப்தியாகும். மத்தவாளுக்கு ஒரு கரண்டின்னா, எனக்கு மூணு கரண்டி சுண்டல் கொடுப்பா. கை கொள்ளாது. அமுக்கிப் பிடிச்சுக்குவேன். இல்லாவிட்டால் மடியிலே கட்டிக்குவேன். ஒரு துளி வாயிலே போட்டுப்பேனா? உங்கள் தாத்தாவும் இதையெல்லாம் கையாலே தொட மாட்டார். எல்லாம் அவருக்கு வெள்ளைக்காரன் விஸ்டம் தான். அத்தனை சுண்டலையும் உங்கள் அப்பாவுக்குத்தான் கொண்டு வந்து அடைப்பேன். எம்பிட்டுத் தின்னாலும் அவனுக்குப் பத்தாது. இப்படி எத்தனையோ... இப்பத்தானே உங்க அப்பன் இப்படிக் கொரங்கா இருக்கான். ஒங்களைப் போல் குழந்தையா இருந்தப்போ அவனைப் பார்க்கணும்! ஊர்க்காரா திருஷ்டி போடுவா. கோவில் அர்ச்சகன் வீட்டுப் பிள்ளை என்று ஒரு மனுஷா சொல்ல மாட்டா. பெரிய ஜமீந்தார் வீட்டுப் பிள்ளை மாதிரின்னா இருப்பான்! அப்படி அல்லவா அவனைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தேன். அதையெல்லாம் கொஞ்சமாவது இப்போ நெனச்சுப் பாக்கறானா? உங்கள் தாத்தா இப்ப இருந்தால் இப்படி யெல்லாம் வருமா? ...ம் ம். எல்லாம் அவா அவா தலையெழுத்து....''

பெருமூச்செறிந்து கண்களைப் புடவையின் நுனியில் துடைத்துக் கொண்டாள் பாட்டி.

எங்கள் பாட்டி ஊரில் செல்வாக்கும் மதிப்பும் உள்ளவள். அவளுடைய சாமர்த்தியங்களைப் பற்றிச் சற்று மிகையாகவே எல்லாரும் பேசிக் கொள்வார்கள். அவளுக்கிருந்த மதிப்பின் ரகசியத்தில் பாதி அவளுடைய பட்சணம் போடும் திறமையில் அடங்கி விடுகிறது என்றே சொல்ல வேண்டும். குறிப்பாக, கல்யாணம் கார்த்திகைகளுக்குப் பெரிய பெரிய முறுக்குகள் சுற்றுவதில் அவளுக்கு இருந்த தேர்ச்சி அசாதாரணமானது.

ஒரு நாளில், இருநூறு முந்நூறு என்று இருந்த இருப்பில் மடமடவென்று சுற்றிப் போட்டு விடுவாள் பாட்டி. பண்ணையார் மாமாவின் அண்ணா பெண் ஜானகியின் கல்யாணத்துக்குப் பாட்டியைத்தான் பட்சண 'டிபார்ட்மெண்டுக்கு'ப் பொறுப்புக் கட்டினார்கள்! கல்யாணம் திடுதிப்பென்று நிச்சயிக்கப்பட்டதால் எல்லா ஏற்பாடுகளும் துரித கதியில் நடந்தாக வேண்டியிருந்தது. அங்கிச்சிப்பாட்டி ஒருத்தியை மட்டும் கையாளாக வைத்துக் கொண்டு இரண்டே நாட்களில் ஆயிரத்து முந்நூறு பெரிய முறுக்குகள் சுற்றி முடித்து ஒரு 'ரிக்கார்டை' ஏற்படுத்தி விட்டாள் பாட்டி. ''ஒத்தாசைக்கு எத்தனை பேர் வேணுமானாலும் வைச்சுக்குங்கோ. இப்படி வீணாச் சிரமப்பட வேண்டாம்'' என்று பண்ணையார் மாமா எவ்வளவோ சொல்லிப் பார்த்தாராம். பாட்டி காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. ''என்னை யாருன்னு நெனைச்சே. - நாகுடா நான் நாகு'' என்று மாரைத் தட்டி விட்டு, எண்ணெய்ச் சட்டியண்டை அப்படியே உட்கார்ந்து விட்டாளாம். கல்யாணம் முடிந்து, ''நீங்க செஞ்சதுக்கு உங்களுக்கு ஆயிரம் கொடுத்தாலும் தகும். ஏதோ என்னால் ஆனது. பொன் வைக்கிற இடத்தில் பூ'' என்று சொல்லி, பண்ணையார் மாமா இருபது ரூபாய் புது நோட்டாக எடுத்து நீட்டினாராம் பாட்டியிடம். இரண்டே நாட்களில் கனையாக ரூபாய் இருபது சம்பாத்தியம்!



இதெல்லாம் பாட்டி சொல்லித்தான் எனக்கும் அம்புஜாவுக்கும் தெரியும்.

ஒரு வீடு இல்லா விட்டால் இன்னொரு வீட்டிலிருந்து பாட்டிக்கு அழைப்பு வந்த

வண்ணமிருக்கும். எங்கள் ஊரிலிருந்து எட்டு மைல் தெற்கே இருக்கும் நாகர்கோவில் பட்டணத்திலிருந்து கூடப் பாட்டிக்கு அழைப்பு வந்ததுண்டு. முறுக்குச் சுற்ற, பிட்டு சமைக்க, வடாம் – அப்பளாம் போட்டுக் கொடுக்க – இப்படி எத்தனையோ வேலைகளுக்கு. செய்யும் வேலைகள் வெறும் ஊழியம் அல்ல. பணமும் கிடைக்கும். நாலணா, ஆறணா என்று பணத்துடன் பட்சணங்களும் கிடைப்பதுண்டு. கிடைக்கும் பட்சணத்தை எனக்கும், அம்புஜாவுக்கும் கொண்டு வந்து கொடுப்பாள். பணத்தை மட்டும் தானே பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வாள்.



"பணத்தாசை பிடிச்சவள்டா உங்க பாட்டி.... உலகத்தையே வெறுத்த மாதிரி, சன்னியாசி மாதிரி வேஷம் போடுகிறாள். ஒரு நல்லது கெட்டதுக்கு இன்னித் தேதி வரை காலணா நமக்குக் கொடுத்திருக்காளா? .... சேர்த்து வைச்சு, சேர்த்து வைக்கத் தன் பெண்ணுக்குக் கொண்டு போய் அடைக்க வேண்டாமா!... அவள் தானே இவளுக்கு எல்லாம் சாதிக்கப் போகிறாள்!..." என்று ஆக்ரோஷத்துடன் முழங்குவாள் என் அம்மா.

பாட்டியின் பெண் – எங்கள் கோமு அத்தை – புலியூர்க் குறிச்சியில் இருக்கிறாள். அவள் புருஷனுக்கு – எங்கள் அத்திம்பேருக்கு 'வாட்டர் லைனே' உத்தியோகம். அதாவது தேவைப்படுகிற வீடுகளுக்கெல்லாம், ஊரை விட்டு ஒன்றரை மைல் கிழக்கே நடந்து போய் வாய்க்காலிலிருந்து குடம் குடமாகக் குடி தண்ணீர் சுமந்து கொண்டு வந்து கொடுக்கிற வேலை.

'தனக்கு வரும் பணத்தை எங்கேயோ ரகசியமாகப் பாட்டி சேர்த்து வைக்கிறாள். கடைசியில் ஒருநாள் எல்லாப் பணத்தையும் கொண்டு போய், "கோமு, இத்தனையும் உனக்குத்தான்' என்று கொடுத்து விடப் போகிறாள் பாட்டி. அப்படித்தான் சொன்னாள் என் அம்மா. அம்மா சொல்வது சரியாக இருக்கும் என்று தான் எனக்கும் தோன்றியது. எங்களிடம் இத்தனை பிரியமாக நடந்து கொள்ளும் பாட்டி ஏன் எங்களுக்குப் பணம் கொடுக்கக் கூடாது?

அம்மா அப்பாவிடம் முறையிடுவாள்:

"நாம் இங்கே என்ன பாடு படுகிறோம். குழந்தைகளுக்குக் கொஞ்சம் நல்ல மோர் வாங்கி விடக்கூட நமக்கு முடியவில்லை. அம்புஜத்துக்கு ஒரு கிழியாத பாவாடை இல்லை, ஜம்பர் இல்லை. கந்தலை உடுத்திக் கொண்டு நடக்கிறாள் குழந்தை. எனக்கும் தான் ஒரு நல்ல புடவை உண்டா, ரவிக்கை உண்டா? ஒட்டுப் போட்டு இந்தப் பீத்தல் புடவையை எத்தனை நாட்களாய்க் கட்டிண்டிருக்கேன்......உங்கள் அம்மா என்னடான்னா, ஒரு காசு வெளியிலே விடாமப் பதுக்கிப் பதுக்கி வெச்சிருக்காளே. அத்தனை காசையும் உங்கள் தங்கைக்குத்தான் கொடுக்கணுமா?"

முகத்தை 'உர்' என்று வைத்துக் கொண்டு அப்பா சொல்லுவார்:

"பேசாமல் இரேன். தொணதொணன்னு பிராணனை வாங்காதே. சேர்த்து வெச்சா வெச்சிட்டுப் போறா. யாருக்காவது கொடுத்திட்டுப் போறா. அவளைக் காப்பாத்த வேண்டியது என் பொறுப்பு. அவள் காசு நமக்கு வேண்டாம்."

"நீங்க பெரிய தியாகியாகப் போயிட்டேள். நானும் உங்களைப் போல...." என்று இழுத்தாள் அம்மா.

அப்பா குறுக்கிட்டு, "சரி, சரி. பேசாமல் வாயை மூடிக் கொண்டு போ" என்று அதட்டிச் சொல்லி விட்டு அப்பால் நகர்ந்து விடுவார். அப்பாவிடம் அம்மாவுக்குப் பயம். கோபம் வந்தால் அப்பாவின் கை கொஞ்சம் நீண்டு போய் விடும்.

என் பாட்டியிடம் நிறையப் பணம் இருப்பதாக ஊர்க்காரர்களும் பேசிக் கொண்டார்கள்.

சாயம் வெளுத்துப் போன, ஒட்டுப் போட்ட என் ஒரே நிஜாரைக் கூர்ந்து கவனித்து விட்டுக் குமரிப்பாட்டி என்னிடம் ஒரு நாள் கேட்டாள்:

"என்டா, குழந்தே! உங்கள் பாட்டி ஏராளமாப் பணம் சேர்த்து வெச்சிருக்காளாமே. உனக்கு ஒரு நல்ல நிக்கர் தெச்சுத் தரச் சொல்லப்படாதோ?"

நான் சொன்னேன்: "எங்க பாட்டி தெச்சுத் தரமாட்டா. எல்லாப் பணத்தையும் எங்க கோமு அத்தைக்குக் கொடுத்துடுவா எங்க பாட்டி."

என் பேச்சைக் கேட்டுக் குமரிப் பாட்டி சிரித்தாள்.

என் பாட்டியிடமே ஒருநாள் நான் கேட்டேன்: "ஏன் பாட்டி, நீ நெறையப் பணம் வைச்சிருக்கியாமே. அத்தனை பணத்தையும் கோமு அத்தைக்குத்தான் கொடுக்கப் போறியா?"

பாட்டி முகத்தைச் சுளித்தாள். எரித்து விடுவது போல் என்னைப் பார்த்தாள். "யாருடா சொன்னா உனக்கு?" என்று கேட்டாள் அதட்டுகிற குரலில்.

"எல்லாரும் சொல்றா."

"எல்லாரும் சொல்றாளா? சொல்லட்டும், சொல்லட்டும். நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ" என்றாள் ஆத்திரம் பொங்க.

நான் கேட்டது அவளுக்குப் பிடிக்கவில்லை: என்னிடம் உண்மையை மறைக்கிறாள் என்பது எனக்குப் புரிந்தது. பணத்தைச் சேர்த்து அத்தைக்கே கொடுக்கட்டுமே. பாட்டியின் பிச்சைக் காசு எங்களுக்கு வேண்டாம். எதையும் எதிர்பார்த்து என் அப்பா தன் அம்மாவுக்குச் சாப்பாடு போட்டுக் காப்பாற்றவில்லை:

இந்தச் சந்தர்ப்பத்தில் என் பாட்டியின் விஷயத்தை மேலும் அம்பலமாக்குவது போல் ஒரு காரியம் நிகழ்ந்தது.

கோமு அத்தை ஒருநாள் திடுதிப்பென்று விரூர்க்குறிச்சியிலிருந்து வந்தாள் இடுப்பில் கைக் குழந்தையுடன். எல்லாரையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தாளாம். ஒரு பொட்டலம் மிக்ஸரும் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தாள். எனக்கும் அம்புஜாவுக்கும் ஒரு வாய்க்குக் கூட வரவில்லை. ஆனால் ரொம்ப ருசியாக இருந்தது.

அம்மாவும் அத்தையும் சரியாகவே முகம் கொடுத்துப் பேசவில்லை. பேசுவது போல் பேசாமலிருந்தார்கள். பேசாமலிருப்பது போல் பேசிக் கொண்டார்கள். ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டதை நான் மூன்று முறை பார்த்தேன்.

நான் வந்த நாலாவது நாள் மாலையில் அத்தை ஊருக்குப் போனாள். அன்று சனிக்கிழமை. எனக்குப் பள்ளிக்கூடம் இல்லை. மத்தியானம், தெருவில் என் சிநேகிதர்களுடன் கிட்டிப்புள் விளையாடிக் கொண்டிருந்தேன். வெய்யில் பொரிந்தது. விளையாட்டினிடையே தண்ணீர் குடிப்பதற்காக என் வீட்டுக்கு வந்தேன். நான் உள்ளே நுழைந்தபோது உள் திண்ணையில் பாட்டியும் அத்தையும் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது பாட்டி அத்தையின் கையில் ரூபாய் நோட்டுகளைத் திணித்துக் கொண்டிருந்ததை நான் கவனித்து விட்டேன். எவ்வளவு பணம் என்பதை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அத்தைக்குப் பாட்டி பணம் கொடுத்தது உண்மை. அதை நான் கண்டதும் உண்மை. அம்மா அப்போது தாழ்வாரத்தில் பகல் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

சாயங்காலம் அத்தை போன பிறகு அம்மாவிடம் நான் விஷயத்தைச் சொன்னேன். பாட்டி அப்போது அத்தையைப் பஸ் ஏற்றி அனுப்பச் சென்றிருந்தாள். நான் சொன்னதைக் கேட்டு அம்மா இங்கு இங்கென்று குதித்தாள். ''எனக்கு அப்பவே தெரியுமே.. உங்க அத்தை சும்மா ஒண்ணும் இங்கே வர மாட்டா. காரியமாத்தான் வந்திருக்கா. இந்தக் கிழவியிடமிருந்து பணம் பிடுங்கிக் கொண்டு போகத்தான் ரெண்டணா மிக்ஸருடன் வந்திருக்கா.....ஏன், பணம் கொடுக்கிற அம்மாவை வீட்டோடு வெச்சுக் காப்பாத்தறது நானே! அவ ஏன் வெச்சுக்கப் போறா? அதற்குத்தான் வேறே பைத்தியங்கள் இருக்கே...இந்தக் கிழவிக்கும்தான் என்ன ஓர வஞ்சனை,—பாரேன்!''

வழக்கம் போல் அம்மாவின் பேச்சு ஓர் ஒற்றையடிப் பாதை போல் நீண்டு கொண்டே போயிற்று.

*

அன்று இரவு வெகு நேரத்துக்குப் பிறகு அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பெருஞ்சண்டை மூண்டது. அத்தையையும் பாட்டியையும் வாய்க்கு வந்தபடி திட்டி நொறுக்கினாள் அம்மா. பாட்டி உள் திண்ணையில் டமாரச் செவியுடன், அமைதியான நித்திரையில் மூழ்கியிருந்தாள். அம்புஜாவும் என் பாட்டியின் அருகே குறட்டை விட்டுக் கொண்டிருந்தாள். எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அம்மாவின் நெருப்புப் பொறி பறக்கும் சொற்பொழிவை ஒருவித பீதியுடன் காதுக்குள் வாங்கிக் கொண்டிருந்தேன்.

''...அப்போ, என் ஆயுசு முழுதும் இந்தக் கிழிசல் புடவைதானா எனக்கு?''

''என்னை என்ன பண்ணச் சொல்லறே?—கையிலே பணம் இருந்தாத்தானே வாங்கிக் கொடுக்க முடியும்...?''

''அப்படியெல்லாம் சொன்னா முடியாது. எப்படியாவது வாங்கிக் கொடுங்கோ!''

''எப்படியாவது வாங்கறதா? அதெப்படி முடியும்? ....கோயில் உண்டியலைக் கொள்ளை அடித்துக் கொண்டு வரணும் என்கிறயா! ஆமாம்...நீ ஒரு டப்பாவிலே உண்டியல் சேர்த்துக் கொண்டிருந்தாயே, அது என்ன ஆச்சு? அந்தப் பணத்தைப் போட்டு ஒரு புடவை வாங்கிக் கொள்ளேன்!''

ஓர் 'ஓவல்டின்' டப்பாவை நன்றாக ஈயப் பற்று வைத்து அடைத்து, அதில் ஒரு துவாரம் போட்டு, காலணாவும் அரை அணாவுமாகச் சேர்த்து வந்தாள் அம்மா. (ஓவல்டின் வாங்குவதற்கு அம்மாவிடம் பணம் இல்லை என்றாலும் ஓவல்டின் டப்பா வாங்க அவளிடம் பணம் இருந்தது!) அடுக்களையில் சுவரோடு சுவராகப் பதிக்கப்பட்டிருக்கும் கரி பிடித்துப் போன ஷெல்பின் மேல் தட்டில் ஒரு கூஜாவுக்கு அடுத்தாற் போல் அந்த டப்பா இருக்கும்.

அம்மா சொன்னாள்:

''அதிலென்ன, தொள்ளாயிரம் ரூபாயா இருக்கப் போகிறது?.... அதிகமாகப்போனால் பத்து ரூபாய் இருக்கும். என் தலை போனாலும் அதை நான் தொட மாட்டேன். பெண்டாட்டிக்கு உடுக்கத் துணி எடுத்துக் கொடுக்க வேண்டியது புருஷன் கடமை. உண்டியலில் பணம் சேர்த்து நானே எனக்குத் துணி எடுத்துக் கொள்ள முடியாது.''

உறுதியாக, அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விட்டாள் அம்மா.

''அப்படியானால் இந்தக் கிழிசலைக் கட்டிக் கொண்டு நிற்க வேண்டியதுதான்'' என்று கூறிவிட்டார் அப்பா.

''ஏன், உங்கள் அம்மா சேர்த்துச் சேர்த்துப் பெண்ணுக்குக் கொடுக்கிறாளே. நீங்களும் பங்கு கேட்கிறதுதானே!''

''இதோ பாரு. இனிமே இந்த மாதிரிப் பேசாதே. எனக்குப் பொல்லாத கோபம் வரும். எத்தனையோ தரம் உங்கிட்டே சொல்லியாச்சு.''

''பேசத்தான் செய்வேன். வயிறெரிஞ்சா வாயும் கிழியத்தான் செய்யும்....''

''கிழியுமா? கிழியுமான்னு கேக்கறேன்...''

பளீர் ....

அம்மா அழுதாள். நானும் அழுதேன். பாட்டி, அம்புஜா – இருவருடைய நித்திரையையும் கலைக்கக் கும்பகர்ணன்தான் எழுந்திருந்து வர வேண்டுமோ என்னவோ!

* * *

நிம்மதியாக நடந்து திரிந்து கொண்டிருந்த பாட்டி ஒருநாள் அதிகாலையில் முற்றத்தில் வழுக்கிக் கீழே விழுந்துவிட்டாள். பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து கூடினார்கள். அப்பா கோயிலிலிருந்து இரைக்க இரைக்க



ஓடி வந்தார். எல்லாருமாகப் பாட்டியைத் தூக்கிப் படுக்கையில் கிடத்தினார்கள். மருந்துவச்சி பொன்னம்மை ஆடி அசைந்து கொண்டு வந்து சேர்ந்தாள். ஏதோ ஒரு பொடியை வெந்நீரில் கலக்கிப் பாட்டியின் வாயில் ஊற்றினாள். "உன் மருந்தும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்" என்று தடுத்தாள் பாட்டி. "அப்படிச் சொல்லாதேம்மா. மருந்து சாப்பிட்டால்தான் உடம்பு சரியாகும்" என்றார் அப்பா.

"இனிமே உடம்பு சரியாகி யாருக்கு நான் என்ன செய்யப் போகிறேன்? குழந்தை அம்புஜாவுக்கு ஒரு புருஷன் வந்து பார்க்கணும்னு ஆசைப்பட்டேன். எல்லாத்துக்கும் பிராப்தம் வேண்டாமா?" என்று மூக்கிமுனகிச் சொன்னாள் பாட்டி.

"கல்யாணம் பண்ண இங்கே யாரு பணம் சேத்து வச்சிருக்கா?" என்று முணுமுணுத்தாள் அம்மா. அப்பா ஒரே பார்வையில் அம்மாவின் வாயை அடைத்தார். கோமு அத்தைக்கு ஆள் சொல்லி அனுப்பினோம். வந்தாள். பாட்டியண்டை உட்கார்ந்து 'அம்மா, அம்மா' என்று கண்ணீர் விட்டாள். அன்று மத்தியானம் எங்கள் வீட்டில் ஒரு வாய் சாப்பிட்டுவிட்டு, "அண்ணு, இப்பவே நான் போயாகணும். ரெண்டு நாளா அவருக்கு ஜுரம். ஒரு வாய் ஜலம் கொடுக்க அங்கே யாரும் கிடையாது. குழந்தைகளையும் தனியாக விட்டுட்டு வந்திருக்கேன். நீ அம்மாவைக் கவனமாகப் பார்த்துக்கோ. பெரிய டாக்டரைக் கூப்பிட்டுக் காட்டு. உன் நிலைமை எனக்குத் தெரியும். ஆனா, நான் என்ன செய்வேன்? என் நிலைமை உனக்குத் தெரியாதா? ...இந்தா இதை வைச்சுக்க. இதுதான் என்கிட்டே இருக்கு" என்று சொல்லிப் புடவை முடிச்சை அவிழ்த்து இரண்டு ஒரு ரூபாய் நாணயங்களை அப்பாவிடம் எடுத்துக் கொடுத்துவிட்டுப் போனாள். அவள் போன பிறகு, "அத்தனையும் வேஷம். உங்க அம்மா பணத்தையெல்லாம் கொள்ளை அடிச்சுப்பிட்டு, என்னமா நாடகம் ஆடறா பார்த்தேளா!" என்றாள் அம்மா.

"வாயை மூடு. போ...." என்று அதட்டினார் அப்பா. பாட்டி படுத்த படுக்கையாகி விட்டாள். கல்லாக இருந்த உடம்பு கருகருவென்று ஒரே வாரத்தில் வற்றித் தேய்ந்து விட்டது. 'பெரிய டாக்டரை அழைத்துக் காட்ட வேண்டும்' என்று சிலர் சொன்னார்கள். வேறு சிலர், 'எழுபது வயசுக்கு மேலே என்ன வைத்தியம் வேண்டியிருக்கிறது? இனிமேல் நாகுப் பாட்டி பிழைக்க மாட்டாள்' என்று அபிப்பிராயப்பட்டார்கள். பாட்டியின் உடல் நிலை படிப்படியாய் மோசமாயிற்று.

"பெரிய டாக்டரைக் கூப்பிட்டுக் காட்டினால் என்ன?" என்று கேட்டார் அப்பா. "கூப்பிடலாம். அதுக்கு யார் கிட்டே பணம் இருக்கு?... வீடெல்லாம் தேடிப் பார்த்தாச்சு; உங்கம்மா எங்கே பணம் பதுக்கி வெச்சிருக்கான்னு தெரியல்லே!" என்று சொன்னாள் அம்மா.


★

அமர காவியம்

ஹலோ!......வா! வா!
நேரே இப்படி வாயேன்!
நீ வருவாய் என்று எனக்குத்
தெரியும்.
காத்திருந்து என் கண்கள்
பூத்து விட்டன.
காலம் கரைந்தது. ஆனால்
என் பொறுமை கரையவில்லை.
நீ நிஜமாகவே தைரியசாலி!
இல்லாது போனால் நீ என்னைச்
சந்திக்க என் அறைக்கே வந்
திருப்பாயா?
என் அப்படி ஒதுங்குகிறாய்?
ஓஹோ! வெட்கமா? சரி, போ!
பதினைந்து நாள் பழக்கத்திற்
கப்புறமும் வெட்கமா?...என்
கண்ணல்லவா? நீயாகவே
என் எட்டும்படி
கைக்கு
வந்து விடு.
பாரு! மறுபடி ஒளிகிறாயே?
எத்தனை நேரம்தான் அந்தக்
கதவுக்குப் பின்னால் நிற்பாய்?
என் பொறுமை
ஹும்!......என்
வெறியாக மாறிவிடும்.
கண்ணாமூச்சி காட்டாதே! நான்
எழுந்திருக்க வேண்டுமா?
என் கை விரல்கள் துடிக்
கின்றன.
சரி. சரி!...என்னை வாட்டி
வதைக்க வேண்டுமென்றே வந்
திருக்கிறாய்.
உன்னைச் சந்திக்காமலே இருந்
திருந்தால் நான் எவ்வளவோ
நல்லவனாக இருந்திருப்பேன்.
எனக்குக் கோபம் வருவதைப்
பார்க்க அத்தனை ஆசையா?
சரி! நானே வருகிறேன்! அகப்பட்டுக்
கதவுக்குப் பின்
கொண்டாயா?
இனி நீ தப்பமுடியாது!
நீ நினைக்கிறாய் போலே நான்
ஒன்றும் அசடு இல்லே.
என்னிடமா உன் ஊடல் வித்
தையைக் காண்பிக்கிறாய்?
ஓஹோ!...தப்பவா பார்க்கிறாய்? மாட்
பழி! உன்னைத் தப்பவிட
டேன்! கொலை!...கொலை!
ஹா!...ரத்தம்!......நான் மா
டார்! கொலைகாரன்! பூ! எந்தச்
சட்டம் என்னை என்ன பண்ணும்? மூட்
[கண்ணாமூச்சி காட்டிய கதாநாயகன்
டைப்பூச்சியை நம் சம்ஹாரம் செய்த
காத்திருந்து
காவியம்.]

"கோன்"

★



"சரி, சரி. போதும், பேசாதே."

"பேசாம இருந்தா எப்படிக் காரியம் நடக்கும்?"

"யார் கிட்டேயாவது அஞ்சோ பத்தோ, கடன் வாங்க வேண்டியதுதான்."

"இதற்கே அறுபது ரூபாய் வரை இல்லையா கடன் பட்டிருக்கோம். இன்னும் கடன் வாங்கினா, யாரு திருப்பிக் கொடுக்கிறதுன்னுதான் தெரியல்லே....!"



"ஏனப்பா பாம்புக்கு வால் உண்டா?"

"அதனிடம் இருப்பதே அது ஒண்ணுதான்!"

போகும் போது, "இது போல் இன்னும் பதினஞ்சு நாள் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் போட வேண்டும். இந்த மாத்திரையும் ஒரு மாதத்துக்குக் கொடுத்து வர வேண்டும்" என்று சொல்லிப் போனார் டாக்டர். டாக்டரின் சாம்பல் நிறக் கார் ரொம்ப ரொம்ப அழகாக இருக்கிறது. அந்தக் காரிலேயே நாகர் கோயிலுக்குக் குப்பி மருந்து வாங்கப் போனார் அப்பா. அன்று போனவர் தான். அதற்குப் பிறகு டாக்டரைப் பார்க்க அவர் போகவே இல்லை. ஒரு ஊசிக்கு நாலு ரூபாய் மாத்திரை இரண்டுக்கு ஒரு ரூபாய் 'விஸிட்டிங் பீஸ்' மூன்று ரூபாய்......

"பின்னே என்ன செய்யச் சொல்றே?... சொல்லு. உன் உண்டியல் பெட்டியை உடைக்க இருக்கிற காசை எடுத்துக் கொடேன்!"

கண் சிவக்க அப்பாவை நிமிர்ந்து நோக்கினாள் அம்மா.

"உங்க அம்மா காசு நமக்குப் பாத்தியதை இல்லையானு, என் காசும் உங்க அம்மாவுக்குப் பாத்தியதை இல்லே" என்று தீர்மானமாகக் கூறிவிட்டாள் அம்மா.

அப்பா ஒன்றும் பேசவில்லை.

எத்தனை கல் நெஞ்சு அம்மாவுக்கு! ஆனால் பாட்டியும் கல்நெஞ்சுக்காரி என்றுதான் எனக்குத் தோன்றியது. இல்லாவிட்டால்சேர்த்து வைத்த அத்தனை பணத்தையும் தன் பெண்ணுக்கே கொடுத்திருப்பாளா?

அப்பா கேட்டார்: "அப்படியானால் பணத்துக்கு என்ன பண்ணுவது?"

"எதற்கும் இன்னும் இரண்டு நாட்கள் பார்ப்போமே..."

கவலை நிறைந்த முகத்துடனும், தீவிரமான சிந்தனையுடனும் "ம்....ம்" என்றார் அப்பா.

❖ ❖

இரண்டு நாட்களுக்குப் பிறகும் பாட்டி அப்படியேதான் கிடந்தாள். நானும், அம்புஜாவும் பள்ளிக்கூடத்துக்குப் போவதற்கு முன்னாலும், போய் விட்டு வந்த பிறகும் பாட்டியின் பக்கத்தில் போய் உட்காருவோம். "பாட்டி, பாட்டி!" என்று மெதுவாகக் கூப்பிடுவோம். பாட்டி கண்ணைத் திறக்க மாட்டாள். இலேசாக மூச்சு மட்டும் இழையும். மார்பு உயர்ந்து உயர்ந்து தாழும்.

"பாட்டி! நீ செத்துப் போகாதே. நீ செத்துப் போனா யாரு எங்களுக்குக் கதை சொல்லுவா? யாரு பட்சணம் கொண்டு வந்து கொடுப்பா? நீ செத்துப் போகாதே பாட்டி...!"

பண்ணையார் மாமாவிடம் பத்து ரூபாய் கடன் வாங்கிப் போய், பெரிய டாக்டரை அழைத்து வந்தார் அப்பா. டாக்டர் வந்து போவதற்கும் ஓர் ஊசிக்கும் இரண்டு மஞ்சள் மாத்திரைக்கும் எட்டு ரூபாயாயிற்று. நாகர் கோயில் போய்க் குப்பி மருந்து வாங்கி வர இரண்டு ரூபாய் போயிற்று. இப்படியாகப் பத்து ரூபாயும் தீர்ந்துவிட்டது!

"நம்மாலே தாங்காது. இனி மேல் பூதலிங்கப் பெருமாள் விட்ட வழி...." என்று அப்பாவே கையைக் குவித்து விட்டார்.

மேலும் இரண்டு நாட்கள் ஓடின. மருத்துவச்சி பொன்னம்மை வந்தாள். தன் நினைவின்றிக் கிடந்த பாட்டி யாருக்கும் எந்தச் சிரமமும் வைக்காமல், அன்று காலையில் கண்ணை மூடி விட்டாள்.

பாட்டியின் சாவு அடியந்திரம் நடத்தக் கையில் காசில்லாமல் அப்பா பட்ட அவஸ்தையைக் கண்டாள் அம்மா. அவள் மனசு இளகி விட்டது போலும். மேலும், ஒரு மாதிரியாகவாவது செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யா விட்டால் ஊர்க்காரர்கள் தான் என்ன பேசிக் கொள்வார்கள்?

அப்பா கவலை தோய்ந்த முகத்துடன் தாழ்வாரத்தில் அமர்ந்திருந்தார். அம்மா அந்த ஓவல்டின் டப்பாவை — அவளது உண்டியல் பெட்டியை — எடுத்து வந்து அப்பா முன்னால் வைத்தாள்.

"ஒங்க அம்மா மனசு எப்படி இருந்தாலும் சரி, என் மனசிலே ஒண்ணும் கிடையாது.. இதிலே இருக்கிற காசை எடுத்துக் கொண்டு காணாததற்கு வேறு எப்படியாவது பணம் பார்த்து விசேஷத்தை நடத்த வேண்டியதுதான். கவலைப்பட்டு என்ன ஆகப்போகிறது" என்றாள் அம்மா.

அப்பா ஒன்றும் பேசாமல், இரும்புக் கம்பி ஒன்றை எடுத்து வந்து, பெட்டியை உடைத்துத் திறந்து, மூடியை வீசி எறிந்தார். டப்பாவைக் தரையில் கவிழ்த்தினார்.

"ஆ!" என்று வாயைப் பிளந்தாள் அம்மா. திக்பிரமை பிடித்தது போல் ஆனார் அப்பா. நான் இருவருடைய முகங்களையும் மாறிமாறிப் பார்த்தேன். பிறகு தரையைப் பார்த்தேன். தங்கச் சவரன்கள் பளபளத்தன.

"இது எங்கிருந்து?" என்று ஏக காலத்தில் கேட்டார்கள் அம்மாவும் அப்பாவும்.

பதில் சொல்லப் பாட்டி அங்கே இல்லை. மொத்தம் பதினேழு தங்கச் சவரன்கள் அந்த டப்பாவிலிருந்து கிடைத்தன.

17. குமுதவல்லி!

“செண்பக சுந்தரியும் வில்வநாதனும் சந்தித்து விட்டார்களா?” என்று ஒரு கணம் நினைத்தார் திவான்பகதூர் செந்தில்நாயகம்!

‘இந்த ஓவிய சுந்தரனும், அந்த நாட்டிய சுந்தரியும் இந்தச் சுந்தரவனத்திலே சந்தித்து விட்டால் பிறகு என்ன ஆகும்?’ என்று மேலே யோசித்தார் திவான்பகதூர்.

‘இது இவர்களுடைய முதலாவது சந்திப்பு இல்லை. இந்த நால்வரும் நின்று பேசிக் கொண்டிருக்கிற விதத்தைப் பார்த்தால், வில்வநாதனும் செண்பகசுந்தரியும் இதற்கு முன்பே பலமுறை சந்தித்துப் பழகியுள்ளது போல் அல்லவா தோன்றுகிறது!’ என்று நினைத்தார் செந்தில்நாயகம்.

ஆம்; அவர் நினைத்ததில் தவறில்லை. இயற்கையழகும், தென்றலின் இங்கிதமான சுகமும், பறவைகளின் இனிய கீதமும் நிரப்பிய அந்த நந்தவனத்திலே, ஏகாந்தமான சத்திரத்தில் உட்கார்ந்து ஓவியங்களுக்கு எண்ணங்கள் தேடிக் கொண்டிருந்த வில்வநாதனின் செவிகளிலே இனிமையும் கவர்ச்சியும் இணைந்த குரலிலே இசைப் பாடல் மிதந்து வந்தது நமக்குத் தெரியும். ஒலி வடிவமாக வந்த பாடல் பிறகு



மனித வடிவிலே அவன் கண் முன்பு நடந்து வந்ததையும் நாம் அறிவோம். இதன்பிறகு அவர்கள் இருவரும் அந்த நந்தவனத்திலே ஒருவரை யொருவர் பார்த்தார்கள். பேசினார்கள். ஓவியங்களுக்கு எண்ணம் தேடிய சித்திரக்காரன், காடும் மலையும் தேடிய பொருள் கண் முன் வந்து நின்றது என்று களிப்போடு சொன்னான்! அதெல்லாம் நமக்குத் தெரிந்த நிகழ்ச்சிகள். ஆனால் செந்தில்நாயகம் அறிவாரா அவற்றை?

சித்திரங்களுக்குக் கற்பனை தரக்கூடிய பாடல்களைக் கேட்க வேண்டுமானால், தனது அன்னையிடம் ஏராளமாக உண்டு என்று சொன்னாள் அல்லவா செண்பகசுந்தரி! அப்படிச் சொன்னவள் தானே, வில்வநாதன் அவளுடைய வீட்டுக்கு வருவது குறித்து ஏதோ ஒரு விதமாகத் தயங்கித் தயங்கி வார்த்தைகளை இழுத்தாள்!


வில்வநாதன் கேட்டான். "சுந்தரி! உன்னுடைய வீட்டுக்கு நான் வருவது குறித்து யார் என்ன ஆட்சேபணை சொல்லக் கூடும்?"

"வேறு யாரும் எவ்வித ஆட்சேபமும் சொல்ல வேண்டியதில்லை. நானேதான் சொல்லுகிறேன், நீங்கள் அங்கு வருவது நல்லதில்லை என்று!"

இவ்வாறு செண்பகசுந்தரி சொன்னதும் ஒரே திகைப்போடு வில்வநாதன் கேட்டான்:

"சுந்தரி! நீ சொல்வது எனக்கும் புரியவில்லையே! நான் உனது வீட்டுக்கு வருவது யாருக்கு நல்லதில்லை. உனக்கா? அல்லது எனக்கா?"

"இருவருக்குமே தான்! அந்த வீட்டின்





சூழ்நிலையும் அங்கே வந்து போகிற மனிதர் கூட்டமும் உங்களுடைய நன்மைக்கு நல்லதாக இராது!''

இவ்வாறு சொன்னாள் சுந்தரி. வில்வ நாதன் கேட்டான்:

''சுந்தரி! நான் அங்கே வருவதனால் உனக்கு எந்த விதத்தில்....''

''எனக்கா? நீங்கள் இப்பொழுது என்னைப் பற்றியும் எங்கள் அம்மாவைப் பற்றியும் நினைத்துள்ள நல்ல அபிப்பிராயம் மாறிவிடக் கூடும்! கலையும், தெய்வப் பாடல்களும், கற்பனை உயர்வும் இப்படிப்பட்ட ஒரு சூழலிலா போய் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன என்று நீங்கள் வருந்துவீர்கள்!''

இப்படிச் சொல்லும் போது செண்பக சுந்தரியின் குரலில் துன்பம் இழைந்தோடியது.

''சுந்தரி! நீ சொல்கிற வார்த்தைகளின் அடிப்படையான கருத்து எனக்குப் புரிகிறது. ஆனாலும் ஒன்று உனக்குச் சொல்ல வேண்டும். உனது மன நிலைமையையும், நீ சொல்லுகிற அந்தத் துயரச் சூழ்நிலையையும் ஒருவாறு என்னால் ஊகித்துக் கொள்ள முடிகிறது. அதனால் தான் சொல்லுகிறேன், நான் கட்டாயம் அங்கே வரவேண்டும்! இத்தகைய அபூர்வமான குரலும், இத்தனை பண்பாடும் படைத்துள்ள நீ, எந்தச் சூழ்நிலையில் இருந்து, எப்படி உன்னை நீ காப்பாற்றிக் கொள்ளுகிறாய், எப்படி உனது கலையை நீ வளர்த்துக் கொள்ளுகிறாய் என்பதை நான் நேரிலே காண வேண்டும் என்று என் உள்ளத்தில் ஒரு விசித்திர ஆசை உண்டாகிறது. என்னோடு நீ பேச ஆரம்பித்துச் சில விநாடிகளே ஆகின்றன. ஆனாலும் இத்தனை சுதந்திரத்தோடு உன்னிடம் வாதாட ஆரம்பித்து விட்டேன். அதற்காக என்னை மன்னித்து விடு!''

இப்படிச் சொன்னான் வில்வநாதன்.

''மன்னிப்பதா! நானா! உங்களையா! அப்படியெல்லாம் பேசாதீர்கள்! விநாடிகளென்றும், நாழிகைகள் என்றும், நாட்கள் என்றும் சொல்லுவது எனக்குப் பிடிக்கவில்லை. உங்களைப் பார்த்துப் பேச ஆரம்பித்ததிலிருந்து, எனக்கும் ஒரு விசித்திரமான உரிமையுணர்ச்சி மேலிடுகிறது. அதனால்தான் நானும் இப்படியெல்லாம் பேசுகிறேன்—''

''சுந்தரி! விநாடி, நாழிகை, நாள் என்றெல்லாம் கணக்கிட்டுப் பேசுவது என்பது இந்த வெளியுலகத்தைப் பற்றித் தான். உள்ளம் என்ற உணர்ச்சியுலகிலே அப்படிப்பட்ட கணக்குகள் கிடையாது! ஒரு விநாடியும், ஒரு நாழிகையும், ஒரு நாளும், ஒரு வாரமும் எல்லாம் உள்ளம் என்ற உலகத்தில் ஒரு யுகமாக மாறுகின்றன! இதய உணர்ச்சிகளைக் கொண்டு பார்க்கும்போது, ஒரு விநாடி ஒரு யுகமாகத் தோன்றுவதும், ஒரு யுகம் ஒரு விநாடியாகத் தோன்றுவதும் இயல்பு! அன்பு என்ற உணர்ச்சி ஒரு விநாடியின் பழக்கத்தை ஒரு யுகத்தின் பழக்கமாக, ஜன்ம ஜன்மாந்திரத் தொடர்பாக மாற்றி விடக் கூடியது! சுந்தரி, நான் ஏதேதோ சொல்லுகிறேன். எனக்கே தெரிகிறது, ஒரு மயக்கத்தில், ஒரு போதையில் பேசுகிறேன் நான்!''

இருவரும் மௌனமாக நின்றார்கள். அந்த மௌனத்திலே சொற்கள் இல்லை. ஆனால் ஜன்ம ஜன்மாந்திர வாசனையை நுகர்ந்தது போல் இருவரும் பார்த்துக் கொண்டே நின்றார்கள். பிறகு செண்பக சுந்தரி சொன்னாள்:

''ஓவிய நாதரே! உங்களுடைய விருப்பம் அப்படியிருக்குமானால் நான் அதற்கு மேல் என்ன சொல்வேன்! நீங்கள் எங்கள் வீட்டுக்கு வரலாம்! அதற்கு முன்பு அன்னையிடம் உங்களைப் பற்றிச் சொல்லி அவளுடைய சம்மதத்தையும் கேட்டுக் கொண்டு விடுகிறேன். அதன் பிறகு உங்களை அழைத்துச் செல்லுகிறேன்....''

இவ்வாறு சொல்லிவிட்டு நடந்தாள் செண்பகசுந்தரி.

மறுநாள், அதற்கு மறுநாள், மூன்றாம் நாள் — ஒவ்வொரு மாலை நேரமும் செண்பகக் காட்டின் நந்தவனத்திலே இருவரும் சந்தித்தார்கள். பேசினார்கள். பிரிந்தார்கள். குகையும், கோவிற் சுவர்களும் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே மௌனமாக இருந்தன! சித்திர வேலை நடக்கவில்லை!

ஒரு வாரம் கழிந்து ஒரு நாள் செண்பகசுந்தரி வந்து வில்வநாதனை மலையடிவாரத்திலிருந்த தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்!

செண்பக வனத்துக் கோவிலுக்குச் செல்லுகிற மலைப்படிகளுக்கு அருகிலே, ஒரு சிறு பிள்ளையார் கோவில் இருந்தது. அந்தக் கோவிலிலே தொடங்கி நீளமாக ஓடியது ஒரு தெரு. அந்தத் தெருவிலே பரம்பரை பரம்பரையாகப் பல வழிபாட்டுக் கைங்கரியங்கள் செய்து வந்த குடும்பத்தினர் குடியிருந்தார்கள். அந்தத் தெருவின் கோடியிலே தென்வடலாக ஒரு சிறு தெரு திரும்பியது. அந்தச் சிறிய தெருவிலேதான் இருந்தது குமுதவல்லியின் வீடு.

வில்வநாதன் அந்த வீட்டுக்குள் நுழையும் போதே அதனுடைய கலையமைப்பு அவனைக் கவர்ந்தது! தெரு வாசலில் கோலம் போட்டிருந்தார்கள். படிகளில் ஏறி உள்ளே செல்லும்போது, நிலைக்

வாட்டர்பரீஸ்
சிவப்பு லேபில்
காம்பவுண்ட்
இருமல்,
ஜலதோஷங்களுக்கானது



நான்கு நல்ல காரணங்கள் இதோ

1 இருமலையும், ஜலதோஷத்தையும், இமைப்பொழுதில், கச்சிதமாகக் களைக்கிறது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்.	**2** கபம் அறுத்து, நுரையீரலைச் சுத்தப்படுத்தும் கிரியோஸோட், க்வயகால் அடங்கியது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்.	**3** வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் வெறும் நோய் நிவாரணி மட்டுமல்ல; நம்பிக்கைக்குகந்த டானிக்குமாகும். நோயை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு உதவுகிறது.	**4** வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் பசியைத் தூண்டுகிறது. ஜீரண சக்தியை வளர்க்கிறது. ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது. தாதுப் பொருள் நஷ்டத்திற்கு ஈடுசெய்கிறது.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
சிவப்பு லேபில்

வார்னர்-லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)

கதவுக்கு இரு புறமும் சித்திர வேலைப் பாடுகளும் தாமரை மலர் போன்ற மர வேலைப்பாடும் கொண்ட குடுமிக் கதவு அழகாக நின்றது. நிலைவாசலின் தலைப் பிலே, யாரோ ஒரு கைதேர்ந்த மரச் சிற்பி அன்னப் பறவை நடந்து செல் வதை மிக நேர்த்தியாக மரத்திலே செதுக்கியிருந்தான்!

வில்வநாதனும் செண்பகசுந்தரியும் உள்ளே நுழையும்போதே, வெள்ளை வெளேர் என்ற தூய நிறத்தில் ஜடை ஜடையாக மேலெல்லாம் வளர்ந்து தொங்கிய ஒரு சிறு நாய்க்குட்டி,மேலே தாவி வாலை ஆட்டிக் கொண்டே சுற்றிச் சுற்றி வந்தது. செண்பக சுந்தரியையும் வில்வநாதனையும் மாறி மாறி மோப்பம் பார்த்துக் கொண்டே, 'குபீர்' என்று செண்பக சுந்தரியின் தோளுக்கு மேலே ஏறிக் குதித்து உட்கார்ந்து கொண்டது. 'ராஜா ராஜா' என்று அதைக் கொஞ் சிக்கொண்டே, தனது கன்னத்தோடு சேர்த்துப் பிடித்துக் கொண்டே வீட்டி னுள் நுழைந்தாள் சுந்தரி!

பெரிய கூடம். 'பட்டாசாலை' என்று அழைக்கப்பட்ட அந்தப் பெரிய கூடத் தில் அழகழகான சோபாக்களும், திண்டு மெத்தைகளும், தந்தப் பிடிகள் பதித்த நாற்காலிகளும் இருந்தன! ஒரு மூலையில் 'மஞ்சட் கடம்பு' மரத்தி னால் செய்த ஒரு பெரிய மேஜை. அதன் மேல் சலவைக் கல்லினால் செய்யப்பட்ட கலைமகள் சிற்பம் அமர்ந்து கொண்டிருந் தது! வெள்ளைத் தாமரைப் பூவில் வீணையும் கையுமாக வீற்றிருக்கும் கலை மகள், சலவைக் கல்லிலே வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணி பூண்டு காட்சி தந்தாள். இன்னொரு ஓரத்தில் நடராஜருடைய வெண்கலச்சிலை ஒன்று கம்பீரமாக நின்றது. திருவாசியின் பரப்பும், ஜடையின் விரிவும், நடனத் தோற்றமும் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. எத்தனையோ பல ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்த ஒரு பழைய தமிழ்ச் சிற்பி உருவாக்கி நிறுத்திய வெண்கலப் படிவம் அது என்பது, அந்த வார்ப்பிலே தெரிந்தது! இதற்குச் சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய 'தோதகத்தி' மேஜையின் மேல், உறை போட்டு மூடிய ஒரு பெரிய வீணை வைக் கப்பட்டிருந்தது. வில்வநாதன் அந்தக் கூடத்தின் மத்தியிலே நின்று சுற்று முற்றும் பார்த்தான். சுவர்களில் எல் லாம் அழகழகான வண்ண ஓவியங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற் றில் பல, பெரிய பிரமுகர்களின் முழு நீள ஓவியங்கள்! பலர் கையிலே உடை வாளை ஏந்தி நின்றார்கள். சிலர் குதிரை யிலே ஏறிச் சென்று கொண்டிருந்தனர். வேறு சிலர் "தர்பார்" கூட்டிச் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார்கள்! ஜமீந்தார்கள், அந்தக் காலத்துச் சிற்றரசர்கள், அந்த வட்டாரத்துப் பிரமுகர்கள், பண்ணையார்கள் ஆகி யோருடைய படங்கள் அவை என்று வில்வநாதனுக்குப் பட்டது.

அந்தக் கூடத்தின் மத்தி ஒரு பெரிய நடன மன்றத்தைப் போல் விசாலமாக இருந்தது. மேல் தளத்துக்கு அருகில், நாலு புறமும் நீளம் நீளமான சாள ரங்கள் விட்டிருந்தார்கள். காற்றும் வெளிச்சமும் அந்தச் சாளரத்தின் வழி யாகக் குதி போட்டுக் கொண்டு வந்தன. மேல் தளத்திலிருந்து அழகழகான வெண்கலச் சங்கிலிகளிலே பல பல வர்ணங்களில் 'லஸ்தர்' 'குளோப்பு கள்' தொங்கின. அவற்றிலிருந்து சரம் சரமாகப் பலப் பல நிறத்திலே கண்ணாடிப் பட்டைகளும், கோணங் களும், காற்றிலே 'கல கல' என்று அசைந்தவாறு பல பல வர்ணக் கோலங் களை அள்ளி வீசிக் கொண்டிருந்தன!

'கற்பனையே இல்லாத ஒரு மர மனித னுங்கூட இந்த இடத்துக்கு வந்தால் அப்படியே இதயம் நெகிழ ஆரம்பித்து விடுவான் போலிருக்கிறதே!' என்று எண்ணமிட்டான் வில்வநாதன்!

"உள்ளே வாருங்கள்! அம்மா கூப்பிடு கிறார்கள்!" என்றாள் சுந்தரி.

கூடத்தைத் தாண்டி, உள் கட்டை யும் கடந்து சென்றான் வில்வநாதன்.

"வாருங்கள்!" என்று குரல் கேட் டது. மெல்லிய குரல்தான். ஆனாலும் என்ன இனிமை!

கைகளைக் கூப்பிக் கொண்டே அறை யினுள் நுழைந்தான் வில்வநாதன்.

விசாலமான அறை. அதில் ஒரு பெரிய சாய்வு நாற்காலியில் கால்களைச் சரித்துக் கொண்டு வளைந்து சாய்ந்து கொண்டிருந்தாள் குமுதவல்லி.

"என்னால் எழுந்திருக்க முடியாது. மன்னிக்க வேண்டும்!" என்று சொல்லிக் கொண்டே அருகிலிருந்த நாற்காலியைக் காட்டினாள் தாயார்.

நாற்காலியில் உட்கார்ந்துகொண்டே குமுதவல்லியின் முகத்தைப் பார்த் தான் வில்வநாதன்.

ஐம்பது அல்லது ஐம்பத்தைந்து வயது இருக்கலாம். முகத்தில் அதிகமான சுருக்கங்கள் இல்லை. தெளிவான முகம். அகன்ற கண்கள். செண்பகசுந்தரியிடம் கண்ட அதே நெற்றி. சுருண்ட கூந்தல். நேர் வகுடு எடுத்து, அந்த வகுட்டுக்கு நேரே நெற்றியில் ஒரு பெரிய குங்குமத் திலகம் கிடந்தது. எந்த முதுமையிலும் ஒளி வீசுகிற எழிலானது முகத்திலே பரபரத்தது! தொடர்ச்சியாகப் பல

நாட்கள் வாத நோயிலே முடங்கியிருந்த காரணத்தால், உடம்பில் மெதுவாக ஒரு நடுக்கம். குரலிலும் அந்த நடுக்கம் இழைந்தது. மற்றப்படி அந்தக் கண்கள் ஒரு நாளும் மாறாத கூர்மையோடு எழுந்து நின்று பேசின.

''சுந்தரி சொன்னாள் உங்களைப் பற்றி, மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நீங்கள் இங்கே வந்ததைப் பற்றி இரட்டிப்பு மகிழ்ச்சி!''

வார்த்தைகளை நாடகமேடையிலே தோன்றுகிற கதாபாத்திரங்களைப் போல, மிகவும் திருத்தமாகப் பேசினாள் குமுதவல்லி. வாக்கியங்களை எங்கெங்கே நிறுத்த வேண்டும், எங்கு வளைத்து நெளிவு கொடுக்க வேண்டும் என்பதில் எல்லாம் அபாரமான ஒரு கணக்கு!

வில்வநாதன் புன்முறுவல் செய்து கொண்டே, தாயாரின் நெற்றியிலே ஓடுகிற உணர்ச்சிக் கோடுகளை ஓவியக் கண்ணோடு ஆராய்ந்தான்.

'சுந்தரியின் அன்னைதான் இவள்! முகத்தின் சாயலும், கண்களின் கூர்மையும், நெற்றியின் வளைவும் அப்படியே இருக்கின்றன. ஆனால் ஒரு மாறுதல். ஒரு வித்தியாசம். செண்பகசுந்தரியிடம் இல்லாத ஏதோ ஓர் அம்சம், அதிகப்படியான ஏதோ ஒன்று இந்த முகத்திலே தெரிகிறது. அது என்ன?'

இவ்வாறு யோசித்தான் வில்வநாதன்.

''சுந்தரி! என்ன பேசாமல் நிற்கிறாய்!'' என்று சுந்தரியைப் பார்த்துக் கேட்டாள் தாயார். அப்போது அந்த முகத்தைக் கூர்ந்து பார்த்தான் வில்வநாதன். பனிக் கட்டியும், பஞ்சுமாக இழைந்த அந்த முகத்தில், இப்பொழுது தெளிந்த கோபக் கோடுகள் முற்றிலும் வேறுவிதமாக இருந்தன! கோபம்தான், ஆனாலும் அந்தக் கோபத்தின் பின்னணியில் ஏதோ ஒரு வெறுப்பு, ஒரு கசப்பு, நெளிந்தது! இதைக் கவனித்தான் வில்வநாதன்.

''அசடு இப்படி நின்றால் எப்படி? உள்ளே போய் ஒரு தட்டிலே பழமும் பாலும் கொண்டு வா!'' என்றாள் தாயார் மகளைப் பார்த்து!

தன்னை உபசரிக்கவில்லை என்பதற்காகவா குமுதவல்லி இவ்வளவு கோபத்தை முகத்திலே ஓட விடுகிறாள்! தன்னைத் திருப்திப் படுத்துவதற்காகவா இப்படி அந்தக் கோபத்தை அதிகமாக வெளிக் காட்டுகிறாள்! மேடை நாடகத்தில் 'அதிகப்படியான' நடிப்பு என்பார்களே, அப்படியா இது? அல்லது உண்மையிலேயே மகளிடம் அவளுக்கு அதிருப்தியா?

இப்படி யோசித்துக் கொண்டிருக்கும் போதே, குமுதவல்லி வில்வநாதனைப் பார்த்துக் கூறினாள்:

''வீட்டுக்கு வருகிற விருந்தாளிகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற மரியாதையே இவளுக்குத் தெரியவில்லை! என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்! வயது பதினெட்டு இருபது ஆகிறது! இவள் வயதில் நான் இப்படியா இருந்தேன்! ஒரு பெரிய கல்யாணத்தையே நடத்தி வைத்து, சம்பந்திகளையெல்லாம் குளு குளுப்பாகத் திருப்திப் படுத்தி அனுப்பி விடுவேன் என்று, எங்கள் அம்மா பெருமையோடு சொல்லுவாள் அந்தக் காலத்தில்! நமக்கு இப்படி ஒரு அவதாரம் வந்து தோன்றியிருக்கிறது!''

இவ்வாறு ஒரு போடு போட்டாள் குமுதவல்லி! செண்பகசுந்தரி உள்ளே சென்று ஒரு வெள்ளித் தட்டில் பழங்களும், ஒரு வெள்ளிக் கோப்பையில் பாலும் கொண்டுவந்தாள். வில்வநாதன் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு அருகிலே நின்று தயங்கினாள். தாணத் திறல் அவளுக்குக் கை நடுங்கியது.

''அட அசட்டுப் பெண்ணே! அந்த முக்காலியை எடுத்து எதிரே வை! அதில் தட்டையும் பாலையும் வைத்து விட்டு, ஒரு தம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து வை. ஒவ்வொன்றும் நான் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்! எத்தனை நாளைக்கு நடக்கும் இது? நீங்களே சொல்லுங்கள் தம்பி! நாளை நான் கண்ணை மூடி விட்டால், இதெல்லாம் யார் சொல்லிக் கொடுப்பார்கள் பக்கத்திலிருந்து!''

இவ்வாறு கடிந்தாள் குமுதவல்லி. வில்வநாதனுக்கு மனத்தில் என்னவோ செய்தது.

''அப்படியெல்லாம் நொந்து கொள்ளாதீர்கள். உங்களுடைய சாமர்த்தியம் அவளுக்கு வராமல் போய் விடுமா என்ன! வரும். ஆனாலும் இப்பொழுது சிறு பெண்தானே அவள்!''

இவ்வாறு ஏதோ சொல்ல முனைந்தான் வில்வநாதன். அவனுக்கே அந்த வார்த்தைகளின் பொருள் தெரியாது! அப்படிப் பேசினான் வில்வநாதன்! பனிச்சென்று மின்னல் போன்று அதற்குப் பதில் வந்தது.

''என் சாமர்த்தியமா? இவளுக்கா? அதற்கு இன்னொரு ஜன்மம் எடுக்க வேண்டும் இவள்! தம்பி, அவ்வளவுக்கு நான் புண்ணியம் செய்யவில்லை! இந்த வயதில் வராத சாமர்த்தியம் பிறகு எப்போது வரப் போகிறது! அஞ்சில் வளையாதது அம்பதில் வளையுமா என்ன! அதன் தலையில் எழுதியது அவ்வளவு தான், தம்பி!''

உள்ளே போய் ஒரு தம்ளரில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து, அதை

முக்காலியிலே வைத்தாள் செண்பக சுந்தரி! அவளுடைய முகத்தைப் பார்த்தான் வில்வநாதன். இரண்டு கண்களிலும் இரண்டு துளிக் கண்ணீர் உருண்டு நின்று ஆடியது! தாயாருடைய பேச்சு அந்த மலர் போன்ற இதயத்தை என்ன பாடு படுத்துகிறது என்பதை, வில்வநாதனால் கண்டு கொள்ள முடிந்தது. மறுபடியும் ஏதோ சமாதானம் சொல்ல நினைத்தவனுக்கு வார்த்தைகள் வரவில்லை!

தட்டிலிருந்த பழங்களைப் பார்த்துக் கொண்டே யோசனை செய்தான் வில்வநாதன்.

மகளுக்கும் அன்னைக்கும் நடுவில் ஏதோ ஒரு பெரிய மனத் தாங்கல் இருந்து வருகிறது என்பதை, அவனால் தெளிவாக ஊகிக்க முடிந்தது. அன்னையின் மனப் போக்கோடு இசையாத ஒரு மகளாகவே, செண்பக சுந்தரி அந்த வீட்டில் வளருகிறாள் என்பதை வில்வநாதன் உணர்ந்து கொண்டான். அந்தப் பழங்களை அவன் சாப்பிடவில்லையென்றால், அதற்காக மறுபடியும் ஒருமுறை சுந்தரிக்குப் பேச்சு கிடைக்கும் என்று எண்ணியவனாக, மலைப் பழங்களில் ஒன்றை எடுத்துஉரித்தான்வில்வநாதன்.

''பழங்களைத் தட்டில் வைப்பதற்கு முன்பு, அவற்றை உரித்து வைக்க வேண்டும் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். தம்பி, இந்த அசட்டுப் பெண்ணுக்கு என்ன சொன்னாலும் எத்தனை தரம் சொன்னாலும் ஒன்றும் தெரிவதில்லை!''

இப்படி ஒரு போடு போட்டாள் குமுதவல்லி. வில்வநாதனுக்கு உடம் பெல்லாம் ஜில்லிட்டது!

செண்பக சுந்தரி இதற்கு மேல் அந்த இடத்தில் நிற்கவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டே பக்கத்து அறைக்குள்ளே சென்று மறைந்தாள். வில்வநாதனுக்கு அவன் சாப்பிட ஆரம்பித்த பழங்கள் கசந்தன! உள்ளத்தில் ஆற்றொணாத வேதனை கருண்டது. ஆனாலும் எதுவும் பேச இயலாதவனாக, செண்பக சுந்தரியின் அமைதியை உத்தேசித்து அந்தப் பழங்களைச் சாப்பிட்டுப் பாலையும் குடித்துத் தீர்த்தான்! இத்தனை துயரங்களையும் காண்பதற்கும், அனுபவிப்பதற்குமாகவா, இந்த வீட்டுக்கு இன்று வந்தோம் என்று வில்வநாதன் இதயம் கலங்கினான்.

''பாருங்கள்! விருந்துக்கு வந்தவர்களை அழைத்துக் கொண்டு வந்து இங்கே உட்கார வைத்து விட்டு, அவள் அறைக்குள்ளே போய் இருந்து கொண்டாள் பாருங்கள்! செண்பகம், செண்பகம், அசட்டுப் பெண்ணே!''

இவ்வாறு கூப்பிட்டாள் குமுதவல்லி! உடம்பெல்லாம் பதறிக் கொண்டே வெளியே வந்தாள் செண்பக சுந்தரி! வில்வநாதன் அவளுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அழுது அழுது சிவந்து போன கண்கள்! வடிந்த கண்ணீரை யெல்லாம், வெளியே தெரியாமல் மறைப்பதற்காக முந்தானையால் துடைத்துத் துடைத்துச் சிவந்துபோன கன்னங்கள்! அப்படியே ஒடுங்கி ஒதுங்கி வந்து நின்றாள் செண்பகசுந்தரி!

''அவருக்கு ஏதோ பாட்டுக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னாயே! அதனால்தான் அறைக்குள்ளே போய் உட்கார்ந்து கொண்டாயாக்கும்! அந்தத் தம்புராவை எடுத்துக் கொண்டு வைத்து இரண்டு பாட்டுப் பாடு. அவர் கேட்கட்டும்!''

அதிகாரமான குரலில் இப்படி ஒரு கட்டளை வந்தது தாயாரிடமிருந்து. வில்வநாதன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு மிருந்த தைரியத்தை வரவழைத்தவனாகப் பேச ஆரம்பித்தான்.

''அம்மா! அவள் பாடிக் கேட்க வேண்டும் என்று நான் வரவில்லை. உங்களுடைய பாடாந்தரங்கள் சிலவற்றைக் கேட்க வேண்டும் என்றுதான்.....''

இப்படி அவன் பேசத் தொடங்குவதற்குள் குமுதவல்லி இடைமறித்தாள்.

''அவள் பாட்டைக் கேட்க வரவில்லையல்லவா நீங்கள்! நன்றாகச் சொல்லுங்கள் அதை! பத்துத் தடவை சொல்லுங்கள் அதை! மற்றவர்கள் கேட்கும்படி அவள் பாடினால் தானே! வீட்டுக்குள்ளே யிருந்து முனகிக் கொண்டேயிருந்தால், பாட்டு எப்படி வரும்? வாய் விட்டுப் பாடு, வாய் விட்டுப் பாடு என்று எத்தனை தடவை சொல்லி என்ன பிரயோஜனம்! வாய் விட்டுப் பாடி விட்டால், இந்த வீட்டுக்கு வருகிறவர்களெல்லாம் கேட்டு விடுவார்களாம்! இவள் பாடுவது அவர்கள் காதில் விழக் கூடாதாம்! இப்படி ஒரு பிடிவாதம் இவளுக்கு...!''

இவ்வாறு சொன்னாள் குமுதவல்லி. வில்வநாதனுக்கு எதைப் பேசுவது, எதைப் பேசாமல் இருப்பது என்றே புரியவில்லை. எதற்காக வந்தோம் என்று வருந்த ஆரம்பித்தான் அவன்!

''தம்பி! எனக்கோ உடம்பு ஆகவில்லை. பாட ஆரம்பித்தால் குரல் நடுங்குகிறது. எங்கள் அம்மா எனக்கு ஆயிரம் பாட்டுச் சொல்லிக் கொடுத்தாள். அத்தனையும் என்னோடு சரி! அதில் பாதிகூட இவள் பாடம் பண்ணிக் கொள்ளவில்லை. இந்தப் பரிதாபத்தை யாரிடம் சொல்ல? நமக்கு மூலதனம் சங்கீதம்! அதை இவ்வளவு அலட்சியம் பண்ணினால் எப்படி?''

இவ்வாறு குமுதவல்லி சொன்னதும் வில்வநாதனுக்கு ஆத்திரம் வந்தது.

''அம்மா! உங்களிடம் மறுத்துப் பேசுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும்! செண்பக சுந்தரியின் மற்றக் குறைபாடுகளை நீங்கள் எப்படிச் சொன்ன போதிலும், அவளுடைய சங்கீதத்தைப் பற்றி மட்டும் தயவு செய்து அப்படிச் சொல்லாதீர்கள். அவள் பாடிய ஒரு பாட்டுத்தான் என்னை இவ்வளவு தூரம் வியப்புக் கொள்ளும்படி செய்தது. உண்மையில் நான் இங்கு வந்ததற்குக் காரணமே அவள் சங்கீதமும், அவளுடைய—''

''சொல்லுங்கள்! அவளுடைய சங்கீதமும் அவளுடைய சாமர்த்தியமுந்தான்! அப்படித்தானே!''

இவ்வாறு சொல்லி விட்டு ஒரு சிரிப்புச் சிரித்தாள் குமுதவல்லி. அப்போது அவளுடைய முகத்தைப் பார்த்தான் வில்வநாதன். அதில் வெறுப்பு இல்லை. அதில் கோபம் இல்லை. மகளுடைய சங்கீதத்தைப் பற்றி ஒரு பெருமை கூட அந்த முகத்திலே தெரிந்தது. அப்படியானால் இத்தனை நேரமும் ஏன் இவ்வளவு கோபமாக அவள் பேசினாள்?

வில்வநாதன் நினைத்தான்: குமுதவல்லிக்குத் தனது மகளிடம் ஏற்பட்டுள்ள இந்த வெறுப்புக்கு வேறு ஏதோ ஓர் அடிப்படையான காரணம் இருக்க வேண்டும்! வெளியே இவ்வளவு கடுமையாகப் பேசிய போதிலும், குமுதவல்லியின் மன அந்தரங்கத்தில் மகளுடைய சங்கீதத் திறமையைப் பற்றி எவ்விதமான குறைபாடும் இல்லை. அப்படியானால் இந்தக் கோபத்துக்கும், இந்தக் கண்டனத்துக்கும் அவசியமான ஒரு காரணம் என்ன? ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தில் தாயாருக்கும் மகளுக்கும் மனத்தாங்கல் இருந்து வருகிறது போலும்! ஆம்; ஒருவேளை இருவருடைய வாழ்க்கை இலட்சியங்களும் வெவ்வேறு திசையில் செல்லுகின்றனவோ? இதைப்பற்றித்தான் அன்று கம்பர் குறிப்பாகச் சொன்னாரோ?

இப்படி யோசித்துக் கொண்டிருக்கும் போதே, வாசலில் யாரோ வருகிற குரலோசை கேட்டது. ஜடை நாய்க் குட்டி ஒரே பாய்ச்சலாக உள்ளே வந்து ஒரு குதி குதித்து விட்டு, குமுதவல்லியின் எதிரிலே உடம்பை வளைத்துப் 'படபட' என்று சுடக்குப் போட்டு விட்டு, மறுபடியும் ஒரே குதியாக வெளியே பாய்ந்து ஓடியது. ஒரு விநாடியில் அந்த நாய்க்குட்டி மறுபடியும் வெளியிலிருந்து அறையினுள்ளே குதித்தோடி வந்து, குமுதவல்லி உட்கார்ந்திருந்த சாய்வு நாற்காலியிலே போய் ஒரே உற்சாகத்தோடு தாவியது! (தொடரும்)


காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்



உன்னதமான காஷ்மீர் பொக்கே
யின் தரம், ஒரு அழகுசாதன டால்க்...
ஒரு குழந்தைக்கான பவுடர்
இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் பொக்கே டால்க்கின்
தனுமையான, பூவிதழ்போன்ற
மென்மையான ஸ்பரிசத்தை
நீங்கள் உணரும்பொழுது ஒரு
பூச்செண்டிற்குள் இருப்பது போலவே
தோன்றும். உடல் முழுவதும் தடவிக்
கொண்டு அதன் ஊற்றுப்பெருக்
கென எழும் புதிய நறுமணத்தில்
திளைத்து மகிழுங்கள்





குழந்தையை இதமுட
னும் சுகமுடனும் வை
த்திருங்கள். காஷ்மீர்
பொக்கே, எந்த ஒரு
விசேஷ குழந்தைக்
கான பவுடரைப்
போலவே, மிருதுவும்
பட்டுப்போன்றது
மானது. நீங்கள் இரு
வருமே உபயோகிக்
கக்கூடிய அவ்வளவு
சௌகரியமான ஒரே
பவுடர்!

காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

தலை அலங்கரிப்புக்குத் தகுந்த ஹேர் ஆயில்

பாரத மக்கள் சிறுவயதிலிருந்தே தங்கள் தலை அலங்கரிப்பில் எண்ணெய் தடவி தலை வாருவதில் மிகவும் ஈடுபடுகின்றனர். கூந்தல் மிகவும் அழகாகத் திகழ்வதற்கு மண்டைக்குள் செல்லத் தேவையான, நல்லதோர் ஹேர் ஆயில் அவசியம். ஆகையால்தான் மயிர்க்கால்களில் இயற்கையான எண்ணெயுடன் சேர்ந்து திகழச் செய்ய நல்லதோர் ஹேர் ஆயிலை உபயோகிக்கவேண்டும்.

டாடாவின் ஹேர் ஆயில்கள் கூந்தலின் அடிமண்டைக்குள் பாய்ந்து அவை அடர்த்தியாகவும் ஆரோக்கியத்துடனும் இருக்க உதவுகின்றன.

டாடாவின் கோகோனட் மற்றும் கேஸ்டர் ஹேர் ஆயில்கள் நறுமணம் வீசும்படி வாசனை கலக்கப்பட்டு மூன்று விதமான சைஸ்களில் கிடைக்கின்றன.



டாடாவின் ஹேர் ஆயில்கள்




THOY.15.TAM

தாயைக் காத்த தனயன்

காந்தன்



மூன்பு தேவர் பிலிம்ஸ் தயாரித்து வெளியிட்ட "தாய் சொல்லைத் தட்டாதே" என்ற படமே சில மாறுதல்களுடன் "தாயைக் காத்த தனய"னாக வெளி வந்திருக்கிறது. அதில் தனயனாக வரும் எம். ஜி. ராமச்சந்திரன் தான் இதிலும் தனயனாக வருகிறார். அதில் தாயாக வரும் கண்ணாம்பாதான் இதிலும் தாய். அதில் காதலியாக வரும் சரோஜா தேவிதான் இதிலும் காதலி. அதில் எம். ஆர். ராதா சரோஜா தேவியின் தகப்பன்; இதில் அண்ணன். அந்தப் படத்தில் சரோஜா தேவியை அடித்து விரட்டிய மாதிரியே இதிலும் கண்ணாம்பா அடித்து விரட்டுகிறார். அதில் வில்லனாக வந்த அசோகன் தான் இதிலும் வில்லன். தேவர் பிலிம்ஸ் தயாரிப்பு என்றால் புலி சிறுத்தைகளுக்குக் குறைச்சல் இல்லை என்பது பிரசித்தம். இந்தப் படத்திலும் ஆரம்பத்திலேயே புலி ஒன்று காளையை ஓட ஓட விரட்டுகிறது. பிறகு காளைக்கும் புலிக்கும் நேரடிச் சண்டை நடக்கிறது.



பார்த்த படத்தைப் பார்க்கிற மாதிரி இருந்தாலும், சரோஜா தேவியின் நடிப்பில் நல்ல மாறுதல் காணப்படுவது ஓர் ஆறுதல்.

புலியோடு நேருக்கு நேர் போர் புரியும்போது அதைக் கட்டிப் பிடித்துப் புரட்டிப் புரட்டி அடித்த புரட்சி நடிகரின் போர்ச் சாகசங்கள் மெய் சிலிர்க்கவைக்கின்றன.! தாயைப் புலியிடமிருந்து காப்பாற்றி, படத்தின் தலைப்பையும் காப்பாற்ற அந்தப் பயங்கரப் போர் அவசியமாகிறது.

டீக்கடை முதலாளியான எம். ஆர். ராதாவின் கத்தலுக்கும் கலாட்டாவுக்கும் இடையில் ஹாஸ்யம் கலந்த நடிப்பையும் சிறிது காண முடிகிறது. படத்தை ஒருவாறு பூர்த்தி செய்ய அவர் இருந்தாகவேண்டியிருக்கிறது. இருந்தாலும் ஏழை டீக்கடைக்காரர் வீட்டை அவ்வளவு பெரியதாகக் காட்டியிருக்க வேண்டாம்.



தமிழ்ப்பட உலக மாதாவான கண்ணாம்பாவின் நடிப்பைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?

எம். ஆர். ராதாவுக்கு இரட்டைவேடம்தந்து கதையில் ஏதோ விசேஷத் திருப்பம் கொடுத்திருப்பதாகக் கதாசிரியர் நினைத்துப் பெருமைப்பட்டால் அதில் தவறில்லை. ஏனென்றால் முடிவை நெருங்கிய கதையை நீட்டும் பெருமை அந்த இரட்டை வேடதாரியையே சாரும்.

இசையமைப்பில் இனிமையில்லை. புதுமையும் இல்லை. பாடல் இல்லாத இடங்களில் படம் தடங்கல் இன்றி ஓடுகிறது. "மூடித்திறந்த இமையிரண்டும் பார் பார் என்றன" என்ற பாட்டு 'கேள் கேள்' என்கிறது.



தாய்சொல்லைத் தட்டாதே, தாயைக் காத்த தனயன் படத்தில் புதிதாக மாறுதல் எதுவும் இல்லையென்றாலும், எம். ஜி. ராமச்சந்திரன் "எம்.எல்.சி. எம். ஜி. ஆர்" ஆக வந்திருப்பது வரவேற்க வேண்டிய மாறுதலில்லையா?



ஸர் பி. எஸ். சிவசாமி அய்யர்

நமது ஒப்பற்ற இந்திய ராணுவ வீரர்கள் என்றென்றும் பெருமையுடன் போற்றி வரத் தகுந்த சான்றோர் பலர் நாட்டில் உண்டென்றால், அவர்களில் காலஞ்சென்ற ஸர் பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்களும் ஒருவர்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ராணுவத்தில் பெரிய பதவிகள் மட்டுமல்லாமல், அடித்தளத்திலுள்ள பதவிகளைக் கூட இந்தியர்களுக்கு வழங்காமல் பிரிட்டிஷ்காரர்களையே நியமித்து வந்தார்கள். ஸர். சிவசாமி அய்யர் இந்தப் பாரபட்சங்களைக் கண்டித்தார். ''இந்திய ராணுவ வீரர்கள், உலகத்தில் எந்தத் தேசத்து வீரர்களுக்கும் தாழ்ந்தவர்களல்ல. அவர்களுக்குத் தொன்றுதொட்டு சரித்திரப் புகழ் உண்டு. எனவே, படைகளில் அவர்களுக்கு உரிய அந்தஸ்து அளிக்க வேண்டும்'' என்று ஒரே பிடிவாதமாக இந்தியாவிலிருந்த சேனாதிபதியுடனும், இங்கிலாந்திலுள்ள காரியாலயத்துடனும் போராடினார். பிரிட்டிஷ் ஆட்சியினர் இதைக் குறித்துச் சற்றுக் கலக்கமடைந்தாலும் அய்யர் அவர்கள் மீது சீற்றம் கொள்ள முடியவில்லை. ஏனெனில் ராணுவ விஷயங்களில் அவர் இணையில்லாத விற்பன்னராக விளங்கினார். பாதுகாப்புப் படையினரை எங்கெங்கு நிறுவ வேண்டும், அவர்களுக்கு எவ்விதப் பொறுப்புகள் அளிக்க வேண்டும், என்னென்ன வசதிகள் செய்து தர வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் கற்றுச் சிறந்தவராக விளங்கினார். நவீன ஆயுதப் போர்முறைகளைப் பற்றிய நுணுக்கங்களைப் பூரணமாக அறிந்த மேதையாக விளங்கினார். இதனால் ஸர் பி. எஸ். சிவசாமி அய்யரின் கோரிக்கைகளை ஆட்சியினரால் தட்டிக் கழிக்க இயலவில்லை. அவர் வெளியிட்ட பல சீர்திருத்தங்களை ஏற்று இந்தியர்களுக்குச் சில முக்கியமான பதவிகளை அளிக்க முன் வர வேண்டியதாயிற்று. ''சமயம் வாய்த்தால் இந்திய வீரர்கள் தங்கள் ஈடுஇணையற்ற சாகசங்களை வெளியிடுவார்கள்!'' என்று திரு அய்யர் கூறிவந்ததன் உண்மையைச் சென்ற உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷ் சேனைத் தலைவர்களே கண்டு வியந்தனர். ஏன், ஜெர்மனி நாட்டுச் சேனாதிபதிகளும், ஜப்பானியர்களும் புகழ்ந்துரைத்ததைப் பார்த்தோம்.

ஸர் சிவசாமி அய்யர் அவர்களை, ராணுவச் சீரமைப்புக் கமிட்டிகள் பலவற்றில் அரசாங்கம் நியமித்தது. ஜெனரல் சேனாதிபதியைத் தலைவராகக் கொண்ட 'ஸான்ட் ஹார்ஸ்ட் கமிட்டி'யில் திரு அய்யர் அவர்களை நியமித்து அவரது அரிய ஆலோசனைகளை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டது. இவ்வளவுக்கும் ஸர் சிவசாமி அய்யர் அவர்கள் போர் வீரர் குடும்பத்தில் உதித்தவரல்ல. அவருடைய முன்னோர்கள் 'சண்டை சச்சரவுகள்' என்றாலே காதைப் பொத்திக் கொள்ளும் வைதீகமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான்! திரு சிவசாமி அய்யர் அவர்கள் தஞ்சைக்கு அருகிலுள்ள 'பழைய மாறன் ஏரி' என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். காவிரியாற்றங்கரையிலுள்ள திருக்காட்டுப் பள்ளியின் எல்லையிலுள்ளது இந்தப் 'பழைய மாறனேரி'.

இவரது தந்தை தஞ்சையில் பிரபல வக்கீலாக விளங்கிய சுந்தரமய்யர் . 1864-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ந் தேதி திரு சிவசாமி அய்யர் அவர்கள் பிறந்தார். தஞ்சை எஸ். பி. ஜி. மிஷன் பள்ளியிலும் சென்னை ராஜதானிக் கல்லூரியிலும் இவரது கல்விக் காலம் சிறப்புற்று விளங்கிற்று. சென்னை ராஜதானிக் கல்லூரி பி. ஏ. முதல் வகுப்பில் இரண்டே பேர்கள்தான் தேர்வு பெற்றார்கள். அவர்களில் திரு பி. எஸ். சிவசாமி ஒருவர். அறிவுப் பயிற்சி மட்டும் போதாது, உடற் பயிற்சியும் முக்கியமானது என்பதை





உணர்ந்து, தஞ்சையில் மராத்திய பயில்வான் ஒருவரிடம் குஸ்தி, கசரத்து முதலிய வித்தைகளைக் கற்றுக்கொள்ள இவர் 'கரடிக் கூடம்' ஒன்றில் சேர்ந்து பயின்றதை இங்கு குறிப்பிட வேண்டும். இவரது தகப்பனார் மிகவும் கண்டிப்பான குணமுள்ளவர் என்று கூறப்படுகிறது. கணிதத்தில் சற்றுக் குறைவாக விளங்கிவிட்டதற்காக மகன், வகுப்பில் தேர்வு பெற்றதைக் கூட ஒப்புக் கொள்ளாமல் பள்ளி ஆசிரியர்களும் எவ்வளவோ சொல்லியும் கேளாமல், மீண்டும் ஒரு வருடம் அதே ஆறும் படிவத்தில் படித்தாக வேண்டும் என்று மகனுக்கு உத்தரவு போட்டு விட்டார். குடந்தைக் கல்லூரியிலும், சென்னையிலும் சிவசாமி படிக்கும் போது தஞ்சையிலிருந்து தகப்பனார் சாப்பாடு முதலிய செலவுகளுக்குப் பணம் அனுப்புவதோடு நிற்கவில்லை. அனுப்பிய பணத்துக்குக் கணக்கு விவரங்களை எழுதி மகன் தந்தைக்கு அறிவிக்கவேண்டும். அதைப் பார்த்துத் திருப்தியடைந்தாலே மறுபடியும் அவர் பணம் அனுப்புவாராம். இதைத் தவிர முன்னறிவிப்பின்றி, திடீரென்று வெளியூரில் வாழும் தமது மகனைக் காண அவர் வருவதும் உண்டு. இதனால் கடமை தவறாத தந்தையிடமும், தாயினிடமும் மகனுக்கு அன்பும் பக்தியும் வளர்ந்தோங்கிற்று. பெற்றோரிடம் இறுதி வரை திரு சிவசாமி அய்யர் அவர்கள் கொண்டிருந்த அன்பை விளக்கும் சம்பவங்கள் பலப்பல.

திரு அய்யர் அவர்கள் சட்டங்களைப் பயின்று தமது 21-வது வயதில் சென்னையில் வக்கீல் தொழிலில் பிரவேசித்தார். சட்டக் கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். வக்கீல் தொழிலில் இவரது திறமை நன்கு ஒளி விட்டதைப் பார்த்து அரசாங்கம் இவரை அட்வொகேட் ஜெனரல் பதவியை ஏற்கத் தூண்டியது. அந்தப் பதவிக்கு வந்த சமயத்தில் கவர்னரின் நிர்வாக சபையில் மந்திரி பதவி ஏற்குமாறு அழைத்தார்கள். நிர்வாக சபையில் மந்திரியாக ஆறு ஆண்டுகள் சேவை புரிந்தார். பிறகு சென்னை சர்வகலாசாலையின் உப அத்தியட்சகராக நியமிக்கப்பட்டார். சென்னை சர்வகலாசாலையில் இவர் அந்தப் பதவி வகித்த போது நிறைவேற்றி வைத்த பணிகள் சொற்பமல்ல. மாணவர்களுக்குப் படைப் பயிற்சி அவசியம் என்பதை உணர்ந்து 'மாணவர் படை' வகுப்பை இந்தியாவிலேயே முதல் தடவையாகச் சென்னை சர்வகலாசாலையில் ஆரம்பித்து வைத்தார். பிறகு காசி சர்வகலாசாலை உப அத்தியட்சகர் பதவி வகித்து அங்கும் அந்தக் கல்வி ஸ்தாபனத்தின் மதிப்பை வளர்த்தார்.

இந்திய அரசாங்கம் இவரை இந்நாட்டின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்துச் சர்வதேச சங்கத்துக்கு அனுப்பி வைத்தது. அங்கிருந்து திரும்பியதும் ராஜப் பிரதிநிதி சபையின் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். மீண்டும் இவரைச் சென்னை அரசாங்கம் பதவிகள் ஏற்க அழைத்த போது 59 வயதே நிரம்பிய திரு சிவசாமி 'பதவிகள் இனி வேண்டாம்' என்று கூறி ஒதுங்கினார். பயனுள்ள பொதுச் சேவையில் முழு நேரமும் ஈடுபட விரும்பினார். ராணுவ விஷயங்களில் நிபுணராக விளங்கிய போதிலும், 'சமாதானவாதி' என்றே அரசியல் துறையில் பெயர் பெற்று வந்தார்; அல்லது மித வாதிகள் கட்சியில் ஈடுபட்டு வந்தார் என்றும் கூறலாம். சிறிது காலம் வரையில் 'சென்னை லா ஜர்னல்' சஞ்சிகைக்குக் கௌரவ துணை ஆசிரியராகவும் விளங்கி, வடமொழியில் உள்ள நீதி சாஸ்திரங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதி வந்தார்கள். நாட்டின் பல்வேறு சர்வகலாசாலைகளும் இவருக்குப் பல சிறப்புப் பட்டங்கள் அளித்திருக்கின்றன. பொதுச் சேவையில் இவர் வெளியிட்ட பண்பும், உதார குணமும் வியக்கத்தக்கனவாகும். தம்முடைய நிலம், சொத்து இவற்றில் பெரும் பகுதியை உபயோகித்துத் திருக்காட்டுப் பள்ளியில் காவிரிக் கரையில் நெற்பயிர் மட்டுமல்ல கல்விப் பயிரையும் சிறந்த முறையில் வளர்க்கலாம் என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். திருக்காட்டுப் பள்ளியில் அவர்கள் உருவாக்கி வளர்த்த 'ஸர் சிவசாமி அய்யர் உயர்நிலைப் பள்ளி' தான் அந்தக் கல்விப் பயிர் விளைவிக்கும் தாளியமாகும். தமது லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களில் பெரும் பகுதியை நன்கொடையாக வழங்கி இந்த ஸ்தாபனத்தை உருவாக்கியுள்ளார்கள். இந்தப் பள்ளியும் தமிழ் நாட்டில் முதன் முறை பெற்ற புகழ் ஒன்று உண்டு. பள்ளிக்கூட நிர்வாக சபையில் சாதாரணமாக ஸ்தாப

கர்கள் ஆசிரியர்களுக்கு உரிய மதிப்பையோ பொறுப்பையோ அளிப்பதில்லை. ஆனால் திரு சிவசாமி அய்யர் அவர்கள் இந்தப் பள்ளியின் நிர்வாக சபையில் முக்கியமான பொறுப்பைத் தலைமை ஆசிரியரிடம் விட்டு, அவர் மூலம் ஆசிரியர்களுக்கும் பள்ளி ஸ்தாபனத்தில் மதிப்பை உண்டாக்கினார். தஞ்சை ஜில்லாவில் உள்ள உண்மையான உயர்தரப் பள்ளி'கள் சிலவற்றில் திருக்காட்டுப்பள்ளி, திரு பி. எஸ். எஸ். உயர்தரப் பள்ளியும் ஒன்றாகத் திகழ்கிறது.

திரு சிவசாமி அய்யர் அவர்கள் சட்டக் கலை நிர்வாகக் கலை, ராணுவக் கலை, கல்வி ஆகிய துறைகளில் மட்டுமல்ல, கட்டடக் கலையிலும் நிபுணராகவிளங்கினார். தாமாகவே 'பிளான்' களைத் தயாரித்துப் பக்கத்திலிருந்து சென்னையில் பெரியதொரு சொந்த மாளிகையைக் கட்டினார். ''அந்த மாட மாளிகையின் ஒவ்வொரு செங்கல்லும் அவர் கூறியபடியே பொருத்தப்பட்டது. கலையழகு மிகுந்த மாளிகை அது'' என்று திரு வி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஒரு நாள் திரு சிவசாமி அய்யர் தமது மாளிகையில் படித்துக் கொண்டிருந்த போது சிலர் அவரை நெருங்கி ஓர் ஆபத்தான விஷயத்தை வெளியிட்டார்கள்.

சென்னையில் முதன் முதலில் பெண் குழந்தைகளின் கல்விக்காகத் தோன்றிய பள்ளிக் கூடம் ஒன்று மூடும் நிலைமையில் தத்தளித்துக் கொண்டிருந்தது. ''அதற்கு ஏதேனும் உதவி செய்யாவிட்டால் அதை மூடும்படியாகிவிடும்'' என்று வந்தவர்கள் கூறினார்கள். திரு சிவசாமி அய்யர் அவர்கள், உதவி கோரி வந்தவர்களுக்கு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தார். இரண்டொரு தினங்களில் ஒரு சிறிய வாடகை வீடு தேடச் சொன்னார். வாடகை வீடு கிடைத்ததும், தமது பெரிய மாளிகையை உடனேயே விற்றுவிட்டு இரண்டு லட்சம் ரூபாய்களை அப் பள்ளிக்கு நன்கொடையாக வழங்கிவிட்டு வாடகை வீட்டுக்குக் குடிபோய் விட்டார். இந்தச் செய்தியைக் கேட்டுக் காஞ்சிகாமகோடி ஆச்சாரிய சுவாமிகள் ஐயர் அவர்களின் தியாக சிந்தனையைக் குறிப்பிட்டு ஆசி தெரிவித்து ஸ்ரீமுகம் அனுப்பினார்கள்.

அப்படி அய்யர் அவர்கள் அளித்த நன்கொடையினால் உயிர்பெற்றுப் புகழுடன் இன்றும் கல்விப் பணியாற்றி வருவது மயிலாப்பூர் லேடி சிவசாமி அய்யர் பெண்கள் 'உயர்தர'ப் பள்ளிக்கூடமாகும். ஆயிரத்து அறுநூறு சிறுமிகள் இங்கு பண்போடு கல்வி பயின்று வருகிறார்கள். இந்தப் பள்ளியின் மண்டப முகப்பில் திரு பி. எஸ். சிவசாமி அய்யரது சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. அய்யர் அவர்கள் 1946-ம் ஆண்டு நவம்பர் மாதம் காலமானார்கள். அவரது துணைவியார் கல்யாணியம்மாள் அவர்களது பெயரால் நடந்து வரும் இந்தப் பள்ளிக்கூடத்தில் அய்யரது நூற்றாண்டு விழாவைச் சிக்கிரத்திலேயே கொண்டாடப் போகிறார்கள். எல்லா விதங்களிலும் நிபுணராகவும் சான்றோராகவும் விளங்கி, தியாக வாழ்வு நடத்திக் காட்டிய திரு அய்யர் அவர்களின் சேவைகளுக்குத் தமிழகம் நன்றி கூறும் நல்விழாவாக அது அமையும் என்பது திண்ணம்.—கதிர்


பவழத்தீவு

கதை: வாண்டுமாமா

சித்திரம்: ரமணி..

17




சூலபாணி தோற்றுப் போய் ஓடினதும் நந்தி
கவலைப் படாதீர்கள் அம்மா. உங்கள் மகனை எப்படியும் நான் கொண்டு வந்து சேர்ப்பிக்கிறேன்.
கந்தா, எங்கள் ஒரே நம்பிக்கை நீ தான்.
அதே சமயம் ஆனந்தனுக்குக் கட்டுப் படாமல் ஓடிய குதிரை காட்டாற்று வெள்ளத்திலே இறங்கி விடுகிறது....
ஆற்றிலே இறங்குகிறாயா? இறங்கு. அப்போதாவது உன் வெறி தணிகிறதா பார்ப்போம்
வெள்ளத்தின் வேகத்தைச் சமாளிக்க முடியாமல் குதிரை தத்தளிக்கிறது. அதே சமயம் வெள்ளம் அடித்துக் கொண்டு வரப்பட்ட பெரிய மரம் ஒன்று மிதப்பிலே புரண்ட போது ஆனந்தன் குதிரையிலிருந்து தூக்கி எறியப் படுகிறான்.....
பாரம் குறைந்த குதிரை நீந்திக் கரை சேர்ந்து விடுகிறது. மரம் தாக்கி விழுந்ததால் வெள்ள நீரில் மூழ்கிய ஆனந்தன் மிதந்து மேலே வருகிறான்...
இழப்பு அதிகமாக இருக்கிறது தலையில் ஏதோ வலி... கண்ணை இருட்டுகிறதே... கந்தா... கந்தா...!
அங்கே கந்தன்.........
ஆனந்தா.. ஆனந்தா! என் அருமை நண்பா...


இருகரையும் நிரம்பிச் செல்லும் ஆற்றங் கரையைக் கந்தன் அடைந்தபோது....
அதோ... அது.... ஆனந்தா!
அவன் கண்க- ளுக்கு எதுவுமே தப்பாது.
இந்தக் காட்டாறு இன்னும் சற்று தூரத்தில் நீர் வீழ்ச்சியாக விழு கிறதே. ஐயோ! ஆனந்தா உன்னை எப்படி யும் காப்பாற் றியே தீருவேன்.
நம் ஆற்றின் வரை நீண்டுள்ள இந்தக் கிளையின் நுனியில் போய்......
அதோ ஆனந்தன் மிதந்து வருகிறான்.
ஆனந்தா, ஆனந்தா! தலை நிமிர்ந்து என்னைப் பார், என் கையைப் - பற்றிக் கொள், ஆனந்தா தலை யைத் தூக்க மாட்டாயா?

தொடரும்

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில்



ஈறுகளை பலப் படுத்து கிறது


வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "ஆஸ் மோஸ்கோப்" பரிசோதனைகளில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையைவிட மிகத்தீவிரமாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாயுள்ளது.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால், பற்களை சொத்தையாக்கும் கிருமிகள் அழிகின்றன.

கால்கேட்டின் பிரத்தியேகமான சேர்க்கை முறையைக் கொண்ட குளோரோபில்லின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத்பவுடர் வாங்குங்கள்!

கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை தினமும் தேய்ப்பதால், தீவிரமான குளோரோபில்லின் பூரண தன்மையை அடைக்கிறது, ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க உதவுகிறது. உன்னதமான இந்த குளோரோபில் டூத்பேஸ்ட், சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை தயாரிப்பதில் மிக்க அனுபவங்கொண்ட உலகிலேயே மிகப்பெரிய ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்படுகிறது!

வேறு எந்த பற்பசையிலும்
இதைவிட அதிக வீரிய குளோரோபில்
இல்லை — குழந்தைகள் அதன்
பெப்பர்மின்ட் வாசனையை மிகவும்
விரும்புகிறார்கள்!



CUA-C-10 TAM.




முடியுமா ?

ஒரு ஊரில் ஒரு ஜமீந்தார் இருந்தார். மாம்பழம் என்றால் அவருக்கு உயிர். ஆகவே உயர்ந்த ஜாதி மாங்கன்றுகளை வரவழைத்திருந்தார். மொத்தம் பத்தொன்பது கன்றுகள் வந்திருந்தன. தோட்டக்கார முனியனைக் கூப்பிட்டார். ''இதோ பார், முனியா, பத்தொன்பது ஒட்டு மாங்கன்றுகள். இதை ஒரு நேர் வரிசைக்கு ஐந்து கன்றுகள் வீதம் ஒன்பது நேர் வரிசை வரும்படி நட வேண்டும், தெரிந்ததா?'' என்று கட்டளையிட்டார். முனியன் விழித்தான். ''9X5 = நாற்பத்தைந்து கன்றுகளல்லவா வேண்டும், இருப்பதோ பத்தொன்பது. எப்படி நட முடியும்?'' என்று குழம்பி நின்றான். அவனுக்கு உங்களால் உதவ முடியுமா?

உங்களுக்கும் தெரியாவிட்டால் அதோ வலது கைப் பக்கத்தில் நானே மரங்களை நட்டுக் காட்டியிருக்கிறேன். ஆனால் முதலிலேயே அதைப் பார்க்காதீர்கள். முயன்று முடியாமல் போன பிறகு அதைப் பாருங்கள்.

இதுதான் விடை



அதிசயம் ஆனால் உண்மை

பேசும் பேரிகைகள்

விக்டோரியா மகாராணியார் இறந்து விட்ட செய்தி மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு நகரத்துக்குக் கேபிள் மூலம் கிடைத்தது. சில மணி நேரத்துக் கெல்லாம் மூவாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள யுகாண்டா மாகாணத்தின் நீக்ரோ அங்குள்ள ஆங்கிலேயரிடம் மகாராணியாரின் மரணத்தைப் பற்றிச் சொல்லித் திகைப்பிலாழ்த்தினன். அப்போது தந்தி கிடையாது. விமானப் போக்குவரத்து முன்னேறாத காலம். டெலிவிஷனோ ரேடியோவோ என்ன என்றே தெரியாது. அப்படியானால் ஆப்பிரிக்காவின் சுதேசிகளுக்கு அத்தனை சீக்கிரம் செய்தி எப்படிப் பரவியது? 'எங்கள் பேரிகைகள் பேசின' என்கிறார்கள் அவர்கள்.

இரவு பகல் எந்நேரமும் இனம்புரிந்துகொள்ள முடியாத டமாரங்களின் ஒலி ஆப்பிரிக்காவின் வான வெளியிலே பிரயாணம் செய்து கொண்டிருக்கும். ஒலியை அடிமையாக்கி அற்புதங்கள் நிகழ்த்தும் வெள்ளையர்களால்கூட இந்தப் பேரிகை ஒலி தாங்கிச் செல்லும் செய்தியைப் படித்தறிந்து கொள்ள முடியவில்லை. ஆப்பிரிக்கர்களிடையே அறுநூற்றுக்கதிகமான பாஷைகள் வழக்கத்திலிருக்கின்றன. இருந்தாலும் 'திம் தம் திம்' என்று ஒலி எழுப்பும் பேரிகைகளின் பேச்சைப் பல இன ஆப்பிரிக்கர்கள் புரிந்து கொள்ளுகிறார்கள்.

உட்குழிவுள்ள அடிமரத்தில் உண்டியல் பெட்டியில் உள்ளது போல் ஒரு அங்குல அகலத்துக்கு ஒரு துவாரம் — ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்குச் செல்லும். இது ஒருவகைப் பேரிகை. இதன் ஒலி இடிமுழக்கத்தைப் போலிருக்கும். சில ஜாதியார் பெரிய கிண்ணம் போன்ற சாதனத்தின் வாயை உறுதியான தோலினால் இழுத்து இறுக்கிக் கட்டி இருப்பார்கள். பேரிகைகளை அதற்கென்று பிரத்தியேகமாக உள்ள குச்சிகளினால் தட்டியோ அல்லது உறுதியான உள்ளங்கைகளினால் அடித்தோ ஒலி எழுப்புவார்கள். இந்த ஒலிகள் இருபது மைல்கள்வரை கேட்கும். அந்த ஒலியை ஏற்று அங்கிருந்து வேறு பேரிகைகளைத் துடிக்க வைத்து அடுத்த கேந்திரத்துக்குச் செய்தியை அனுப்புவர். இப்படியே தந்தியை விட வேகமாகப் பேரிகைகளின் மூலம் செய்திகள் பயணமாகும்.

இத்தகைய பேரிகைகள் கிராமங்களின் விசேஷக் குடிசைகளில் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வோர் இனத்திலும் பேரிகைகளை முழக்குவதற்கென்று பழக்கப்பட்ட ஒரு சிலர் இருப்பார்கள். அவர்களைத் தவிர வேறு யாருக்கும் அதைத் தொட உரிமை கிடையாது. பேரிகையை அதிரச் செய்து செய்திகளை அறிவிக்கும் கலையைப் பல வருட அநுபவத்தினால்தான் அடைய முடியும். பேரிகையின் மிகச் சிறிய அசைவுகளுக்கும் கூடப் பொருள் உண்டு. 'பேரிகைகள் எப்படிப் பேசுகின்றன? அதன் மர்மம் என்ன?' என்று கேட்கும் அந்நியருக்கு ஆப்பிரிக்கர்களின் பதில் வெறும் புன்முறுவல்தான்.





சிந்திக்க வேண்டும்

1: ஒரு சின்ன சீன தேச வாசியும் ஒரு பெரிய சீன தேச வாசியும் வீதியில் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். சின்னச் சீன தேச வாசி பெரிய சீன தேச வாசியின் மகன். ஆனால் பெரிய சீன தேசவாசி சின்னச் சீனதேச வாசிக்கு அப்பா இல்லே. அப்படியானல் பெரிய சீன தேச வாசி யார்?

(பெரிய சீன தேச வாசி சின்னச் சீனனின் அம்மா.)

2. 1962-ம் வருடம் ஏப்ரல் மாதம் 20-ந் தேதி. ரமணி அன்றைக்குத்தான் கடைசிப் பரீட்சை எழுதினன். ஒரு மாதமாகக் கண்விழித்துப் படித்திருந்த களைப்புத் தீர அன்று இரவு ஏழு



மணிக்கே படுத்துக் கொண்டு விடுவதென்றும், மறுநாள் காலே எட்டு மணிக்குத்தான் எழுந்திருப்பதென்றும் முடிவு செய்து தனது அலாரம் கடிகாரத்தை எடுத்து மறுநாள் காலே எட்டு மணிக்குத் தன்னே எழுப்புவதற்குக் 'கீ' கொடுத்து ஒழுங்கு படுத்தி வைத்து விட்டுப் படுத்துக் கொண்டான். ரமணியின் இட்டப்படி அலாரம் மணி யடித்து எழுப்பியது. ரமணி மொத்தம் எத்தனை மணி நேரம் தூங்கினன், சொல் லுங்கள் பார்க்கலாம்.

(ஒரு மணி நேரம் தூங்கி இருப்பான்! அன்றிரவு எட்டாவது மணிக்கே அது அலறத் தொடங்கி இருக்குமே!)

3. நான் ஒரு நாள் இரவு நேரங் கழித்து வீடு திரும்பினேன். உள்ளே நுழையும்போது என் வீட்டிலுள்ள சுவர்க்கடிகாரம் ஒரு மணியடித்து ஓய்ந்தது. போய்ப் படுத்துக்கொண்டேன். அரை மணி கழித்துக் கடிகாரம் ஒற்றை மணியடித்தது. மறுபடியும் அதே போல் அரை மணிக்குப் பிறகு ஒரு தடவை 'டங்'கென்று ஒலித்து நிறுத்தியது. மூன்றாவது முறையும் ஒற்றை மணியோடு நிறுத்திக் கொண்டது. நான் வீட்டுக்கு வந்த போது என்ன மணி?



(உள்ளே நுழைந்த போது நான் கேட்டது 12 மணியின் கடைசி ஒலி. அதன் பிறகு 12-30-க்கு ஒரு மணி ஓசை; 1 மணிக்கு ஒரு டாங்; 1-30-க்கு ஒரு டாங்!)

சிறுவர் விருந்து


எரிந்தாடும் ஏற்றப் பலகை



ஒரு கெட்டியான அட்டையில் படம் 1-ல் காட்டியுள்ளபடி இரண்டு உருவங்களைக் கத்திரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வோர் உருவத்திலும் வால் போன்ற பாகத்தை வைத்துக் கத்திரித்துக் கொள்ள வேண்டும்.

உருவத்தின் கையையும் காலேயும் படம் 2-ல் காட்டியுள்ளபடி மடி. கைகளை நீட்டியபடி உட்கார்ந்திருப்பது போலிருக்கும் அது. இனி ஒரு முழு மெழுகு வர்த்தியை எடுத்து இரண்டு முனைகளையும் திரி வெளியில் தெரியும்படி சீவிக் கொள். பிறகு அதன் சரியான மையத்தைக் கண்டு பிடித்து (கத்தி முனையில் மெழுகுவர்த்தி எப்பக்கமும் சரியாமல் எந்த இடத்தில் நிற்கிறதோ அதுவே நடு மையம்) அங்கு அதன் குறுக்கே ஒரு நீளமான கம்பியைச் செருகு. [படம் 3.]

மையத்தின் இரு பக்கத்திலும் சற்றுத் தள்ளி அந்த இரண்டு உருவங்களையும் மெழுகுவர்த்தியின் மீது உட்கார வைத்து வாலே முன்னுக்கு மடக்கி ஒரு குண்டூசியால் குத்தி நிறுத்து. பிறகு இரண்டு கண்ணாடி தம்ளர்களின் மீது இடையிலே வத்தியில் செருகியுள்ள கம்பி தம்ளரின் விளிம்பில் தாங்கி நிற்கும்படி வை. இரண்டு முனைகளையும் கொளுத்தி வத்தியை எரிய விடு. இப்போது வத்தி ஏற்றப் பலகையைப் போல் தாழ்ந்தும் உயர்ந்தும் ஆட ஆரம்பிக்கும். (படம் 4) எப்படி என்று அதிசயமாக இருக்கிறதல்லவா? ஒரு முனையில் மெழுகு உருகிச் சொட்டியதும் அந்த முனை இலேசாகி உயர்கிறது. சில விநாடிகளில் மறுமுனையில் அதேபோல மெழுகு உருகி வடிய அது இலேசாகிறது. அதற்குள் இந்த முனையில் மெழுகு உருகிச் சேர்ந்து கனமாகித் தழைகிறது. இப்படியே மாறி மாறி ஏற்படுவதால் எரியும் மெழுகு வர்த்தி ஏற்றப் பலகையாக இயங்கி ஆடுகிறது. செய்து பார்த்து மகிழ வேண்டிய விளையாட்டு இது.



அத்தியாயம் 5

சந்திப்பு

ஓலைப் பாயில் சுருட்டிக் கட்டியிருந்த புளியைத் தவிர ஒரு கூடையையும் மூடி போட்ட அலுமினியப் பாத்திரத்தையும் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வெங்கு வாத்தியார் திபுதிபு வென்று ஓடி வருவதை ஜன்னல் வழியாகப் பார்த்ததும், நகர ஆரம்பித்து விட்ட ரயிலின் கதவருகே வந்து நின்முன் வடிவேலு. வெளிப்புறம் பொருத்தப்பட்டிருந்த கம்பியை இடக் கையால் கெட்டியாகப் பற்றியபடி உடலை அவர் பக்கமாகச் சாய்த்தான். வலக் கரத்தை நீட்டி ஒவ்வொரு பொருளாக அவரிடமிருந்து வாங்கி ரயில் பெட்டிக்குள் தள்ளினுன்.

''தூக்குக் கூடையில் கறி வடகம் இருக்கு; மாப்பிள்ளைக்கு ரொம்பப் பிடிக்கும். சம்புடத்திலே குழந்தைகளுக்காகக் கொஞ்சம் பட்சணம் வைச்சிருக்காள்; ஞாபகமாகக் கொடுத்து விடு. குழந்தைகளை ஜாக்கிரதையாகக் கவனிக்கச் சொல்லு. பனிக் காலமாக இருக்கு. ஜலதோஷம் பிடிச்சுக்கும் அதுகளுக்கு'' என்று அவர் மூச்சு விடாமல் கூறிக் கொண்டே போக, அதே சமயத்தில் வடிவேலுவும், ''சார்! முக்கிய சமாசாரம் முன்னுலேயே சொல்ல மறந்துட்டேன்; அப்பாவுக்கு ஞாபகமாக ஒரு சுதேசமித்திரன் வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்துடுங்க. ஊரிலேயிருந்து திரும்பினதும் காசு கொடுத்திடறேன்'' என்று கேட்டுக் கொள்ள, கூடவே ரயிலின் வேகமும் அதிகரித்துக் கொண்டேயிருந்ததால் இருவருக்குமே மற்றவர் சொன்னது புரியவில்லை.

கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டுத் தன் இருப்பிடத்துக்கு வந்து அமர்ந்த வடிவேலு, 'வெங்கிட்டு வாத்தியாருக்குத்தான் மகளிடம் எத்தனை அன்பு!' என்று நினைத்தான். 'கல்யாணத்தைப் பண்ணி மாப்பிள்ளையோடு சேர்த்து அனுப்பி வைக்கிற போது தாயில்லாப் பெண் என்று சொல்லிக் கதறி விட்டாரே மனிதர்! அப்போது பார்த்தது தான் லட்சுமியை! நாலைந்து வருஷங்கள் ஆகியிருக்குமே இதற்குள்? தாராவைப் பார்த்தும் கிட்டத்தட்ட மூன்று வருஷங்கள் ஆகப் போகின்றனவே? அவள் இப்போது எப்படி இருப்பாள்? வாழ்க்கையில் தாராவுக்கு ஏற்பட்ட பயங்கர அதிர்ச்சிகள் அவள் தோற்றத்தையும் பாதித்திருக்கலாமோ? அப்படியானால் எந்த அளவுக்கு அவள் மாறியிருப்பாள்? அத்தனை தொல்லைவிருந்தபடியே அவள் எப்படி எட்டி

யிருந்த அப்பாவையும் என்னையும் கிட்டத்தில் நெருங்கச் செய்து ஒட்டி உறவாட வைத்தாள்? தாரா வருகிறாள் என்ற செய்தியைத் தாங்கி வந்த கடிதமே இந்த மந்திர ஜாலத்தைச் செய்ததென்றால் அவளே நேரில் தேனூருக்கு வந்து விட்டால் எந்த அற்புதத்தைத் தான் சாதிக்க முடியாது? குடும்பத்துக்கு மீண்டும் நல்ல காலம் பிறக்கப் போவதாக நம்பிய வடிவேலுவுக்குத் தாராவிடம் மதிப்பு மிகுந்தது.

எதிர்த் திசைகளிலிருந்து கிளம்பிய இரண்டு ரயில்கள் வடிவேலுவையும், தாராவையும் ஏற்றிக் கொண்டு அவர்களை ஒன்று சேர்த்து வைக்க ஒரே இடத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தன.

* * *

டில்லி ரயில் தாமதமாக வருகிறதென்றும் சென்ட்ரல் ஸ்டேஷனை அடைய இன்னும் மூன்று மணி நேரம் ஆகுமென்றும் அறிந்ததும், 'அதற்குள் திருவல்லிக்கேணிக்குப் போய் வந்துவிடலாமே' என்று தோன்றியது வடிவேலுவுக்கு. வெங்கிட்டு வாத்தியார் கொடுத்ததையெல்லாம் அவர் மகளிடம் சேர்ப்பித்துவிட்டால் தனக்குப் பாரம் குறையும்; ஒரு வேலையும் முடிந்ததென்று இருக்கும். ஜட்கா ஒன்றை வாடகை பேசிக் கொண்டு கிளம்பினான்.

அங்கே அவனுக்குத் தடபுடலாக உபசாரம் நடந்தது. ஞாயிற்றுக் கிழமையானதால் லக்ஷ்மியின் கணவரும் வீட்டிலேயே இருந்தார். "இவ்வளவு தூரம் வந்து விட்டுச் சிரம பரிகாரம் கூடப் பண்ணிக் கொள்ளாமல் கிளம்புகிறேன் என்கிறீர்களே! ஸ்நானத்தை முடித்துக் கொண்டுவாருங்கள், சொல்கிறேன். ஒரு வேளை சாப்பிடாமல் உங்களைப் போக விடுவேனா?" என்று வற்புறுத்திக் கூறினார் அவர்.

கிராமத்தில் தனக்கு ஏற்பட்டுவிட்ட அபக்கியாதியெல்லாம் இவர்களுக்கு ஒன்றும் தெரியாதா, அல்லது பட்டணத்து நாகரிகம்தான் இவர்களைப் பண்புடன் உறவாட வைக்கிறதா? வாசலிலேயே நிற்க வைத்து இரண்டு வார்த்தைகள் சொல்லி அனுப்பி விடுவார்கள் என்று நினைத்திருந்த வடிவேலுவுக்கு நன்றியுணர்ச்சியுடன் அவர்கள் பேசியது வியப்பை அளித்தது. பசி வேறு வயிற்றைக் கிள்ளவே அதிகமாகத் தயங்கி யோசிக்காமல் சட்டென்று உள்ளே புகுந்தான்.

கிணற்றடியில் நீரைத் தாராளமாக மொண்டு விட்டுக் கொண்டு ரயில் கரி, தூசியெல்லாம் போகக் குளித்தான். பிறகு சாப்பாடு தாம்பூலம் எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து இரண்டு மணி நேரமாகி விட்டது. அதனால் என்ன? எப்படியும் இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறதே என்று சமாதானமடைந்து புறப்பட்டான்.

ஒரு ரிக்ஷாவில் ஏறிச் சென்ட்ரலை அடைந்ததும் அவசரத்தில் ரிக்ஷாக்காரனிடம் கொடுத்த ஒரு ரூபாய் நாணயத்துக்குச் சில்லறையை எண்ணிப் பார்த்துக் கூட வாங்காமல் விரைந்தான். டிக்கெட் பரிசோதகர் ஒருவரை அணுகி, "டில்லி ரயில் எத்தனாவது பிளாட்பாரம் ஸார்?" என்று கேட்டான்.

"இன்றைக்கு ஏது ரயில் இனிமேல்? நாளைக்கு வா" என்றார் அவர்.

"வருகிற ரயிலைக் கேட்கிறேன் ஸார்! போகிற வண்டியை அல்ல" என்று அவன் விளக்கியதும், அவன் தோளிலிருந்து முதுகுப் பக்கமாகத் தொங்கிய படுக்கையையும் அவனையும் மாறி மாறிப் பார்த்து விட்டு நிதானமாக, "அது வந்து பத்து நிமிஷத்துக்கு மேலாகிறதே. எல்லாரும் போய் விட்டார்களே" என்றார் டிக்கெட் பரிசோதகர்.

"அட, ராமா! சீக்கிரம் சொல்லுங்கள் ஸார், எந்தப் பிளாட்பாரம் என்று!"


"இரண்டாவது, ஆனால் அங்கே இப்போது யாரும் இருப்பதாய்த் தெரியவில்லையே?"

அவர் சொன்னது போல் ஸ்டேஷனின் அந்தப் பகுதி வெறிச்சோடித்தான் கிடந்தது. ரயில் நின்ற பக்கத்துக்கு எதிர்ப்புறம் மேடையின் எல்லையில் ஒரு போர்ட்டர் குந்தியபடி உட்கார்ந்து பல்லிடுக்கில் சிக்கிக் கொண்டிருந்த பாக்குத் துகளைக் குத்தி அப்புறப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான்.

"ஏனப்பா, இதுதானே டில்லி ரயில்?"

சுவாரசியமான கட்டத்தில் வடிவேலு குறுக்கிடுவதைப் போர்ட்டர் விரும்பவில்லை. ஒட்டிக் கொண்டிருந்த பாக்குத் துகள் வெளிப்பட்டு விடுவதாக அவனுக்கு





ஆசை காட்டிக் கொண்டிருந்த தருணம். இடக் கரத்தை மட்டும் உயர்த்தி ரயில் பெட்டி ஒன்றில் மாட்டியிருந்த பெயர்ப் பலகையைச் சுட்டிக் காட்டினுன் அவன். 'படிக்கத் தெரியுமல்லவா உனக்கு?' என்று கேட்பது போல் இருந்தது அவன் செய்கை. ஓங்கி ஓர் அறை வைக்க வேண்டும் என்று வடிவேலுவின் கை ஊறலெடுத்தது. வந்த காரியத்தை முதலில் கவனித்து விட்டுப் பிறகு வேணுமானுல் இவனை ஒரு கை பார்த்துக் கொள்வோம் என்ற எண்ணத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட அவன், ''மூன்று வயதுக் குழந்தையுடன் ஓர் அம்மாள் வந்து இறங்கினுளா இங்கே?'' என்று சாந்தமாகக் கேட்டான்.


பல்லிடுக்குப் போராட்டத்தில் வெற்றி பெற்ற போர்ட்டர் பாக்குத் தூளை ஊதிப் பறக்கச் செய்ததுடன், காவி ஏறிய பற்கள் தெரியத் தனக்குள் சிரித்தான். கையிலிருந்த ஒடிந்த நெருப்புக் குச்சியைத் தூக்கி எறிந்து விட்டு எழுந்தான்.

''வெளியூர் ஆசாமியா நீ?''

''ஆமாம். ஏன்?''

''இல்லாத போனுல் இப்படி ஒரு கேள்வி கேட்பியா? எத்தனையோ பொண்பிள்ளைங்க குழந்தைகளோட வர்ருங்க, போகிருங்க. நான் யாருன்னு கண்டேன்?'' 'கட கட, கடகட' வென்று ஒலி எழுப்பும் டிராலி வண்டி ஒன்றைத் தள்ளிக் கொண்டு அவன் அங்கிருந்து போய் விட்டான்.

தனக்குள்ள கவலையில் போர்ட்டரிடம் ஓர் அபத்தக் கேள்வியைப் போட்டிருக்கிறோம் என்பது வடிவேலுவின் மூளைக்கு எட்டவேயில்லை. கவலை தீர்ந்தாலல்லவா அது புரியப் போகிறது அவனுக்கு? இப்போது பிளாட்பாரத்தின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு





ஓடினான் அவன்: ஆங்காங்கே நிதானித்து ரயில் பெட்டிக்குள்ளே யெல்லாம் ஏறிச் சுற்றும்முற்றும் தேடினான். ''தாரா! தாரா!'' என்று குரல் கொடுத்தும் பார்த்தான்.

ஏமாற்றம் அவன் நெஞ்சத்தை நிறைத்து இருதயத்தை அழுத்தி நோகச் செய்தது. நேரமாகி விட்டதே என்பதால் வேகத்தை அதிகரித்து எதிர் பார்த்த சமயத்துக்கு அரை மணி நேரம் முன்பாகவே ரயில் வந்து சேர வழி வகுத்த எஞ்சின் டிரைவரைச் சபித்த வாறே தன் தலைமயிரை வேதனையுடன் பற்றி இழுத்தான் வடிவேலு.

'தாரா வந்தாளா இல்லையா? சற்று நேரம் இங்கேயே காத்திருந்தால் என்ன குறைந்து போய் விடுமாம் அவளுக்கு?' என்று கோபமாக நினைத்தவன், கூடவே அனுதாபப்படவும் செய்தான். 'இங்கே அவள் மட்டும் பின்தங்கக் காரணம் இல்லையே? அவளைச் சென்னையிலே சந்தித்துத் தேனூருக்கு அழைத்துப் போக நான் வருவேன் என்று கண்டாளா அவள்? தனியாக எங்கே போய்த் தவிக்கிறாளோ, என்னமோ; பாவம்! பட்டணத்தில் அவளை எங்கே என்று போய்த் தேடுவது?' கொஞ்ச நேரம் யோசித்து விட்டு, 'சரி, எப்படியும் எழும்பூரில்தானே ரயில் ஏறியாக வேண்டும் அவள்? அங்கே காலா காலத்தில் போய்ச் சேர்ந்து விடுவோம்' என்ற தீர்மானத்துக்கு வந்தான்.

டவுனிலும் மவுண்ட் ரோடிலும் அலைந்து திரிந்து வேடிக்கை பார்த்து விட்டு மாயவரத்துக்கு முதல் ரயில் கிளம்ப ஒரு மணி நேரம் இருக்கும் போதே எழும்பூர் ஸ்டேஷனை அடைந்தான் வடிவேலு. அலுப்புடன் படுக்கையைச் சுவரோரமாகத் தரையில் போட்டு அதையே சோபாவாக்கிச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். வெறுப்பு மிகுந்தது அவனுக்குத் தன் மீதே. 'இந்தப் பிரயாணமே வீண், தண்டம்தான். அத்தானுக்கு அடையாளம் தெரியாது என்று தானே என்னை அனுப்பி வைத்தாள் பாரு? இவ்வளவு அசட்டுத்தனமாகப் பொறுப்பில்லாமல் நடந்து கொள்ளலாமா நான்? போகட்டும், இனி மேலாவது விழிப்போடு இருக்க வேண்டும்... ஆயிற்று, தாரா வருகிற சமயம்தான்... இதோ வந்து விடுவாள்...கண்ணயர்ந்து விடக் கூடாது....!

அவன் கண் எதிரே தென்பட்ட மேம்பாலத்துப் படிகளின் வழியே ஒரு துள்ளலோடு இறங்கி வந்து கொண்டிருந்தாள் தாரா. முன்பு எப்போதோ பல வருஷங்களுக்கு முன்னால், கண்டதுமே மனத்தில் ஆழப் பதிந்து விட்ட அதே உருவம்தான். மாணவியாக அவள் தோழி பாருவின் தோள் மீது ஒரு கரத்தைச் சுற்றி வளைத்துக் கல்லூரிக் கட்டடத்தின் மாடிப் படிகளில் மான் குட்டி எனக் கும்மாளத்துடன் குதித்திறங்கிய காட்சி.

விடுமுறைகளில் பாருவை ஊருக்கு அழைத்துப் போகப் பல தடவைகள் சென்னைக்கு வந்திருக்கிறான் வடிவேலு. கல்லூரியில் பாருவின் வகுப்பு முடியும் வரை மாடிப் படிகளின் எதிரே ஓர் ஆசனத்தில் அமர்ந்து புத்தகமொன்றைப் புரட்டிக் கொண்டிருப்பான். ஒருவரோடு ஒருவர் பின்னிப் பிணைந்தவாறு அவர்கள் அவன் அருகில் வந்து நின்றதும், '''காலேஜுக்குப் போய்ப் படித்ததில்லே' என்று என்னைப் பற்றி இனிமேல் ஒரு பயல் நாக்கிலே பல்லைப் போட்டுச் சொல்லி விடமுடியாது. இல்லையா பாரு? வருஷத்தில் மூன்று தடவைகளுக்குக் குறையாமல் காலேஜுக்கு வந்து எதையாவது படித்துக் கொண்டிருக்கிறேன் பார், நான்'' என்பான் கையிலிருக்கும் நாவலை மூடிய வாறே. அவன் பேச்சில் ஏக்கம் இழையோடுவது தோழிகள் இருவருக்குமே தெரியும். என்றாலும் மேலெழுந்தவாரியாக அவர்கள் கடனுக்குச் சிரித்து வைப்பார்கள். தலைவிதியையும் தகப்பனாரின் பிடிவாதத்தையும் நொந்து கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்யத் தோன்றாது வடிவேலுவுக்கு. ''எதுக்காக ஐயா என் மகன் காலேஜிலே சேர்ந்து படிக்கணும்? இல்லே, எதுக்காகப் படிக்கணும்னு கேட்கிறேன். பி. ஏ. படிச்சுட்டு ஆபீசராகப் போகிறானா? பத்து ஆபீசருங்களை டவாலி சேவகர்களாய் வைச்சுக்கிற அளவுக்குச் சொத்து இருக்கிறதே ஐயா? அதைக் கட்டி ஆள அல்லவா கத்துக்கணும்? புத்தகம் படிச்சால் பயிர் விளையுமா?'' என்று தமக்கு உபதேசங்கள் வழங்கிய ஊராருக்குச் சூடு கொடுத்துச் சும்மா இருக்க வைத்த முத்தையா; மகனை உருட்டி மிரட்டி, உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடியுமுன்னரே கழனியில் இறங்கச் செய்தார். 'இவை யெல்லாம் உனக்குத்தானேடா? இன்னையிலேயிருந்தே நிலத்திலே உழைச்சால்தான் அதன் அருமை பெருமை தெரியும். ஒரு தாய்க்கும் மகனுக்கும் இடையே உள்ளது போல நிலத்திடம் உனக்குப் பாசம் ஏற்பட்டு வளரணும்டா' என்றார். 'ஊருக்கெல்லாம் ஒரு வழி என்றால் அப்பாவுக்குத் தனி வழிதான்' என்று ஆத்திரம் அடைந்த போதிலும் அவர் சொற்படி நடந்து கொண்டான் வடிவேலு. அடுத்தாற் போல் பார்வதி வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பதும் அவருக்குப் பிடிக்க

தமக்குத் தாமே சீட்டைப் பிரித்துப் போட்டு ஆடிக் கொண்டிருந்த கிட்டா தலையை நிமிர்த்தவே இல்லை. ''உலகம் போகிற போக்கிலே, நாலு பேராகச் சேர்ந்து ஒரு காரியம் பண்ண முடியாதுங்கறதுதான் தெரிந்து போச்சே! பாடகன் சங்கராபரணம் இழுத்தால் வயலின்காரன் காம்போதி வாசிக்கிறான். இந்தப் பக்கம் மிருதங்கத்தைச் செங்குத்தாக நிற்க வைச்சுத் தாறுமாறாகத் தட்டிண்டிருக்கான் ஒருத்தன். இந்த மாதிரி கூத்தடிக்கிறதுக்கு ஒவ்வொருத்தரும் தனித்தனியாகவே கச்சேரி நடத்திக் குப்பை கொட்டறது சிரேஷ்டம்.''

''ஓய்! என்னங்காணும் ஒரேயடியாகப் பிளந்து கட்டுகிறீர்? என்ன சமாசாரம்?''

''பின்னே என்ன? கச்சேரியை ஒழுங்காகப் பத்ததியோட நடத்துகிறதாயிருந்தால் ராஜிநாமா பண்ண வேண்டிய நிலை ஏற்பட்டிருக்குமா?''

''ஓ! அதைச் சொல்றியா? அதுக்குக் கூடத்தான் இவா என்ன பண்ணுவா ஓய்? இங்கேதான் சர்க்காரை நடத்த விடாமல் இல்லாத தொந்தரவெல்லாம் கொடுத்துண்டே இருக்கானுகளே?''

''அப்படி சுலபமாகத் தட்டிக் கழிச்சுடாதே! இவர்களுக்குள்ளேயும் ஒரே குழப்பம்தான். காந்தி, பிரிட்டிஷ்காரனுக்கு உதவணும்னு இந்தச் சமயத்திலே பிரதிபலன் எதையும் எதிர்பார்க்கக் கூடாது. அது நியாயமில்லேன்னு தர்மம் பேசறார்; இன்னொரு பக்கம் சுபாஷ் நம் விரோதிக்கு விரோதி நம்முடைய நண்பன் என்கிற ரீதியிலே ஹிட்லரைக் கட்டித் தழுவிக்கத் தயாராக இருக்கிறார். இரண்டுக்கும் நடுவிலே நேருஜி 'உங்களுக்கு யுத்தத்தில் நாங்கள் உதவத் தயார். ஆனால் சுதந்திர இந்தியாதான் பிரிட்டனுக்கு இந்த இக்கட்டான நிலைமையிலே உதவ முடியும்' அப்படீன்னு பொடி வைச்சுப் பேசறார்.''

''எல்லாத்தையும் சரிக்கட்டி வைக்க வழக்கம் போல நம்ப ராஜாஜிதான் போக வேண்டியிருக்கும். ஏதாவது ஒரு யோசனை உதிச்சிருக்குமே அவருக்கு இதுக்குள்ளாறே!''

கூஜாவுடன் திண்ணைக்கு வந்து சேர்ந்த சீமாச்சு, ''நேத்திக்கு போஸுக்குக் கல்தா கொடுத்ததோ இல்லையோ இந்தக் காங்கிரஸ்? இன்னைக்குக் காங்கிரஸ் மந்திரிசபைகளையே கலைக்கச் செய்து விட்டான் வெள்ளைக்காரன்! நன்னு வேணும்!'' என்றார்.

''ஓய்! போதும் நிறுத்துமய்யா, நீரும் உம்ம சுபாஷும். ஐரோப்பாவிலே ஒவ்வொரு தேசமாய்ப் போய் ஹிட்லர் முதற்கொண்டு பல தலைவர்களையும் சந்திச்சுச் சலாம் போட்டு, 'பிரிட்டனோட சண்டை போடுங்க நாங்களும் உதவி பண்ணறோம்' என்று கேட்டிருக்கார். அடுத்தாற்போல் நம்ப நேருஜியை எடுத்துக்கோ. இத்தாலி வழியாக இந்தியாவுக்கு வரச்சே, ரோம் நகரத்திலே அவரை ஒருத்தன் வந்து கேட்டுண்டான்; முசோலினி உங்களைப் பார்க்கணும்னு ஆசைப்படறார். தயவுசெய்து எட்டிப் பார்த்துட்டுப் போகிறதுன்னு. அதுக்கு இவர், என்னாலே இப்போ முசோலினியைப் பார்க்க வர முடியாது. வேணுமானால் அவன் வந்து என்னைப் பார்க்கட்டும் அப்படீன்னு ஒரே போடாகப் போட்டுட்டு விமானத்திலே ஏறிவிட்டார். அவர்தான் மனுஷன்!'' என்று சீட்டுக் குலுக்கிப் போட்டுக் கொண்டே பேசினார் கிட்டா.

''ஓய்! சுபாஷைப் பற்றி இளக்காரமாகப் பேசாதீர்! அப்புறம் எனக்குக் கெட்ட கோபம் வரும்! என்னைத் தலைவனுக்குங்கோன்னு அவரா வந்து கெஞ்சினார்? அவர் சீமையிலே இருக்கிறப்போ இவர்களெல்லாம் ஒண்ணாச் சேர்ந்துண்டு, 'ஹரிபுரா காங்கிரசுக்கு உங்களைத் தலைவராகப் போட்டிருக்கிறோம். வரணும். வந்து பதவியை ஏற்றுக் கொள்ளணும்' என்று வெற்றிலே பாக்கு பழம் எல்லாம் வைச்சு அழைச்சா. சரின்னார், வந்தார். ஜம்முன்னு ஐம்பத்தொரு மாடுகள் பூட்டின சாரட்டிலே பவனி வந்தார்.''

''கிட்டா, புதுசா 'டெண்டு' போட்டிருக்கானுமேடா டவுனுக்குப் பக்கத்திலே. அதிலே பயாஸ்கோப்பு என்ன ஆடுது? என்ன ஆடுதன்னேன்?''

கிட்டா ஆடுதலை இறக்கியதும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார் சீமாச்சு.

''மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடறதே உனக்கு வேலை'' என்றார் பொன்னம்பலம் தாம் ஏமாந்து விட்டதை அறியாமல். எழுந்து தளர்ந்த வேஷ்டியை இழுத்துச் செருகிக் கொண்டு வாசலுக்குச் சென்று வெற்றிலைச் சாற்றைத் துப்பிவிட்டுத் திரும்பினார். ''மந்திரி சபை பற்றிப் பேசிக்கிட்டிருக்கிற போது பயாஸ்கோப்பைக் குறுக்கே இழுக்கிறியே.''

''சரி, நீ இறக்கு. சொல்கிறேன்.''

''சுபாஷை வைச்சுண்டு பொம்மலாட்டம் நடத்தலாம்னு நினைக்கிறானா?'' என்று சுப்புணி விட்ட இடத்திலிருந்து பிடித்துக் கொண்டார். ''இவா இஷ்டப் பட்டால் காங்கிரஸ் அக்கிராசனர், இல்லையானால் ஒண்ணும் கிடையாது! எல்லாருமாகச் சேர்ந்து தேர்ந்

தமக்குத் தாமே சீட்டைப் பிரித்துப் போட்டு ஆடிக் கொண்டிருந்த கிட்டா தலையை நிமிர்த்தவே இல்லை. ''உலகம் போகிற போக்கிலே, நாலு பேராகச் சேர்ந்து ஒரு காரியம் பண்ண முடியா துங்கறதுதான் தெரிந்து போச்சே! பாடகன் சங்கராபரணம் இழுத்தால் வயலின்காரன் காம்போதி வாசிக்கிறான். இந்தப் பக்கம் மிருதங்கத்தைச் செங்குத் தாக நிற்க வைச்சுத் தாறுமாறாகத் தட் டிண்டிருக்கான் ஒருத்தன். இந்த மாதிரி கூத்தடிக்கிறதுக்கு ஒவ்வொருத்த ரும் தனித்தனியாகவே கச்சேரி நடத் திக் குப்பை கொட்டறது சிரேஷ்டம்.''

''ஓய்! என்னங்காணும் ஒரேயடியாகப் பிளந்து கட்டுகிறீர்? என்ன சமாசாரம்?''

''பின்னே என்ன? கச்சேரியை ஒழுங்காகப் பத்ததியோட நடத்துகிறதாயிருந்தால் ராஜிநாமா பண்ண வேண்டிய நிலை ஏற்பட்டிருக்குமா?''

''ஓ! அதைச் சொல்றியா? அதுக்குக் கூடத்தான் இவா என்ன பண்ணுவா ஓய்? இங்கேதான் சர்க்காரை நடத்த விடாமல் இல்லாத தொந்தரவெல்லாம் கொடுத்துண்டே இருக்கானுகளே?''

''அப்படி சுலபமாகத் தட்டிக் கழிச்சுடாதே! இவர்களுக்குள்ளேயும் ஒரே குழப்பம்தான். காந்தி, பிரிட்டிஷ் காரனுக்கு உதவணும்னு இந்தச் சமயத் திலே பிரதிபலன் எதையும் எதிர்பார்க் கக் கூடாது. அது நியாயமில்லேன்னு தர்மம் பேசறார்; இன்னொரு பக்கம் சுபாஷ் நம் விரோதிக்கு விரோதி நம் முடைய நண்பன் என்கிற ரீதியிலே ஹிட் லரைக் கட்டித் தழுவிக்கத் தயாராக இருக்கிறார். இரண்டுக்கும் நடுவிலே நேருஜி 'உங்களுக்கு யுத்தத்தில் நாங்கள் உதவத் தயார். ஆனால் சுதந்திர இந் தியாதான் பிரிட்டனுக்கு இந்த இக் கட்டான நிலைமையிலே உதவ முடியும்' அப்படீன்னு பொடி வைச்சுப் பேசறார்.''

''எல்லாத்தையும் சரிக்கட்டி வைக்க வழக்கம் போல நம்ப ராஜாஜிதான் போக வேண்டியிருக்கும். ஏதாவது ஒரு யோசனை உதிச்சிருக்குமே அவருக்கு இதுக்குள்ளாறே!''

கூஜாவுடன் திண்ணைக்கு வந்து சேர்ந்த சீமாச்சு, ''நேத்திக்கு போஸுக் குக் கல்தா கொடுத்ததோ இல் லையோ இந்தக் காங்கிரஸ்? இன்னைக்குக் காங்கிரஸ் மந்திரிசபைகளையே கலைக்கச் செய்து விட்டான் வெள்ளைக்காரன்! நன்னா வேணும்!'' என்றார்.

''ஓய்! போதும் நிறுத்துமய்யா, நீரும் உம்ம சுபாஷும். ஐரோப்பாவிலே ஒவ்வொரு தேசமாய்ப் போய் ஹிட்லர் முதற்கொண்டு பல தலைவர்களையும் சந்திக்கச் சலாம் போட்டு, 'பிரிட்டனோடு சண்டை போடுங்க நாங்களும் உதவி பண்ணறோம்' என்று கேட் டிருக்கார். அடுத்தாற்போல் நம்ப நேரு ஜியை எடுத்துக்கோ. இத்தாலி வழியாக இந்தியாவுக்கு வரச்சே, ரோம் நகரத் திலே அவரை ஒருத்தன் வந்து கேட்டுண் டான்; முசோலினி உங்களைப் பார்க்க ணும்னு ஆசைப்படறார். தயவுசெய்து எட்டிப் பார்த்துட்டுப் போகிறதுன்னு. அதுக்கு இவர், என்னாலே இப்போ முசோலினியைப் பார்க்க வர முடியாது, வேணுமானால் அவன் வந்து என்னைப் பார்க்கட்டும் அப்படீன்னு ஒரேபோடா கப் போட்டுட்டு விமானத்திலே ஏறிவிட் டார். அவர்தான் மனுஷன்!'' என்று சீட்டுக் குலுக்கிப் போட்டுக் கொண்டே பேசினார் கிட்டா.

''ஓய்! சுபாஷைப் பற்றி இளக் காரமாகப் பேசாதீர்! அப்புறம் எனக் குக் கெட்ட கோபம் வரும்! என்னைத் தலைவனுக்குங்கோன்னு அவரா வந்து கெஞ்சினார்? அவர் சீமையிலே இருக் கிறப்போ இவர்களெல்லாம் ஒண்ணாச் சேர்ந்துண்டு 'ஹரிபுரா காங்கிரசுக்கு உங் களைத் தலைவராகப் போட்டிருக்கிறோம். வரணும். வந்து பதவியை ஏற்றுக் கொள்ளணும்' என்று வெற்றிலே பாக்கு பழம் எல்லாம் வைச்சு அழைச்சா. சரின் னார், வந்தார். ஐம்பத்தொன்னு ஐம்பத் தோரு மாடுகள் பூட்டின சாரட்டிலே பவனி வந்தார்.''

''கிட்டா, புதுசா 'டெண்டு' போட் டிருக்கானுமேடா டவுனுக்குப் பக்கத் திலே. அதிலே பயாஸ்கோப்பு என்ன ஆடுது? என்ன ஆடுதன்னேன்?''

கிட்டா ஆடுதனை இறக்கியதும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார் சீமாச்சு.

''மொட்டைத் தலைக்கும் முழங் காலுக்கும் முடிச்சுப்போடறதே உனக்கு வேலை'' என்றார் பொன்னம்பலம் தாம் ஏமாந்து விட்டதை அறியாமல். எழுந்து தளர்ந்த வேஷ்டியை இழுத்துச் செரு கிக் கொண்டு வாசலுக்குச் சென்று வெற் றிலைச் சாற்றைத் துப்பிவிட்டுத் திரும்பி னார். ''மந்திரி சபை பற்றிப் பேசிக் கிட்டிருக்கிற போது பயாஸ்கோப்பைக் குறுக்கே இழுக்கிறியே.''

''சரி, நீ இறக்கு, சொல்கிறேன்.''

''சுபாஷை வைச்சுண்டு பொம்ம லாட்டம் நடத்தலாம்னு நினைக்கி றீளா?'' என்று சுப்புணி விட்ட இடத்தி லிருந்து பிடித்துக் கொண்டார். ''இவா இஷ்டப் பட்டால் காங்கிரஸ் அக்கிரா சனர், இல்லேயானால் ஒண்ணும் கிடை யாது! எல்லாருமாகச் சேர்ந்து தேர்ந்

தெடுத்த ஒரு தலைவரை அந்தப் பதவிக்கு லாயக்கில்லை என்று சொல்லிக் கீழே இறங்கச் செய்யறது என்ன நியாயம்? காந்திகூட இதுக்கு உடந்தையாக இருந்திருக்கிறாரே?''

''ஓய்! நீர் ரொம்பத் தூரம் போகிறீர்'' என்று கூறிப் பட்டென்று கரத்திலிருந்த சீட்டுக்களைத் தரையில் அடித்தார் கிட்டா. ''காந்தி பேரைச் சொல்வதற்குக்கூட ஒரு தகுதி வேணும், புரிஞ்சுதா?''

''நல்ல சீட்டா சேரலையோ? கீழே எறிஞ்சுட்டியே?''

''பேஷான சீட்டு. இதுக்கு என்ன? ஆடறேன், ஆனால் காந்தி பேச்சை மட்டும் எடுக்காதேயும்.''

''முனிசீப் வருகிறார். வாயை மூடும்'' என்றார் பொன்னம்பலம். ''காந்தி கீந்தின்னு அவர் காதிலே விழுந்தால் போதும், கலவரமடைஞ்சு கலெக்டருக்குக் கடுதாசு போட்டுடுவார்!''

''என்ன பொன்னம்பலம்! வாத்தியாரய்யா வந்தாரா நேற்று ராத்திரி வீட்டுக்கு?'' என்று கேட்டவாறே அருகில் நெருங்கினார் முன்சீப்.

''இல்லையே? என்ன காரணமோ தெரியவில்லை.''

''அதுதானே கேட்டேன். வந்திருக்க மாட்டார். ஜங்ஷனுக்கு ஓடிக் கொண்டிருந்தார் மனுஷன் ராத்திரி.''

''எதுக்கு?''

''ஒண்ணும் பெரிய காரியம் இல்லை. முத்தையா வீட்டுப் பையன் இருக்கானே இல்லையோ? அவன் மெட்ராசுக்குப் போறானாம். இவர் ரயிலேற்றிவிடச் சென்றிருந்ததாகக் கேள்வி. ஏன்னு கேட்டா, அவனுக்கு ரயில்லே தானாகவே ஏறிக்கத் தெரியாது பார்; தடுக்கி விழுந்து விடுவானே, குழந்தை! பொன்னம்பலம்! எதுக்கும் உங்க பெண்ணை ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொள்ளுங்கோ, அப்புறம் நான் எச்சரிக்கவில்லைன்னு ஆகிவிடக் கூடாது. சீமாச்சு, கொஞ்சம் பட்டையை எடேன்!''

'வத்தி வைத்து விட்டுக் கூலி வேறே கேட்டா' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்ட சீமாச்சு, இடுப்பிலிருந்து மூக்குப் பொடிப் பட்டையை எடுத்து நீட்டினார். ஒரு சிட்டிகை எடுத்துக் கொண்டு நடந்தார் முன்சீப்.



சிவகாமியின் சபதம்

'நான் எழுதியுள்ள நாவல்களுள் ஏதேனும் ஒன்று நூறு வருஷங்கள் நிலைத்திருக்கக் கூடுமானால் அது இந்த அலை ஓசை தான்' என்று குறிப்பிடுகிறார் அமரர் கல்கி அவர்கள் அந்தப் புத்தகத்தின் முன்னுரையிலே. ஆயிரக்கணக்கான மக்களால் இதனை ஒப்புக் கொள்ளவே முடியாது. அவர் எழுதிய நூல்கள் எல்லாவற்றையுமே தமிழர்கள் வாழையடி வாழையாகப் படித்து இன்புறுவார்கள் என்பது மட்டுமல்ல அவர்களுடைய ஆட்சேபணை. அவரது நாவல்களுள் மிகச் சிறந்தது 'சிவகாமியின் சபத'மாகத்தான் இருக்க முடியும் என்று அடித்துச் சொல்வார்கள். கதையின் அமைப்பிலும் தமிழ் நடையின் அழகிலும் கதாபாத்திரங்களின் குண விசித்திரங்களைச் சித்திரித்துக் காட்டும் விதத்திலும் தன்னிகரற்று விளங்கும் நூல் அது. சரித்திரக் கதை என்ற முறையில் நோக்கினால் ஆராய்ச்சிப் புலமைக்குப் பேராசிரியர் கே. வி. ரங்கசுவாமி அய்யங்கார் அவர்கள் எழுதியுள்ள இருபது பக்க முன்னுரையே சான்று.

இப்படிப்பட்ட ஒரு மகத்தான சிருஷ்டியை நாடகமாக்கப் போகிறார்கள் என்றாலே சிலருக்குப் பயமாகக் கூட இருக்கும். சிவகாமியின் சபதத்தைக் கல்கி அவர்கள் ஆரம்பத்தில் நாடக ரூபமாகத்தான் அமைத்தார்கள் என்பதைத் தெரிந்து கொண்டால் ஓரளவுக்கு அவர்கள் அச்சம் நீங்கி விடும். பக்தி சிரத்தையுடன் பணியைத் தொடங்கி நடத்தினால் அந்த நாவலை நல்லதொரு நாடகமாக உருவாக்கலாம் என்று உணர்வார்கள். டி. கே. எஸ். சகோதரர்கள்தான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரிந்ததும் கொஞ்சம் நஞ்சம் பாக்கி யிருக்கும் சந்தேகங்களும் பறந்து விடும். சமீப காலத்தில் பல புதிய நாடகங்களின் வாயிலாக, முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் நாடகாசிரியர்கள் பலரை அறிமுகப்படுத்தி ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ள டி. கே. எஸ். சகோதரர்களுக்குப் பேறு மன்னரின் நாவலை நாடகமாக்கி அரங்கேற்றும் முயற்சியில் எத்தனையோ வருஷங்களாக நாடகத் துறையில் ஈடுபட்டிருந்து பெற்ற அனுபவம் துணை நிற்கும். மே மாதம் ஆறாம் தேதி திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சாமி சபாவில் நாடகம் அரங்கேறுகிறது.

''வரட்டும். அந்த வெங்கிட்டுவைக் கவனிச்சுக்கறேன்'' என்று கறுவினார் பொன்னம்பலம். முன்சீப் 'சர்ர்' என்று பொடியை உள்ளுக்கிழுக்கும் ஓசை கேட்டது தொலைவிலிருந்து.

''இனிமேல் ஜின்னாவுக்குத்தான் கொண்டாட்டம்னு சொல்லு! காங்கிரஸ் ஆட்சியிலிருந்து விடுதலை கிடைச்சுட்டதாகக் கும்மாளம் போடுவான்களே இல்லையா?''— அரசியல் பேச்சு தொடர்ந்தது. சீட்டுக் கச்சேரியும் நடந்தது. சீமாச்சு, கிட்டா இவர்களின் வஞ்சனையும் நீடித்தது — வெங்கிட்டு வாத்தியார் வருகிற வரையில்.

கழுகுப் பார்வையுடன் அவர் வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்த பொன்னம்பலம், ''என்ன சுவாமி! ரயிலேற்றி அனுப்பி விட்டு வந்தீங்களாமே நேத்திக்கு?'' என்று கேட்டார்.

''வடிவேலு பட்டணம் போறேன்னு சொன்னான். மாப்பிள்ளைக்குப் பிடிக்குமே என்று கொஞ்சம் கறிவடகம் கொடுத்தனுப்பினேன்.''

''ஏனய்யா? அந்தத் தறுதலையோட சகவாசம் வைச்சிண்டிருக்கீங்களே; வீட்டிலே வயசு வந்த பொண்ணுக்கு உங்களை விட்டு எப்படி ஐயா பாடம் கத்துத்தரச் சொல்றது?''

''யோசிக்காமல் எதையாவது பேசிவிடக் கூடாது. அப்புறம் வருத்தப்பட வேண்டி வரும்.''

''இந்த விநாடியிலிருந்து இந்த வாசல் படியை மிதிக்கக் கூடாது நீர், புரிஞ்சுதா உமக்கு?''

''பரீட்சை சமயமா இருக்கு. குழந்தை பாஸ் பண்ணுகிற வரைக்கும் பொறுத்துக் கொள்ளுங்கள். அப்புறம் உங்கள் வார்த்தைப்படி நடந்துக்கறேன்.''

''அந்தச் செருக்கி பாருக்குட்டி மாதிரி என் பொண்ணு ஒண்ணும் பி.ஏ. படிச்சுட்டு மினுக்கப் போகிறதில்லே. அடக்கமா வளரும் நம்ப வீட்டுப் பெண்கள். பள்ளிக்கூடத்திலே படிச்சுக் கிழிக்கிறதே அதிகம். டியூஷன் என்ன கேடு? இன்னும் கேட்டால் பள்ளிக்கூடத்திலேயும் நீர் வேலை பார்க்கிறீரே! ஆகக்கூடி, ஒண்ணு என் பெண் படிச்ச வரைக்கும் போதும்னு பள்ளிக்கூடத்துக்கு அவளை அனுப்பறதை நிறுத்தி விடணும், இல்லேன்னா உங்கள் வாத்தியார் வேலைக்குச் சமாதி கட்டணும்.''

கதறி விட்டார் வெங்கிட்டு.''அப்படி ஏதும் செய்து விடாதீங்க. நீங்களெல்லாம் பெரிய மனிதர்கள். நினைச்சால் ஒருத்தரை ஒரேயடியாகத் தூக்கி வைக்கலாம். குழி தோண்டிப் புதைக்கவும் செய்யலாம். நான் ஏழைப்பட்டவன்.''

அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த எல்லன், இரைச்சலைக் கேட்டுச் சுவரோடு சுவராக ஒண்டி நின்றுதான் வேடிக்கை பார்த்தான் என்றபோதிலும் பொன்னம்பலத்தின் திருஷ்டியில் அவன் பட்டு விட்டான்.

''ஏலே எல்லா! என்னடா பதுங்கறே, வாடா என் முன்னாலே!''

''சரியாய்ப் போச்சு; ஆடுவெனா, என்னவோ பொதுக் கூட்டம் நடத்தறேளே'' என்று அலுத்துக் கொண்டார் சீமாச்சு. தன்னிடம் சில்லறை புரளுகிற சமயத்தில் இந்தக் குறுக்கீடுகளை அவர் விரும்பாததில் ஆச்சரியமில்லை.

''ஆட்டமாவது ஒண்ணாவது'' என்று சீட்டுக்களைக் கீழே போட்டார் பொன்னம்பலம். ''இன்னைக்கு இதுக்கு ஒரு முடிவு கட்டி விட வேண்டாம்?'' என்றவர் எல்லன் பக்கமாகத் திரும்பி, ''என்னடா? உன் சின்ன எஜமானரோட மைனர் விளையாட்டெல்லாம் எந்த மட்டிலும் இருக்கு? பட்டணத்துக்கே பயணமாகி யிருக்கிறானாமேடா?''

''நெசந்தானுங்க, ஆனால் அது விளையாட்டுக்கு இல்லீங்க.''

பொன்னம்பலம் பெரிதாகச் சிரித்தார். ''விளையாட்டுக்கு இல்லையா? அப்படியானால் வினை தீர்க்கப் போயிருக்கிறானா...?''

''ஆமாங்க. பட்டாளத்திலே சேரத்தானுங்க போயிருக்கிறார். ஏரோப்ளேனிலே ஏறிக்கிட்டு வந்து தன்னைப் பத்தி நாக்கிலே நரம்பில்லாமல் திட்டினவங்கள் தலையிலேயெல்லாம் குண்டு போடப் போகிறதாய்ச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாருங்க!'' என்ற எல்லன் அவர்கள் அனைவரையும் திகைக்க வைத்து விட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

சில அடிகள் நடந்ததும் அவன் வேகம் அதிகரித்தது. பின்னர் ஒரே ஓட்டமாக ஓடிச் சென்றவன் முத்தையாவின் வீட்டெதிரே வந்துதான் நின்றான். வாசலிலிருந்தவாறே எண்சாண்கிடையாகத் தரையில் விழுந்து, ''கும்பிடறேனுங்க'' என்றான்.

''என்ன சேதி?'' என்று கேட்டுக் கொண்டே திண்ணைப் பக்கம் வந்தார் முத்தையா.

''சின்ன எஜமான் பட்டாளத்திலே சேரப் போய் விட்டாருங்க. யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம் என்றார். ஆனால் என் மனசு கேட்கலை'' என்று கூறிவிட்டு உடல் குலுங்க அழ ஆரம்பித்தான் எல்லன்.

முத்தையா செய்வதறியாது தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டார். (தொடரும்)



ஒத்திகை ஜோர்

"அடேடே! நம்ப சேதுராமன் இன்றைய ஒத்திகைக்கு வந்துவிட்டான்! ஆகவே இன்றைக்கு நிச்சயம் மழை வரும். இப்போதே வீட்டுக்குப் போய்க் குடையைத் தேடிப் பிடித்து வந்து வைத்துக் கொள்ளவேண்டியது தான்!" என்று கிண்டலாக ஆரம்பித்தான் பாலு.

சேதுராமன் உட்காராமலே நாற்காலி விளிம்பைப் பிடித்துக் கொண்டு, லட்சக்கணக்கான 'கேட்பாளர்'களுக்கு முன் நிற்கும் பிரபல பேச்சாளர் கூட்டத்தை நோட்டம் விடுவது போல் கம்பீரமாகப் பார்த்தான். இத்தனைக்கும் அங்கே நாலைந்து பேர்கள்தான் உட்கார்ந்திருந்தார்கள். பிறகு இரண்டெட்டு தள்ளிப் போய் வாயிலிருந்த வெற்றிலை புகையிலையைத் துப்பி விட்டுத் திரும்பி வந்தான். "டேய்! வீட்டுக்கு என்னடா போகணும்? பக்கத்துத் தெருவிலே ஒரு கல்யாணம் நடக்கிறது. ஏகக் கூட்டம். உள்ளே நுழைந்தாயானால் ஏதாவது ஒரு குடை கிடைக்காமலா போய் விடும்? பேசாமல் தட்டிக் கொண்டு வாடா! திருட்டுக்குடை என்றாலும் மழையைத் தாங்காமலா போகும்?...."

பிரசங்கத்துக்கிடையே மாலை போட வருபவரை நோக்கி, பேச்சை நிறுத்திக் கழுத்தை நீட்டும் பழக்கமுள்ள அனுபவப் பிரசங்கி போல் சேதுராமன் கேள்விகளை வீசி விட்டுக் கழுத்தை முன்னாலே நீட்டினான்.

"மழை பெய்யாதது இருக்கட்டும்! இப்போ ஒரே சாரல்! இது வாயா? வெற்றிலைச் சாறு டாங்கா?" என்று முழங்கைகளைத் துடைத்துக் கொண்டே பஞ்சாமி சற்றுத் தள்ளிப் போய் உட்கார்ந்தார்.

அம்ருதா அமெச்சூர் நாடகக் குழுவினர் தங்கள் அடுத்த நாடகத்துக்கான ஒத்திகையை நடத்தும் ஹால் அந்த இடம். ஒத்திகைக்காக வந்திருக்கும் சில நடிகர்கள் கூடியிருக்கும் வேளை. அனேகமாக ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி ஒத்திகைகளுக்கு வராமல் மட்டம் போடும் சேதுராமன் எதிர்பாராத விதமாக வந்திருக்கும் சூழ்நிலை.

"ஓஹோஹோ! பாலு! கவனித்தாயா? நம்ப சேது. மூக்கிலே பொடி திணிக்காத போதிலும் பேச்சிலே பொடி திணிப்பதில் நிபுணனாக்கும்! நீ என்னவோ, அவனுக்காக ஒதுக்கிய வேஷத்தைத் திருடிக் கொண்டு விட்டது போலப் பேசுகிறாயே! அது உண்மைதானா?" என்றான் கப்பூரத்தினம். கப்பூரத்தினத்துக்கு நடிப்புத் திறமை குறைவாக இருந்தாலும் வத்தி வைக்கும் திறமை அதிகம். சிண்டு முடியும் சாமர்த்தியமும் அதிகம். பாலுவைக் கண்டால் அவனுக்கு உள்ளூறக் கொஞ்சம் எரிச்சல். அதனால்தான் சேதுராமன்மீது அவனை ஏவி விடுவது போலக் கிண்டுகிறான்.

"பாலு ஒன்றும் சேதுவுக்கு ஒதுக்கியிருந்த வேஷத்தைத் திருடவில்லை! கொள்ளை யல்லவா அடித்தான்! நல்ல பகல் கொள்ளை. அந்த அசட்டு வேஷம் அவன் ஒருவனுக்குத் தான் பொருந்தும். கொடுத்து விட்டார்கள். என்ன சேது! நீ என்ன சொல்றே?" என்று கேட்டுக் கொண்டே பஞ்சாமி நாற்காலியைத் தூக்கிக் கொண்டு சேதுராமன் அருகில் வந்தான். பஞ்சாமிக்கும் பாலு மீது கொஞ்சம் காட்டம். நாடகத்துக்கு நாடகம் அவனே, மேடையில் அதிக நேரம் காட்சியளிக்கும் பாத்திரத்தை அபேஸ் பண்ணிக் கொண்டு விடுகிறானே?



சுவாமிநாதன்



காற்று தனக்கு எதிரான திசையில் அடிப்பதைப் பாலு உணர்ந்தான். அவனுக்குச் சாதகமாகப் பேசக்கூடிய நடிக நண்பர்கள் இன்னும் வந்து சேர்ந்தபாடில்லை. பிச்சாமிக்கு எந்த நாடகத்திலும் நாலைந்து வரி 'டயலாக்' பேசும் ஒரு காட்சியுடன் சரி. எத்தனை தடவை அவர் ஒத்திகைக்கு வந்தாலும், அந்த நாலு வரி சம்பாஷணை ஒருநாளும் அவர் நினைவில் நின்று அவருக்கு உதவாது. 'என் பெண் நாகரிக யுவதியாக இருக்கலாம். ஆனால் நான் என்னவோ பழங்கால மனிதன் தான்' என்று சொல்வதற்குப் பதிலாக ஒரு தடவை நாடக மேடையில் 'எந்த மனிதன் நாகரிகமாக இருந்தால் என்ன? நான் பழைய காலத்துப் பெண் தான்' என்று கோட்டும் அங்கவஸ்திரமும் போட்டுக்கொண்டு கொட்டி முழக்கினார். ஒரே அப்ளாஸ்! அந்த மாதிரி அப்ளாஸ் யாரும் வாங்கியதில்லை. ஆனால் மனுஷன் ரொம்பத் தங்கமானவர். பிறர் வம்புக்குப் போக மாட்டார்.

''இந்தாப்பா சேது! எனக்கு இந்த வேஷத்திலே தான் நடிக்கணும்னு ஒன்றும் பிரார்த்தனை இல்லே. நீயே என் போர்ஷனை எடுத்துக் கொள். நம்ப டைரக்டர்கிட்டே நானே சொல்லுகிறேன்! ஜமாய்த்துத் தள்ளு! நான் கைந்து ஒத்திகைகள் தானே ஆகியிருக்கு! ஆள் மாற்றினால் ஒன்றும் கெட்டு விடாது!'' என்றான் பாலு. அது நடக்காத காரியம் என்று அவனுக்கு நன்கு தெரியும்.

பிச்சாமி மடமடவென்று சிரித்தார்! ''பேஷ்! பேஷ்! நம்ப சேதுதானே! ஜமாய்த்து விடுவான். ஆனந்தா அமெச்சூர்ஸ் குப்புசாமிக்கு நல்ல பேரு வாங்கிக் கொடுத்து விடுவான்'' என்றார். பிச்சாமி மற்றவர்களை விடக் கொஞ்சம் வயதானவர்.

''ஆனந்தா அமெச்சூர்ஸா?...... அந்த மாதிரி ஒரு குழு இருப்பதாக நான் கேள்விப் பட்டதே இல்லையே...?'' என்று தன் வியப்பை வெளியிட்டான் பஞ்சாமி.

''நிச்சயமாக நீ கேள்விப் பட்டிருக்க முடியாது! நான் சொல்றது பத்து வருஷங்களுக்கு முன்னாலே நடந்த விஷயம்! ....இப்போது 'டாம்டும்' மோட்டார் ஸேல்ஸ் கார்ப்பரேஷன் டைரக்டராக இருக்காரே! அந்தக் குப்புசாமி ஒரு காலத்திலே பத்துப் பேரைப் பிடித்து வைத்துக் கொண்டு ஒரு நாடகக் குழு ஆரம்பித்தார். போஷகர், தலைவர், காரியதரிசி எல்லாம் அவர்தான். அதனாலே அவர் தமக்கு எடுத்துக் கொண்ட வேஷம் போக மிச்சம்தான் மற்றவர்களுக்கு. டைரக்டர் நம்ப கைலாசம்! வளைந்து கொடுக்கக்கூடிய மனிதர். குப்புசாமிக்கும் சேர்த்து மற்றவர்களை விரட்டுவார்.

''முதலில் ஒன்றிரண்டு சமூக நாடகங்கள் நடத்திப் பார்த்தார்கள். சுமாராக நடந்தது. திடீரென்று ஒரு நாள் குப்புசாமி ஒரு புராண நாடகம் போட வேண்டும் என்றார்.

'''சமூக நாடகமாக இருந்தால் ஜாலியாக இருக்குமே! கோட்டு சூட்டைப் போட்டுக் கொண்டு, சொந்தத்திலே நாலு டயலாக்குகள் மறந்து போய் அடித்தாலும் ஜனங்கள் கவனிக்க மாட்டார்கள். புராண நாடகங்கள் என்றால் வசனங்களை உரு அடித்து இலக்கண சுத்தமாகப் பேசி ஆக வேண்டுமே!' என்று ஆட்சேபணை எழுப்பினார் ஒரு நடிகர். அவருக்கும் ஞாபக சக்திக்கும் ரொம்ப தூரம்.

கைலாசம் அந்த ஆட்சேபணைகளை யெல்லாம் நிராகரித்தார். ''சரிதான் போ! சும்மா சமூகநாடகம் சமூக நாடகம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் நமது நடிப்புத் திறமையும், ஞாபக சக்தியும் எப்போதுதான் வளரும்? வீரம் சோகம் இவைகளைக் காட்டப் பழங்கால நாடகங்களை நடித்துப் பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும். நம்முடைய அடுத்த நாடகம் பாதுகா பட்டாபிஷேகம்! தசரதர், பரதன், குகனாக வந்து ஜமாயுங்கள்!'' என்றார்.

'' வழக்கம்போலே நம்ப குப்புசாமிதானே ஹீரோ ராமன்?'' என்ற ஒற்றைக் குரல் எழுந்தது.

'''ஆமாம்! அதற்கென்ன சந்தேகம்?' என்றார் கைலாசம்.

'' தங்கமாகப் போச்சு! அவர் இருக்கும் போது நாம் ஏன் அஞ்ச வேண்டும்?'' என்று அதே குரல் மீண்டும் ஒலித்தது. அதிலே ஒலித்த கிண்டலைக் கைலாசம் உணராமல் இல்லை. ஆனால் சும்மா இருந்தார்.

''பாதுகா பட்டாபிஷேகம் ஒத்திகைகள் ஆரம்பமாயின. அப்போது பார்த்துக் குப்புசாமிக்கு ஏகப்பட்ட வெளியூர் வேலைகள். ஒரு நாள்கூட ஒத்திகைக்கு வரமுடியவில்லை. ஒவ்வொரு ஒத்திகை நாளன்றும் தசரதர் 'ஸ்டெப்னி' ராமனுடன் வசனம் பேசினார். சீதை 'டுப்ளிகேட்' ராமனுடன் வனவாசம் புறப்பட்டாள்.''

பாலுவும் கப்பூரத்தினமும் மடமடவென்று சிரித்தார்கள். ''ஓஹோஹோ! அந்தக் குப்புசாமி நம்ப சேதுராமன் டைப் போலிருக்கு! பேஷ்!'' என்று நீட்டினான் கப்பூரத்தினம்.

''இந்தா கப்பூரத்தினம்! உனக்கு நாடக மேடையிலே தான். முந்திரிக் கொட்டை

மாதிரி எதிரொலி பேசி முடிக்கு முன், பேச ஆரம்பிக்கும் பழக்கம்னு கதை கேட்கும் போது கூடவா குறுக்கே பேச்சை ஓட்டணும்! கொஞ்ச நேரம் சும்மாத்தான் உட்கார்ந்திரேன்! பிச்சாமி! நீர் அதற்கு மேலே சொல்லும் ஐயா!'' என்றான் சேது.

''ஒத்திகைகளுக்குக் குப்புசாமி வருவதில்லை என்பதைப் பற்றித் தானே சொல்லிக் கொண்டிருந்தேன்! ஆமாம்! மற்ற நடிகர்கள் எல்லாம் முனகினார்கள். கைலாசம் ஓங்கி அடித்து விட்டார். 'நானே அவன் போர்ஷனையெல்லாம் எழுதிக் கொடுத்து விட்டேன். அவர் படித்துக் கொண்டு நாடகத்தன்று வந்தாலும் போதும். குப்புசாமிக்கு என்ன மேடை புதிதா?' என்றார்.

''கடைசி வரை ஒரு ஒத்திகைக்குக் கூட குப்புசாமி வரவில்லை. நாடக தினத்தன்று வந்து விடுவதாகவும் நாடகத்தை நடத்திவிடலாமென்றும் வெளியூரிலிருந்து அவர் தந்தி கொடுத்து விட்டார்.

''நாடக தினம் வந்துவிட்டது. குப்புசாமி ஊருக்கு வந்து விட்டதாகவும் மாலை ஐந்து மணிக்கு நேராக ஸ்டேஜுக்கு வருவதாகவும் தகவல் வந்தது. ஆறரை மணி வரை ஆளைக் காணோம். தசரதர் வேடதாரி கைகேயியை அழைத்துக் கொண்டு மேடைக்கு ஆறேமுக்கால் மணிக்குப் போய் நாடகத்தை ஆரம்பித்து வைத்தார்.



''நல்ல வேளை. குப்புசாமி தலை தட்டுப்பட்டுவிட்டது. 'அடுத்தது உங்க சீன்தான்! சீக்கிரம் மேக் அப் பண்ணிக் கொண்டு போங்கள்' என்று கைலாசம் தள்ளி விட்டார். கிரீன் ரூமுக்குள் நுழைந்த வேகத்திலேயே தலையைப் படிய வாரிக் கொண்டு குப்புசாமி நேராக ஸ்டேஜுக்கு வந்து தசரதர் முன் நின்றார். சும்மாவா நின்றார்? மூக்குக்கண்ணாடி; ஹிட்லர் மீசை சகிதம் நின்று வசனம் பேசினார்!

'''அப்பா! என்னைக் கூப்பிட்டீர்களாமே! என்ன தலைபோகும் அவசரம்? நான்தான் யூனிவர்ஸிட்டி பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருக்கிறேன் என்று தெரியுமல்லவா! வயசாகுலே தொணதொணப்பும் அதிகமாகப்போய் விடுகிறது!' என்று பேசினார். தசரதர் திகைத்துப் போனார். அவரால் என்ன பதில் சொல்ல முடியும்?......

''டைரக்டர் கைலாசம் சட்டென்று விளக்குகளை அணைத்து முன் திரையைப் போட்டு விட்டு, 'என்ன குப்புசாமி!... காலை வாரி விட்டுட்டே! பாதுகா பட்டாபிஷேகத்திலே எப்படி யூனிவர்ஸிட்டியும் பரீட்சையும் வரும்? என் மானம் போச்சே!' என்றார்.

'''ஹனி!...இன்னைக்குப் பாதுகா பட்டாபிஷேகமா? டைரக்டர் சார்! இந்தக் குழப்பத்துக்கு நீங்கதான் காரணம். நாம் போன தடவை போட்டோமே காலேஜ் குமாரி! அந்த நாடகத்தின் கையெழுத்துப் பிரதிக்குப் பின்னாலே ராமன் போர்ஷனை எழுதி அனுப்பியிருக்கிறீர்கள்! இப்பத்தான் நினைவு வருகிறது! எனக்கு எத்தனையோ பிஸினஸ் - தொல்லே. நான் 'காலேஜ்குமாரி' டயலாகைப் படிச்சுட்டேன். பரவாயில்லே! ராமாயணக் கதை தெரியாதா இல்லே மேடைதான் எனக்குப் புதிதா?..டேய் தசரதா! நில்லு!.... கிரீடத்தைத் தலையிலே கவிழ்த்துக் கொண்டு வந்து விடறேன்! நாடகத்தை ஜமாய்த்து விடுவோம்' என்று சொல்லி உள்ளே போய்ச் சட்டையைக் கழற்றிக் கிரீடத்தைத் தலையில் வைத்துக் கொண்டு 'நான் தயார்!' என்று ஓடி வந்தார்.

''தசரதர் வேஷக்காரர் பழங்கால மனிதர். ரோஷமுள்ளவர். இந்தக் குப்புசாமியின் அட்டகாசம் சகிக்க முடியாததாக இருந்தது. குப்புசாமி கிரீடத்தோடு வந்தாரே தவிர கைக்கடிகாரத்தைக் கூடக் கழற்றவில்லை.

'அப்பா புத்திரரத்தினமே! இப்படி ஒரே ராமனைப் பெற்ற இந்து நான்தானடா இருபத்தெட்டு வருடம் காட்டுக்குப் போகணும்!'' முதலில் இப்போது நான் வீட்டுக்குப் போகிறேன்! நீயும் உன் நாடகமும்!' என்று அப்படியே டோபாவைத் தூக்கி கழற்றி வைத்து விட்டு வெளியே போனார். அப்புறம் கைலாசம் தசரதராக வந்து சமாளிச்சார்ன்னு வைத்துக் கொள்ளேன்! நம்ப சேதுவும் இப்படி ஒரு நாள் பண்ணுவான் என்று நிச்சயம் நம்புகிறேன். அவனுக்கு நாடக மேடை புதிதா, என்ன?''

பிச்சாமி பேச்சை நிறுத்தியதும் சிரிப்பொலி எதிரொலித்தது.

பிச்சாமியின் கதையில் கடைசிப் பகுதியைக் கேட்டுக் கொண்டே வந்து தூண் ஓரமாக நின்ற வாசு, கதை முடிந்ததும், கைதட்டிக் கொண்டே முன்னால் வந்தார். ''பேஷ்! பேஷ் பிச்சாமி! குட்டை உடைத்து விடவா?'' என்றார் திடீரென்று. ''அட பாவி!.... நீ வந்ததை நான் கவனிக்கவே இல்லே. சும்மா இரு!'' என்றார் பிச்சாமி உரிமையுடன்.

''வாசு! நீர் சொல்லும் ஐயா!'' என்றான் சேதுராமன். ''சொல்லத்தான் போகிறேன். பிச்சாமி சொன்ன நாடகத்திலே ராமனாக வந்தது குப்புசாமி இல்லே! சாக்ஷாத் நம்ப பிச்சாமியேதான்! அப்புறம் தான் நம்ப பிச்சாமி பெரிய வேஷங்கள் பக்கம் நெருங்காமல், ஒதுங்கியே நிற்கிறான்! பிச்சாமி சாதாரண ராமனா? யூனிவர்ஸிட்டி ராமனாக்கும்!'' சிரிப்பு அலையாக எழுந்து ஓய்ந்தது.

'அம்ருதா அமெச்சூர்ஸ்' குழுவின் நாடக டைரக்டர் வாசுதான். ஆகவே நேரடி நடவடிக்கையில் துரிதமாக இறங்கினார்.

''என்னடாப்பா சேது!... நீ இன்னைக்கு வந்து விட்டாயாக்கும்? உன் சீன்களைப் பார்ப்போமா?.. போ அப்படி! காட்சி நாலு ஆரம்பமாகட்டும்! நம்ப பிராம்டர் வேணுச்சாமி எங்கே?...'' என்று அவர் உத்தரவிடுவதற்கும் வேணுச்சாமி கையில் நாடகப் பிரதியுடன் வருவதற்கும் சரியாக இருந்தது.

''ஏற்கனவே எனக்கு ஒரு கிழட்டு வேஷம்; நாலு வரி வசனம். ஆனால் அதற்குக் கூட, எதிரே நின்று பேச அந்த [illegible]



காஜேனும்! அடே வேலுச்சாமி .... வா! கொஞ்சம் வனஜாவாக வந்து பேசி அழு உன் கட்டைக் குரலிலே!'' சேதுராமன் ஒத்திகைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்திலே போய் நின்று கொண்டான்.

''ஏது டயலாக் எல்லாம் உருப் போட்டாச்சு போலிருக்கு!'' என்றான் கப்புரத்தினம்.

''அந்த வழக்கம் ஒரு நாளும் அவனுக்குக் கிடையாது. இதோ பையிலிருந்து ஸ்கிரிப்டை எடுக்கிறான் பார்!'' என்றார் வாசு.

''ஓய் சேது! ஆரம்பியும். நான் தான் இப்போது வனஜா!'' என்று வேலுச்சாமி மேல் துண்டைத் தாவணி போல் குறுக்கே போட்டுக் கொண்டார்.

''உன் அழுகிலே எனக்கு ஒரு பெண் இருந்தால் நான் மாமனார் ஆகும் ஆசையையே விட்டுடுவேண்டா வேலுச்சாமி!'' என்று முனகிக் கொண்டே ஸ்கிரிப்டில் கண்களை ஓட்டினான் சேதுராமன். தொடர்ந்து, ''பேஷ்! பேஷ்! காதல் பண்ண ஆரம்பிச்சிட்டியோல்லியோ? இனி மேல்' எனக்கென்ன கவலே! உறி! உறி!''

வேலுச்சாமி உள்பட எல்லோரும் மடமடவென்று சிரித்தார்கள். சேதுராமனுக்கு மாத்திரம் விஷயம் புரியவில்லை. இளைத்தான்.

''அப்போது! எங்கே? இன்னொரு தடவை அந்த டயலாகைச் சொல்லு ! கேட்போம்!'' என்றார் டைரக்டர் வாசு.

சேதுராமன் மீண்டும் ஸ்கிரிப்டைப் பார்த்தான். பிறகு நிதானமாக ''பேஷ்! பேஷ்! காதல் பண்ண ஆரம்பிச்சிட்டியோல்லியோ? இனிமேல் எனக்கென்ன கவலே? உறி! உறி!''

மீண்டும் சிரிப்பு எழுந்தது. ''என்னப்பா? சரியாகத்தானே சொல்றேன்! டைப் அடித்திருக்கிறதைத்தானே சொல்லுகிறேன். எதற்காகச் சிரிக்கிறீர்கள்?'' என்றான் சேதுராமன் கோபமாக. நிசப்தம் நிலவியது.

''என்னவோ கடைசியிலே உறி உறின்னியே! அது என்ன?'' என்றார் வாசு.

''நான் என்ன கண்டேன்! எழுதியிருக்கு, சொல்றேன்!''

''நாசமாய்ப் போக! அது உறி இல்லே! ஹி! ஹி என்னும் எழுத்து! நீ அசடு வழிய 'ஹிஹி'ன்னு சிரிப்பதற்காக அடித்த எழுத்து. தமிழ் டைப்ரைட்டரிலே அந்த எழுத்தைக் கோக்க 'உ' அடித்து, பக்கத்தில் 'ற' அடித்துப் பிறகு மேலே கொம்பு போடுவார்கள். உறியாம் உறி! .... கண்ணன் கோகுலத்திலே வெண்ணெய் தேடிய உறியா?

''சேது! ... நீ ஸ்டேஜிலே வந்து உறி உறி என்று சொல்லு! நாடகம் பார்க்க வந்திருப்பவன் வாழைப்பழத் தோலை உரித்து மேலே எறிவான்'' என்றார் பிச்சாமி.

சேதுராமனுக்குக் கோபமே வந்து விட்டது. ''ஹிஹின்னு அசட்டுச் சிரிப்பு சிரிப்பவனைப் பார்த்து இந்த வேஷத்தைக் கொடுங்கள்!.... கொடுப்பது என்னவோ கண்டைக்காய்பாகம், அதிலே வெண்டைக்காய் நீளத்துக்குக் குற்றம் சொல்ல வந்துட்டானுக!'' சேதுராமன் நாற்காலியில் வந்து உட்கார்ந்து விட்டான்.

''இந்தாப்பா சேது! உனக்கு இப்படிப் புரட்சி பண்றதே தொழிலாகப் போச்சு! எங்களுக்கும் உனக்கு அப்பா வேஷம் கொடுக்கிறதே வழக்கமாகப் போச்சு! உனக்குக் கதாநாயகன் வேஷம் கொடுத்தால் காதல் கீதல் பண்ணித் தொலைக்க வேண்டிய அவசியம் ஏற்படும்! அப்படிக் காதல் பண்ற போது பழைய ஞாபகத்திலே அப்பா பெண்ணை, அதட்டற மாதிரி 'அடி சர்ர்ர்ர்...ரோ.... ரோ....ஜா!... எங்கே தொலைந்தாய்?'' என்று கேட்கும் ரீதியில் க...க...ண்ணே.....ணே! உன்னைக் காதலிக்கத் தொலைக்கிறேன்' என்பாய். எதற்கு இந்த வம்பு! நல்ல அப்பாவாகவே இரு!.... வா! வா! காட்சி நாலை மறுபடியும் பார்ப்போம்!'' என்றார் வாசு.

''நான் ஹிஹின்னு சிரிக்க மாட்டேன்! சம்மதமா?'' என்று பெரிய கண்டிஷன் ஒன்றைப் போட்டான் சேது.

''நீ சிரிக்கவும் வேண்டாம்! உறிக்கவும் வேண்டாம். பேச்சை ஒப்பித்து அழுதால் போதும்'' என்றார் வாசு.

''டேய் வேலுச்சாமி!'' என்று குரல் கொடுத்தான் சேது.

''கொஞ்சம் பொறு சேது. வெற்றிலை வாங்கக் கடைக்கு அனுப்பியிருக்கிறேன்'' என்றான் பாலு தணிந்த குரலில்.

''வாசு!...நம்ப சேதுவுக்கு வேறே ரோல் கொடுத்தால், நீங்க நந்தனார் போட்ட அமர்க்களத்தை மறுபடியும் பார்க்கலாம். சேதுக்கு ஒரு சான்ஸ் கொடுத்துப் பாரேன்!'' என்றார் பிச்சாமி.

''மறுபடியும் நினைவு மூட்டாதே பிச்சாமி! அதை நினைத்தாலே எனக்கு நடுக்கமாக இருக்கு! மேடையிலே நந்தனாக நின்று நான் அந்த முருகேசன் பயல் முன்னால் பட்ட பாடு.. வேண்டாம்! வேண்டாம்!'' என்று நடுநடுங்கினார் வாசு.

''வாசு! சொல்லுங்க! கேட்போம்!'' என்று உற்சாகமூட்டினான் கப்புரத்தினம். வாசு தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''கதை முடியறதுக்குள்ளே நான் ஒரு சோடா சாப்பிட்டு விட்டு வந்து விடுகிறேன்'' என்று கிளம்பினான் சேதுராமன்.

''நாளைக்கு ஒத்திகை உண்டு! வந்து விடு!'' என்றார் வாசு.

''சேது சோடாக் கடைக்குத்தானே போகிறான்! நாளை ஒத்திகையைப் பற்றி இப்போதே சொல்ல வேண்டுமா?''


பின்டெக்ஸ்

கைத்தறித் துணிகள்

அழகானவை; நீடித்து
உழைப்பவை;
சாயம் போகாதவை

பின்னியால் விற்பனை செய்யப்படுபவை


லுங்கிகள்



தலையணை உறைகள்




புடவைகள்



படுக்கை
விரிப்புகள்




வேஷ்டிகள்



அலங்காரத்
துணிகள்



டவல்கள்



ஷர்ட்டிங்குகள்



பின்டெக்ஸ் கைத்தறித் துணிகளை தயங்காமல் வாங்குங்கள். நெசவாளர்களுக்கு, அறுபடாத கடினமான நூலை கொடுக்கவும், சிறந்த ஆலோசனை கூறவும், நல்ல டிசைன்களை தேர்ந்தெடுத்துக் கொடுப்பதிலும் பின்னி உதவுகிறது. பின்டெக்ஸ் துணிகள் நீண்ட நாள் உழைக்க வல்லதென்றும், சாயம் போகாததென்றும் பின்னி உறுதியளிக்கிறது.


இந்த அடையாளம் காணப்படும் அனுமதி பெற்ற பின்னி மில் கடைகளில் பின்டெக்ஸ் கைத்தறித் துணிகள் கிடைக்கின்றன

QUALITY FABRICS

BINNY & CO. MADRAS LTD

பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்
மதராஸ்

JWT/BY/BX-1396


HAZELINE
SNOW

"பாதி ஒத்திகையிலே சோடா குடிக்கப் போகிறவன் திரும்பி வருபவனாக இருக்க மாட்டான். அதனால்தான் சேதுவிட்டே....."

"நாளைக்கு அவசியம் வந்து விடுகிறேன்" என்று முத்தாய்ப்பு வைத்து விட்டுச் சேதுராமன் நகர்ந்தான்.

"வாசு சார்! நந்தன் என்ன ஆனான் என்று சொல்லவில்லையே!" என்று நினைவூட்டினான் கப்புரத்தினம்.

"நந்தன் மேக்கப்பைக் கலைத்து விட்டு வீட்டுக்குப் போனான். இப்படிக் கதை பேசிக் கொண்டிருந்தால் எந்த ஜன்மத்திலே நாம் ஒத்திகை நடத்துவது? எப்படி நடத்தி நல்ல பெயர் எடுப்பது? பஞ்சாமி, உன் சீனைப் பாரேண்டா!" என்றார் வாசு.



"எனக்கு மூனு சீன்! அந்த மூனு சீன்களிலும் கோதண்டம் என் கூட வந்தாக வேண்டும். ஆனால் அவன் நான் வராத நாட்களில் ஒத்திகைக்கு வருவது என்று ஆரம்பித்திருக்கிறான்" என்றான் பஞ்சாமி.

"ஓஹோ! நீங்கள் 'ஷிப்டு'லே வேலை செய்கிறீர்களாக்கும்? ராமச்சந்திரா! ஒத்திகைகள் இல்லாமல் நாடகம் நடத்த ஒரு முறை புதிதாகக் கண்டு பிடிக்கணும்" என்று அங்கலாய்த்தார் வாசு.

"அதை ரொம்ப வெற்றிகரமாகப் பூக்காரப் பொன்னுசாமி கண்டு பிடிச்சுட்டார்னேன்! பொன்னுசாமியே கதாசிரியர், நடிகர், டைரக்டர். நாடகம் எழுதறேன் எழுதறேன் என்று நாடகத்துக்கு முந்தின நாள் வரை பத்து சீன் எழுதியிருப்பார். நாடகம் நடக்கக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே தன் குழுவினரைக் கூப்பிட்டு, கதையைச் சொல்லி, 'ஸ்டேஜில் போய்க் கதைக்குத் தகுந்தாற் போல் பேசிவிட்டு வாருங்கள்' என்று அனுமதிப்பார். நடிகர்கள் வெகு இயற்கையாகத் தோன்றியதைப் பேசி அப்ளாஸ் வாங்கி விடுவார்கள். நாடகமும் நல்ல பெயர் வாங்கி விடும். மனுஷன் சிரமம் இல்லாமல் புகழ் சம்பாதித்து விடுகிறார். அது அவர் ராசி" என்றான் பாலு.

"ஆமாம். அவர் நடிகர்கள் மேலே அவ்வளவு நம்பிக்கை வைக்கிறார். அவர்கள் பூரண ஒத்துழைப்புக் கொடுக்கிறார்கள். ஒரு வரி டயலாக்குக்கு உங்களை நம்ப முடியவில்லையே! நம்ப சேதுராமன் உதி உதின்னு உதிக்கிறானே!" என்றார் வாசு.

"நம்ப பிரதர்கள் டயலாக் பாடம் பண்ணி அதை மேடையில் மறந்து போவதை ஒரு விசேஷ கலையாகக் கருதுகிறார்கள். மாணிக்கம் பயல் ஒருத்தன்தான் ஒரு அட்சரம் விடாமல் ஒப்பித்துக் கொண்டிருந்தான். 'தந்தையே! இப்போதே போய்த் தங்கள் நண்பரைச் சந்தித்துக் கடிதம் வாங்கி வருவேன்! மேஜையிலிருந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு உள்ளே போகிறான்' என்று நிதானமாக ஒப்பித்து அப்ளாஸ் வாங்கினான்: மேஜை மீது இருந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு உள்ளே போகிறான் என்பது மேடைக் குறிப்பு. அது அவன் வசனமில்லை. ஸ்கிரிப்ட் எழுதினவன் பிராக்கெட் போட மறந்து விட்டான்: மாணிக்கம் அதையும் வசனமாக முழுக்கி விட்டான். அப்புறம் நம்ப ஆட்கள் பண்ணின கலாட்டாவால் அவன் நாடக ஆசையையே விட்டு விட்டான்!" என்றார் பிச்சாமி!

"பிச்சாமி! நீ கதை சொல்கிற திறமையிலே கால்வாசி டயலாக் பாடம் பண்றதிலே காண்பித்தால் உன்னையே ஹீரோவாகப் போட்டு விடுவேன்!" என்றார் வாசு.

"நீங்கள்தான் நந்தனார் கதையைச் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்?" என்று மறுபடியும் தூண்டினான் கப்புரத்தினம்.

"நந்தன் சிதம்பரம் போக மாட்டேன் என்றால் கூட அவனை இழுத்துக் கொண்டு போய்த் தள்ளி விடுவாய் போல் இருக்கே! சொல்லித் தொலைக்கிறேன். சேது போய் விட்டான். வேலுச்சாமி திரும்பவில்லை. ஒத்திகைக்குப் பதிலாகக் கதையாவது பண்ணுவோம்" என்று வாசு ஆரம்பித்தார்.

"இப்போது எங்கள் காரியாலயத் தலைவர் ஒரு நாடகம் தயார் பண்ண வேண்டும் என்றார். நடிக்கத் தெரிந்த ஊழியர்கள் ரொம்பக் குறைவு. பெண் வேஷம் போட லாயக்கானவர்கள் இல்லவே இல்லை. தலைவரோ சங்கீத நாடகமாக இருக்க வேண்டும் என்று சொல்லி விட்டார். வள்ளித் திருமணம் போடலாம் என்று ஒருவர் யோசனை சொன்னார். வேலன் வேட ஆசாமி கொஞ்சம் மிடுக்காக இருக்க வேண்டும். பாடவும் தெரிய வேண்டும். சுந்தர ராமன் தான், வேலன் வேடன் விருத்தனாகத் தோன்றலாம் என்ற ஆசையில் அந்த நாடகம் போட வேண்டும் என்று குதித்தான்.

"அவனுக்கு ஒண்ணரைக் கண்ணு. மேடையில் வந்து 'தேடி வந்தேனே வள்ளி மானே' என்று அவன் வள்ளியைப் பார்த்துப் பாடினால் அவன் பார்வை அரங்கத்தில் உட்கார்ந்து இருப்பவர்களைப் பார்த்துப் பாடுவது போல் இருக்கும். வீண் தகராறை விலை கொடுத்து வாங்க யாரும் தயாராக இல்லை. மேலும் வள்ளி வேடம் போட்டுக் கொள்ளத் தகுந்த நபரும் இல்லை.

"கடைசியில் நந்தனாரையே சுலபமாகப் போட்டு விடுவது என்று தீர்மானித்தோம். கட்டைத் தொண்டை கோபாலன் வேதியர். கீச்சுக் குரல் முருகேசன் நந்தனார். ஒத்திகைகள் ஜரூராக நடந்தன. ஆனால் திடீரென்று நாடகத்துக்கு முதல் நாள் கோபாலன் காலை வாரி விட்டுவிட்டான். அவன் மைத்துனிக்குக் கல்யாணம் என்று ஊருக்குக் கிளம்பி விட்டான். தலைவர் கோபத்தை அடக்கிக் கொண்டு நிலைமையைச் சமாளிக்க ஏற்பாடு



மனைவி : அடடா ! எழுந்திருங்கோ ! தூக்கத்திலே எதை நினைச்சுண்டு நீங்கள் இப்படி பயந்து உளறுகிறீர்கள் ?

செய்தார். பாடக் கூடிய ஆசாமி வேறு யாருமில்லே. சுந்தரராமன் நாடகக் குழுவைப் பகிஷ்காரம் பண்ணி விட்டான். மயில்வாகனம் ஏற முடியாமல் போச்சே என்ற கோபம்.

''தலைவர் காரியாலயத்தில் சிப்பந்திகளைப் பகுதிக்குப் பகுதி மாற்றுவது போல, முருகேசனை வேதியராக நடிக்கச் சொன்னார். வேதியர் டயலாக் முழுதும் அவனுக்குப் பாடம். 'நந்தனார் பாட வேண்டாம். கம்மா தடிக் கம்பைப் பிடித்துக் கொண்டு நின்றால் போதும்' என்று சொல்லி என்னை நிறுத்தி விட்டார்கள்.

''நாடகம் தொடங்கியது. திடீர் வேதியனாக மாறிய முருகேசனுக்கு ஒரே குழப்பம். நந்தனார் டயலாக்கும் வேதியர் டயலாகும் மாறி மாறி அவனை முற்றுகையிட்டன.

'''சிதம்பரம் போகாமல் இருப்பேனோ நான்' என்ற பாட்டை வேதியரே 'கம்' மென்று ஆரம்பித்து விட்டார். அப்புறம் சமாளித்துக் கொண்டு, அப்படி நீ பாடினுப்பிலே நான் அனுமதி கொடுத்து விடுவேன்னு நினைக்காதேடா நந்தா!' என்று முடித்துக் கை தட்டலும் வாங்கினான். இப்படித்தான் ஒவ்வொரு கட்டத்திலும் நந்தன் பாட வேண்டியதை வேதியரே ஆரம்பித்து வேறு வகையாக முடித்தார். எந்த நிமிடத்தில் அவன் 'ஆண்டே எனக்கு அனுமதி கொடுங்கள்' என்று என் காலில் விழுந்து விடுவானோ என்று நான் நடுங்கிக் கொண்டிருந்தேன். என் நடுக்கம் எனக்குத்தான் தெரியும். ஆனால் நந்தன் சரித்திரத்தைப் புது முறையாக நடித்ததாக அவன் நல்ல பெயர் வாங்கிக் கட்டிக் கொண்டு போனான். அப்புறம் எனக்கு இப்படித் திடீர்ப் பாத்திர மாற்றங்களைக் கண்டாலே பயம். நான் அனுமதிக்கிறதில்லே.''வாசு நிறுத்தினார்.

வேலுச்சாமி திரும்பி வந்த போது அவன் கூடவே கண்ணப்பனும் தேவராஜனும் வந்து சேர்ந்தார்கள்.

''என்னப்பா! ஒத்திகைக்கு இவ்வளவு சாவகாசமாகவா வருவார்கள்? சரி, சரி! முதலிலிருந்து பார்த்து விடுவோம். முதல் சீன். கண்ணப்பன். பானு கஸ்தூரி! வாருங்கள்'' என்று ஆரம்பித்தார் வாசு.

''கஸ்தூரியும் இல்லே! கோரோஜனையுமில்லே! அந்த அம்மா ஊரிலே இல்லேயாம்! நாளைக்குத்தான் வருவாங்களாம்'' என்றான் வேலுச்சாமி.

''நிலை வை! நாம் ஒத்திகை வைத்துக் கொண்டால் எல்லா நடிகைகளுக்கும் வெளியூர்ப் பிரயாணம் வந்துவிடுகிறது. இரண்டாவது சீன் பார்க்கலாம்! வாருங்கள்'' என்றார் வாசு பொறுமையை இழந்து கொண்டே.

''அதற்கு நாராயணனைக் காணோம்! அவன் வருவானென்னும் எனக்குத் தோணலே! அவன் 'ரோலு'க்குக் கனம் போதாதாம். உப்பு சப்பில்லாமல் இருக்கிறதாம். என்னிடம் நேற்று சொல்லிக் கொண்டிருந்தான்'' என்றான் தேவராஜன்.

''கனம் இல்லையாமா? தலையிலே கனமாகப் பெட்டிகிட்டி எதையாவது தூக்கி வைத்துக் கொண்டு நடிப்பதுதானே? நடிகர்களாகத் தெரியாது போனாலும் கிரீட்டிக் ஆயிடுறாங்கள் கலபமாக!'' வாசு அங்கலாய்த்தார்.

''விஷயம் வேறே! இரண்டு சீன்களிலே நாராயணன் வந்து சேதுவை விரட்டு விரட்டு என்று விரட்ட வேண்டும். ஆனால் அது அவனாலே செய்ய முடியாது. நாராயணன் சேதுராமன்கிட்டே கொஞ்சம் கைமாற்றாகப் பணம் வாங்கியிருக்கிறான். முதலாவது ஒத்திகைக்கு வரும் போது சேது பணத்துக்கு நைக்க ஆரம்பிக்கிறான். அப்புறம் நாராயணனால் சேதுவிடம் கோபமாகப் பேசத் தைரியம் வர மாட்டேன் என்கிறது. கெக்கே பிக்கே என்கிறான்! இதுதான் ரகசியம்!'' என்று பஞ்சாமி குட்டை உடைத்துவிட்டான்.

''பழைய நந்தனார் நாடகத்திலே பாத்திரங்களை மாற்றினப் போலே நாராயணன் வேஷத்தைச் சேதுவுக்கும், சேதுவின் வேஷத்தை நாராயணனுக்கும் கொடுங்களேன். சேது நிஜமாகவே, நாராயணனை விரட்டுவான். நாடகம் ஜீவன் நிறைந்திருக்கும்'' என்று ஓர் அபூர்வ யோசனையை வீசினான் கற்பூரத்தினம்.

''ஏண்டாப்பா, கற்பூரத்தினம் உனக்கும் நாராயணனுக்கும் ஆகாதா? நல்ல குழியாகத் தோண்டுகிறாயே?'' என்றார் கிச்சாமி.

''கிச்சாமி! இந்த நாடகக் குழுக்களில் நிலவும் 'பாலிடிக்ஸ்' அரசியல் கட்சிகளில் கூட இருக்காது. ஒருத்தனை ஒருத்தன் எப்படா காலை வாரி விடுவது என்றுதான் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் தான் ஹீரோவாக நடிக்கணும்னு ஆசை! ஆசைக்கான திறமை தங்கள் கிட்டே இருக்கிறதா என்று யோசனை செய்வதில்லே'' என்றார் வாசு.

''எல்லோரும் அப்படி ஆராய்ச்சியிலே ஈடுபட்டு விட்டால் அப்புறம் உலகத்திலே ஞானிகளும் சன்னியாசிகளும்தான் இருப்பார்கள். பேசாமல் இனிமேல் மேடையில் வரும் நடிகர்கள் அனைவரும் ஹீரோக்கள் என்ற சம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்கணும். வேலைக்கார ஹீரோ, தோட்டக்கார ஹீரோ, பிச்சைக்கார ஹீரோ, காதல் பண்ற ஹீரோன்னு

சொல்ல ஆரம்பித்து விட்டால் எல்லாருக்கும் திருப்தியாக இருக்கும்!'' என்றார் இச்சாமி.

''இச்சாமி! நீர்தான் வாருமே! உம்ம சீனைப் பார்ப்போம்'' என்றார் வாசு. ''ஹூம்! இரண்டு வரிப் பேச்சு. நான் சமாளித்து விடுவேன். வேலுச்சாமி கவனித்துக்கொள்வான். நீ பெரிய சீனைப் பாரு!'' என்று இச்சாமி ஒதுங்கினார்.

''என் டைரக்டர் சார்! நாடக ஆசிரியர் கிட்டே சொல்லி அந்தப் பதினாறாவது சீனைக் கொஞ்சம் மாற்ற வேண்டும் என்றீர்களே? என்ன ஆச்சு?'' என்றான் கண்ணப்பன்.

''நான் அந்தக் காட்சியையே எடுத்து விடத் தீர்மானித்துவிட்டேன்'' என்றார் வாசு.

''சார்! சார்! குடிகெட்டது. நான் தலையை நீட்டுகிற காட்சி அது ஒண்ணே ஒண்ணுதான்! அதையும் எடுத்திட்டீங்கன்னா எனக்கு ஏது சார் சான்ஸ்? ஜன்மம் முழுதும் 'பிராம்டிங்' பண்ணுவதுதானா என் வேலை?'' என்று ஆரம்பித்தான் வேலுச்சாமி.

''உனக்காகவேதான் அந்தக் காட்சியை எடுத்தேன்! ஒரு கனராவி பொம்மைச் சட்டையை மாட்டிக் கொண்டு நீ மேடையில் தோன்றுவது சகிக்கவில்லை. நீ உடனடியாக அந்தச் சட்டையைக் கூவத்தில் கொண்டு விட்டெறிவதாக இருந்தால் அந்தப் பதினாறும் காட்சியை வைத்துக் கொள்கிறேன்'' என்று கூறினார் வாசு.

''சரிதான் போங்கள். நான் அதைக் கூவத்திலே போட்டால் கிருஷ்ணமூர்த்தி என்னைத் தூக்கிக் கூவத்திலே எறிந்திடுவான். அது அவன் சட்டை. நான் இரவல் வாங்கிக் கொண்டேன்.'' வேலுச்சாமி கண்களை ஸ்விட்ச் டில் ஓட்டினான்.

நாடகத்தை எழுதிக் கொடுத்த நாதப் பிரம்மம் சைக்கிளில் வந்து இறங்கினார். ''ஒத்திகை ஜரூராக நடக்கிறாப் போல் இருக்கு? எத்தனை சீன் வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே வந்து உட்கார்ந்தார்.

''சாருக்கு வெற்றிலைப் பொட்டலத்தைக் கொடு வேலுச்சாமி!'' என்று வாசு உத்தர விட்டார். நாதப் பிரும்மம் சாவகாசமாக இரண்டு சீவலை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்.

''வாசு சார்! அந்தக் கிளைமாக்ஸ் ஸீனை ஒரு தடவை பார்க்கலாமோ?'' என்றார் ஆசிரியர்.

''அநேகமாக நாடகத்தன்று மேடையிலே தான் பார்க்க முடியும் போல் இருக்கிறது. அந்தக் காட்சியை! நம்ப பசங்க ஜமாய்த்து விடுவாங்க சார்!''

''அப்படீன்னா முழுசான ஒத்திகை நாடகத் தன்று மேடையில்தான் நடக்கும் போலிருக் கிறது!'' என்றார் நாதப்பிரும்மம்.

''கரெக்ட்! இப்போது நடப்பது நாடகத் துக்கு ஒத்திகை இல்லை. ஒத்திகைக்கு ஒத்திகை!'' என்று சொல்லிக் கொண்டே இச்சாமி எழுந்தார்.

சிரிப்பொலி அந்த மண்டபத்தில் எதிரொலித்தது!

மனசாட்சிப் போராட்டம்

வழக்கத்தைவிட அதிகமான உற்சாகத்துடன் அன்றைக்கு நாடக ஆசிரியன் ரத்தினம் தன்னுடைய அறைக்குத் திரும்பி வந்தான். நடிகன் குருசாமிக்கு ரத்தினத்தின் உற்சாகத்துக்குக் காரணம் தெரியவில்லை. ரத்தினம் தனது குதூகலத்தை மறைத்துக் கொள்ளத் தெரியாதவன் போல் குருசாமியிடம் கலகலப்போடு பேசினான். அவனை அழைத்துக் கொண்டு ஹோட்டலுக்குப் போய் ஒரு விருந்து வைக்கப் போவதாகக் கூறினான்.

''அண்ணா வாருங்கள், 'அமிர்த விலாஸ்' ஓட்டலுக்குப் போய் அல்வா சாப்பிடுவோம். இன்றைக்கு உங்களுக்கு ஒரு நல்ல சமாசாரம் சொல்லப் போகிறேன். ருசிகரமான பலகாரத்தைச் சாப்பிட்டு விட்டு ருசிகரமான செய்தியையும் கேளுங்கள்'' என்றான்.

''என்ன விஷயம் ரத்தினம்? உன்னுடைய நாடகம் ஏதாவது திரையில் வரப் போகிறதா?''

''ஆமாம்!'' என்றான் ரத்தினம்.

குருசாமி தாங்க முடியாத குதூகலப் பெருக்குடன் அவனுடைய கரத்தைப் பற்றிக் குலுக்கினான். ''ரத்தினம்! உன்னுடைய நாடகக் கற்பனையை இனிமேல் இந்த நாட்டிலுள்ள பல லட்சம் மக்கள் தெரிந்து கொள்ளப் போகிறார்கள். ஒரு கலைஞன் விரும்புகிற முதல் பெருமை இதுதான். தான் பெற்றெடுத்த குழந்தையின் அருமையை உலகம் தெரிந்து கொள்ளுகிறது என்ற பூரிப்பு ஒரு தாய்க்கு ஏற்படும் நிலைமை உனக்கும் வந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து இனி உனக்குரிய புகழும் பொருளும் வந்து சேரும்...நல்ல காலம் பிறந்து விட்டது ரத்தினம், நல்ல காலம் பிறந்து விட்டது...!''

''அண்ணா! உங்களுடைய மனம் பரந்த மனம் அண்ணா!'' என்று நாத் தழுதழுக்கக் கூறினான் ரத்தினம். அப்படிக் கூறிய போது அவனுடைய சிரிப்பும் குதூகலமும் எங்கோ மறைந்து விட்டன. திடீரென்று அவனுக்குத் தொண்டை கட்டியது. கண்களில் நீர் மணிகள் திரண்டு வந்தன.

''என்ன ரத்தினம்?'' — என்று திடுக்கிட்டான் குருசாமி.

''பட்டப் பகலில், கண்களிரண்டும் திறந்திருக்கும் போதே, உரியவனுக்கு முன்னாலேயே பகற் கொள்ளை நடந்து விட்டதண்ணா! என்னுடைய நாடகம் திரையில் வரத்தான் போகிறது; வெற்றி பெறத்தான் போகிறது. ஆனால், என் பெயரில் அது வராது! நான் பெற்ற செல்வம் என்று அதைப் பலர் தெரிந்து கொள்ள மாட்டார்கள்! அதற்குரிய புகழும் பொருளும் என் சிந்தனையைத் திருடிய இல்லையப்பனுக்கு, என் உழைப்பைச் சுரண்டிய பாவிக்கு, கிடைக்கப் போகிறதண்ணா.— அண்ணா! தெய்வம் என்று ஒன்று இருக்கிறதா? இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா?''



''நடந்ததை விவரமாகச் சொல், ரத்தினம்!''

''எந்த நாடகத்தைத் திரைக்கு ஒத்து வராது என்று என்னிடம் திருப்பிக் கொடுத்தாரோ, அதே நாடகத்தை அவர் இப்போது படமாக எடுத்துக் கொண்டிருக்கிறார். என் கண்ணெதிரிலேயே எல்லா வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. கண்ணெதிரில் நடக்கும் இந்தக் கொள்ளையைத் தடுப்ப

நற்கு வலிமையில்லாமல் நான் தவித்துக் கொண்டிருக்கிறேன்.''

குருசாமி யோசித்தான். முதலில் தன்னுடைய நண்பனுக்காக இரங்கிய மனம் திடீரென்று இரும்பாக மாறியது.

''ரத்தினம்! நான் உனக்காக இப்போது கவலைப் படவில்லை; நீ செய்த பாவம் உன்னையே திருப்பி வாட்டுகிறது'' என்றான். ''கேவலம், பணத்துக்காக உன் மனச்சாட்சியை அடகு வைத்து, நீ அவனுக்காக இதே வேலையைச் செய்து கொண்டிருந்தாய். மற்றவர்களின் உயிரை நீ அவனுக்குத் திருடிக் கொடுத்தாய். உன்னுடைய மரத்துப் போன மனச்சாட்சியின் பலவீனத்தைத் தெரிந்து கொண்டு உன் தலையிலேயே அவன் கை வைக்கத் துணிந்து விட்டான்.''

''அண்ணா!''

''உன் விஷயம் என்று வரும் போது உனக்கு ஏற்படும் துடிப்புத் தானே மற்றவர்களுக்கும் வரும்? தாங்கள் பெற்ற குழந்தைகளை யாரும் பறி கொடுக்க விரும்புவார்களா?''

''உண்மை தான்'' என்று மனச் சோர்வோடு ஒப்புக் கொண்டான் ரத்தினம். ''இந்த உண்மையை இப்போதுதான் நான் அநுபவித்து உணர முடிகிறது. எழுத்துக் கலைஞனுக்கு உள்ள ஒரே கற்பனைச் சுரங்கம் அவனுடைய மனச்சாட்சிதான். எதற்காகவும் அதைமட்டும் அவன் இழந்துவிடக் கூடாது. பிறகு பேனாவைக் கையில் தொடுவதற்கே அவன் அருகதையற்றவன்.''

''நீ இப்போது என்ன செய்துவிட்டு வந்திருக்கிறாய்? மேற்கொண்டு என்ன செய்யப் போகிறாய்...?''

''என்னுடைய வயிற்றெரிச்சல் தீரத் தில்லையப்பனைத் திட்டிவிட்டு, அங்கே வேலை பார்ப்பதை விடப் பிச்சை யெடுப்பது மேல் என்று சொல்லிவிட்டு வெளியில் வந்திருக்கிறேன்.''

''இதுவரையில் நீ திருடிக் கொடுத்த மற்ற எழுத்தாளர்களின் கதி உன் கதியைப் போலத்தானே ஆகும்? அவர்களும் உன்னைப் போலத் தானே துடித்துத் தவிப்பார்கள்?''

ரத்தினத்தின் தலை சுழன்றது. தங்களது இரத்தத்தின் இரத்தத்தையும் உயிரின் உயிரையும், வேர்வைத் துளிகளின் உவர்ப்பையும், உள்ளக் கொதிப்பின் குமுறல்களையும் எழுத்தில் வடித்திருந்த சில எழுத்தாளர்களை அவன் நினைத்துக் கொண்டான். அவர்களில், இரண்டு மூன்று பேர்களுடைய கதைகளை மாதம் நூறு ரூபாய்ப் பிச்சைக் காசுக்கு அவன் தில்லைக்குத் திருடிக் கொடுத்தவன். ஆனால், அந்த ஆசிரியர்களோ எந்தப் பெரிய லாபத்தையும் எதிர்பாராது சமுதாயத்தைப் பற்றித்



தங்களது சிந்தனைகளை எழுத்தில வடித்தவர்கள். அப்படி எழுதியதற்காகப் பழிப்பும் பாராட்டுதலும், எதிர்ப்பும் ஆதரவும் பெற்றவர்கள்.— ஏழைகள்; பரம ஏழைகள்; சிந்தனைச் செல்வம் தவிர, கற்பனைச் செல்வம் தவிர, தங்களுக்கு ஏதும் தேடிக் கொள்ளத் தெரியாத அப்பாவிகள்.

''அண்ணா! இன்றைக்குக் கூட ஒரு நூலாசிரியரும் தில்லையப்பனும் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த நூலாசிரியரின் நூலைத்தான் தில்லையப்பன் தமது அடுத்த படத்துக்குத் தயாரித்துக் கொண்டிருந்தார். இந்த லட்சணத்தில் அவரிடம் நேருக்கு நேர் எவ்வளவு மதிப்பும் அன்பும் கொண்டவர் போல் பேசுகிறார் தெரியுமா? என்னிடம் அன்றைக்குச் சொன்னது போலவே, 'உங்களுடைய இந்தக் கதை படத்துக்கு ஒத்து வராது; வேறு கதை ஒன்று எனக்குப் பிடித்திருக்கிறது; அதை உங்களிடம் கேட்டு நான் செய்யப் போகிறேன்' என்று எவ்வளவு சாதுரியமாகப் பேசுகிறார் தெரியுமா?''

'' 'ஒத்து வராத கதை' என்ன ஆயிற்று?''

''ஏற்கனவே தில்லையப்பனுடைய பெயரில் உருவாகிக்கொண்டிருக்கிறது.''

''ஓடு! முதலில் ஓடிப் போய் அந்த ஆசிரியரிடம் உண்மையைச் சொல்லிவிடு. மற்ற ஆசிரியர்களிடமும் சொல்லிவிடு. அவரவர்களை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ளச் சொல். நீ உன் வாழ்நாளில் செய்கிற ஓர் உயர்ந்த செய்கை இது. உன் மனச்சாட்சியின் அழுக்கைச் சுத்தமாகக் கழுவித் துடைத்துக் கொண்டு, பிறகு நீ கையில் பேனாவை எடுக்கலாம். உன் எழுத்தில் தெய்வமும் மனச்சாட்சியும் இருக்குமானால் அது தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும்....''

அவசரமாக வெளியில் சென்ற ரத்தினம் பிறகு தயக்கத்துடன் திரும்பி வந்தான். ''அதைச் சொல்வதால் எனக்குத் தில்லையப்பன் தொல்லை கொடுப்பாரே! கூறாத் தூக்கும் ஆட்களும், கொள்ளைப் பணமும் அவர் கையில் வைத்திருக்கிறாரே!''

''பயந்து கொண்டு நூறு வருஷம் வாழ்வதை விட நேர்மைத் துணிவோடு ஒரு நாள் வாழ்ந்தால் போதும், ரத்தினம்! உன்னிடமும் என்னிடமும் பயப்படுவதற்கு என்ன இருக்கிறது? மேலே, வானம், கீழே தரை, பசித்தால் பச்சைத் தண்ணீர்!...விட்டுத் தள்ளு! இழப்பதற்கு ஒன்றுமே இல்லாத போது, இருக்கும் மனச்சாட்சியையாவது நாம் காப்பாற்றிக் கொள்வோம்!''



ரத்தினம் அறையை விட்டுக் கிளம்பியவுடன் குருசாமி அங்கு கிடந்த உடைந்த நாற்காலியில் உட்கார்ந்தான். அது இப்படியும் அப்படியுமாக ஆடியது. தரையில் நிலைத்து நிற்க மறுத்தது. குருசாமி தங்களுடைய கலைவாழ்வும் இப்படித்தான் ஆட்டம் கொடுத்துக் கொண்டிருக்கிறதென்று நினைத்துக் கொண்

டான். பூதாகாரமான, பயங்கரமான இயந்திரங்கள் வந்த பிறகு, பல துறைகளிலுமுள்ள ஆயிரக்கணக்கான மெய்க் கலைஞர்கள் அவற்றின் பேராசைக்குத் தினமும் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கே வாழ்வு? எங்கே பாதுகாப்பு?—பொருளை மதித்தவனுக்கு வாழ்வும், மனிதனை மதித்தவனுக்குத் தாழ்வும் நேர்ந்தால் அதற்கு யார் பொறுப்பு?

அத்தியாயம் நாற்பது

அன்னையும் தந்தையும்

தர்ம நியாயமான காரியத்துக்கு ரத்தினத்தை அனுப்பி வைத்திருப்பதாக நினைத்துக் கொண்ட குருசாமி, சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தத் தர்ம நியாயத்தின் பின் விளைவுகளை எண்ணிப் பார்த்தான். 'வயிற்றுப் பசியைப் போக்குவதற்கு வழியில்லாதவர்களுக்கு ஏன் இந்தத் தர்ம நியாயத் தொல்லைகள்!' என்றும் அவனால் கவலைப்படாமல் இருக்க முடியவில்லை. ரத்தினத்துக்குக் கிடைத்த வேலையும் போய் விட்டது. இனி மேல் வழக்கம் போல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு, இருவரும் மறுபடியும் வயிற்றுப் போராட்டத்துக்குப் புதிய வேகம் கொடுக்க வேண்டியதுதான்.

'முட்டாள்தனம்! முட்டாள்தனம்!' என்று தன்னையே ஒரு கணம் நொந்து கொண்டான் குருசாமி. 'யோக்கியனாக நல்லவனாக, மனச்சாட்சி உள்ளவனாக, உண்மையோடு உழைப்பவனாக இருப்பதைப் போல் முட்டாள்தனம் வேறு இல்லவே இல்லை!'

யாரோ ஒரு கிழவன் அவசரமாக அவனுடைய அறைக் கதவுக்கு வெளியில் வந்து நின்று கொண்டு குரல் கொடுத்தான். குருசாமியின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். குருசாமி வெளியில் வந்து கிழவனை உற்றுப் பார்த்தான். நரைத்துப் போன பரட்டைத் தலை; கிழிந்த சட்டை; அழுக்கு வேட்டி; குழி விழுந்த கண்கள்.

''கோடம்பாக்கத்திலே குடியிருக்கிற பாட்டியம்மா உங்களைக் கையோடே கூட்டிக்கிட்டு வரச் சொன்னாங்க. ரொம்ப அவசரமான காரியமாம்.''

அவசரமான காரியம் என்றவுடன் பளிச்சென்று கருணாவின் நினைவு வந்தது குருசாமிக்கு.

''அந்தப் பெண் கருணாவுக்கு ஏதாவது......''

''ஆமாங்க, இடுப்பு வலி வந்து துடியாத் துடிக்குது. ஆனால் ஆஸ்பத்திரிக்குப் போக மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சுக்கிட்டிருக்கு. கிழவி ஒண்டிக் கட்டையா இருந்துக்கிட்டு, வீட்டிலே பிரசவத்தைக் கவனிக்க முடியுங்களா?''

குருசாமிக்கு வாய் விட்டுச் சொல்ல முடியாத வேதனை. அந்தச் சமயத்தில் தான் அவள் முன்பு போய் நிற்பதை அவள் விரும்புவாளா? சிறிய அதிர்ச்சியைக் கூடத் தாங்க முடியாத நிலையாயிற்றே!

''கருணாவுக்கு நான் அங்கு வரப்போவது தெரியுமா?'' என்று கேட்டான் குருசாமி.

''அந்தப் பெண்ணுக்குத் தெரியாமல்தான் என்னை அனுப்பி வச்சாங்க. நீங்க அடுத்த வீட்டிலே வந்திருந்தாப் போதும்னு சொன்னாங்க.''

தலையைக் கூடச் சரியாக வாரிவிட்டுக் கொள்ளாமல் கிழவனைப் பின்பற்றினான் குருசாமி. கோடம்பாக்கத்தில் கருணா குடியிருந்த வீட்டுக்கு அருகில் செல்லும் போதே அவளுடைய வேதனைக்குரல்கள் குருசாமிக்கு எட்டி விட்டன. சின்னஞ் சிறு வயதில் நிகழவிருந்த முதல் பிரசவமல்லவா? உள்ளத்தை உலுக்கியெடுக்கும் அந்தக் குரல்களைச் செவிமடுத்துக் கொண்டே பாட்டியின் வீட்டுக்குள் நுழைந்தான் குருசாமி. பாட்டி ஒரு கணம் கருணாவைத் தனியாக விட்டு விட்டுக் குருசாமியிடம் ஓடி வந்தாள்.

''எப்படியும் இன்னிக்குள்ளே குழந்தை பிறந்திடும். ஆனால் ஆள் துணையில்லாமல் நான் மட்டும் அவளுக்கு என்னத்தைச் செய்ய முடியும்? அக்கம் பக்கத்திலே இருக்கிறவங்களுக்கு அவங்களோட சொந்தக் கவலைகள் இருக்கு. இந்தப் பெண்ணும் அவங்களோட அண்டிப் பழகாததினாலே, அவங்களும் திடீர்னு உதவிக்கு வரமாட்டாங்க... அதிலேயும் இவளோட கஷ்டத்துக்கு இரக்கப்படுறவங்க ரொம்பக் குறைவு. அந்தப் பாவிப் பயலோ ஓடிப் போயிட்டான். இப்போ என்ன செய்யறது?''

''எப்படியும் ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியதுதான்.''

''ஆஸ்பத்திரின்னு சொன்னாலே உயிரை விட்டுவிடுவேன் என்கிறாளே!''

குருசாமிக்குக் கோபம் வந்துவிட்டது. ஆண்டவன் அந்தப் பெண்ணுக்கு அடியோடு அறிவைக் கொடுக்க மறந்து விட்டதாய்க் கிழவியிடம் கூறினான்.

எப்படியாவது அவளிடம் கூறிச் சம்மதிக்க வைக்கும்படி கேட்டான்.

கிழவியும் ஆஸ்பத்திரி பற்றிய விஷயத்தில் ஓரளவு தயங்குவதாகவே குருசாமிக்குத் தோன்றியது. காரணத்தைக் கிழவி வெளிப்படையாகத் தெரிவிக்க விரும்பாமல், வேண்டுமென்றே மென்று விழுங்கினாள்.

''ஏழை எளியவர்களுக்குத்தான் இப்போதெல்லாம் கூடியவரையில் வசதி கிடைக்கிறதே! நம்மைப் போல் துணையில்லாதவர்களுக்கு அதைவிட்டால் வேறு வழி ஏது? அங்கு போவதுதான் நல்லது, பாட்டி.''

''எனக்கும் அது தெரியுது; அவளுக்கும் அது தெரியுது. ஆனால்....''

குருசாமி கிழவியை வற்புறுத்திக் காரணம் கேட்டான். கிழவி மெதுவாக அவன் காதருகில் வந்து எதையோ கூறினாள். குருசாமியின் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் மின்சாரத்தின் அதிர்ச்சி தாக்கியது. அந்த அதிர்ச்சியிலிருந்து அவன் மீளுவதற்குள், கருணையின் வேதனைக்குரல் கேட்டுக் கிழவி அவளிடம் ஓடினாள்.

குருசாமி ஒரு விநாடி அப்படியே மரமாக நின்றான். கிழவி அவன் காதருகில் வந்து கூறிய ரகசியம் அவன் உள்ளத்தைக் கொந்தளிக்கும் கடலாக மாற்றியது — பிறகு அந்தக் கடலிலும் அமைதி நிலவியது.

கிழவரிடம் சொல்லி ஒரு வாடகைக் கார் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தான். பாட்டியைத் தனியே அழைத்து உடனடியாகச் கருணையை அரசாங்க மருத்துவ மனைக்கு வற்புறுத்தி அழைத்துச் செல்லும்படி கூறினான். பெரியவர்கள் இருவரும் பிடிவாதம் பிடித்து, கருணையைக் காருக்குள் ஏறச் செய்து ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினார்கள். பாட்டியின்மீது மயக்கத்துடன் சாய்ந்து கொண்டே ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தாள் கருணை. பின்னால் தொடர்ந்து வந்த மற்றொரு வாடகைக் காரைக் கவனிக்கக்கூடிய அளவுக்கு அவளுக்குச் சுயநினைவு இல்லை.

மருத்துவ மனைக்குச் சென்று இறங்கிய போது கருணைக்குப் பாதி நினைவுதான். தனது விருப்பத்துக்கு எதிராகத் தன்னை அங்கே கொண்டு வந்த பாட்டியையும் கிழவரையும் மாறி மாறிப் பார்த்தாள். கண்களில் கண்ணீர் மளமளவென்று பொங்கியது. அடிவயிற்றில் ஏற்பட்ட வலி சிறிதுகூட அவளுக்கு நிற்கவில்லை. ஆனால் அந்த வலிக்காகவா அவள் அப்படி அழுதாள்? இல்லவே இல்லை.....

இலவச மருத்துவமனை யென்றாலும் அரசாங்கத்தின் சில சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பது அது. முறைப்படி அவர்கள் கேட்க வேண்டிய விவரங்களைக் கேட்டுக் குறித்துக் கொள்வார்கள். அவள் பெயர், அவளுடைய கணவனின் பெயர், அவனுடைய வேலை, விலாசம் முதலிய விவரங்களைக் கேட்கத் தொடங்கினார்கள்.

கணவனின் பெயரைக் கேட்டவுடன் பரிதாபமாகப் பாட்டியின் பக்கம் திரும்பி விழித்தாள் கருணை.

''சொல்லம்மா! பிறக்கப் போகும் குழந்தையின் தகப்பன் பெயர் எங்களுக்குத் தெரிய வேண்டாமா? பழைய காலத்துப் பெண்ணைப் போல் வெட்கப்படுகிறாயே!''

வலி குபீரென்று கிளம்பியது போல் அந்த மருத்துவமனையே பிளக்கும்படி ஒரு கூக்குரலிட்டாள் கருணை.

குருசாமி ஓடோடியும் வந்து அங்கு நின்றான்.

''நான்தான் குழந்தையின் தகப்பன்; என் பெயர் குருசாமி; நடிப்பது என் தொழில்'' என்று மளமளவென்று சொல்லிக் கொண்டு போனான். பாட்டிக் கிழவி வாயடைத்து நின்றாள். கருணை எதையோ சொல்ல வாயெடுத்தாள். அவளால் முடியவில்லை. தன்னுடைய இரு கரங்களையும் தலைக்கு மேல் தூக்கிக் கரங் கூப்பினாள்.

'வானத்துத் தெய்வங்களே! நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மனிதரின் உருவத்தில் இங்கு வந்திருக்கிறீர்களா? நான் செய்த பாவங்களை எனக்குச் சுட்டிக் காட்டி என்னை மன்னிப்பதற்கென்றே இவரை அனுப்பி வைத்தீர்களா?....நான்....நான்.... கேவலம்... இந்த உத்தமரின் கால் தூசிக்குச் சமமானவள் அல்ல!......'

அவசரம் அவசரமாகக் கருணையைப் பிரசவ அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அவள் பெற்ற வேதனைகளை விடப் பன்மடங்கு வேதனைகளைத் தனது நெஞ்சில் சுமந்து கொண்டே அங்கு காத்திருந்தான் குருசாமி. புதிய பிறவியின் முதற் குரல் உள்ளிருந்து கணீரென்று எழுந்தது.

ஓர் இளம் நர்ஸ் ஓடி வந்து, ''ஸார்! உங்களுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கு ஸார்!'' என்று மகிழ்ச்சியுடன் கூறிச் சென்றாள்.

குருசாமியின் இதயம் அந்தக் குழந்தையை நாடி நழுவிச் சென்றது. தகப்பனல்லவா!

(தொடரும்)

ஏன்?

வீ. சுவாமிநாதன்

பவழமல்லிகை மலர் என்றால் ரமணனுக்கு ரொம்பவும் பிடிக்கும். அவன் குடியிருந்த வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு நந்தவனமே இருந்தது. காலை வேளையில் துயிலெழும்போதே காற்றோடு பவழ மல்லிகை மணம் கலந்து வந்து அவனைத் தேவலோகத்துக்குக் கொண்டு போகும். அதை அநுபவித்தபடியே இன்னும் கொஞ்சம் நேரம் படுக்கையில் புரண்டு விட்டுத்தான் அவன் எழுவான்.

பவழ மல்லிகைக்கு மணத்தைப் போலவே அழகும் அலாதிதான். எத்தனையோ சமயங்களில் ஒரே ஒரு பூவை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு அவன் என்னென்னவோ கோணங்களில் அழகு பார்த்திருக்கிறான். கள்ளமில்லாமல் வெள்ளை வெளேரென்று ஐந்தே ஐந்து இதழ்களும், அவைகளைத் தாங்கிய வண்ணம் பவழச் சிவப்பில் வெளிக் கிளம்பும் சின்னஞ்சிறு காம்பும் —

தொட்டாலே நைந்து விடும் மென்மை. அதன் அழகே அதன் மென்மையில் தான் இருக்கிறது.

எதிர் வீட்டுத் தோட்டத்தில், காம்பவுண்டுச் சுவரோரத்தில் வளர்ந்து, தெருவை நோக்கிச் சாய்ந்திருந்தது அந்தப் பவழ மல்லிகை மரம்.

மார்கழி மாதத்தில், வைகறைப் பனியில், எழுந்ததும் நீராடி, திருப்பாவை சொல்லக் கோவிலுக்குப் போகும் போது அந்தப் பவழ மல்லிகை மரத்தைப் பார்த்துக் கொண்டே செல்வான் அவன். சிந்தனையோடு இசைக்கும் கீதத்தில் வெளி வரும் சொற்களைப் போல மலர்கள் ஒவ்வொன்றாய் அலர்ந்து, கிண்கிணி வாய் திறந்து மெல்லச் சிரிப்பதைப் போலிருக்கும். நெஞ்சு நெகிழச் சற்று நேரம் நின்று, அவைகளின் அழகிய புன்னகையை ரசித்தால் தான் மேலே அடி எடுத்து வைக்க முடியும், அவனால்.

கோவிலிலிருந்து அவன் திரும்பும் போது வெய்யில் ஏறியிருக்கும். பூத்த அத்தனை மலர்களும் தெரு நெடுக உதிர்ந்து கிடக்கும்.

அந்தத் தெருவில் போவோரும் வருவோரும், காரும் லாரியுமாக நடமாட்டம் அதிகம். தெருவில் உதிர்ந்த மலர்கள் கண் மூடித் திறப்பதற்குள், காலடியிலும் காரடியிலுமாக நசுங்கி அழியும். அதைப் பார்க்கப் பார்க்க ரமணனின் உள்ளம் துடிக்கும்.

அவன் திரும்பத் திரும்ப யோசித்துப் பார்க்கிறான். தெளிவாய் எதுவும் புரியவில்லை. இத்தனை அழகாய், இத்தனை மணமாய் இந்தப் பூக்கள் ஏன் பூக்க வேண்டும்? பூத்ததும் ஏன் உதிர வேண்டும்? காலடியிலும் காரடியிலுமாக நசுங்கவா இவைகள் பூக்கின்றன?

ஒரு வேளை, இப்படிப் பூத்ததும் அழிவதில் தான் பவழ மல்லிகையின் பெருமை இருக்கிறதோ? அழிந்த பின்னும் மணம் குன்றவில்லையே— அது எப்படி?

இதெல்லாம் என்ன அர்த்தமற்ற யோசனைகள்?

இந்த யோசனைகளில் அர்த்தமிருக்கிறதோ, இல்லையோ, இப்படி யோசிக்க ஆரம்பித்து விட்டால் ரமணன் தன்னையே மறந்து போய் விடுவான். 'ஈஸிசேரில்' சாய்ந்தபடியே கூரை முகட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டு மணிக் கணக்கில் அவன் உட்கார்ந்திருக்கும் போது அவனைப் பார்க்கவே ஏதோ அச்சமாயிருக்கும். அவன் கண்கள் ஏற்றி வைத்த விளக்குகள் போல் தகதகவென்று மின்னும். சுவாசத்தைத் தவிர வேறெந்த சலனமும் இருக்காது.

இந்த யோகாப்பியாசம் அறையில் மட்டும் தான் என்றில்லை. கல்லூரியில் ஆசிரியர் பாடப் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது அதைக் கவனித்தபடியே எப்படியோ நிஷ்டை நிலைக்கு வந்து விடுவான். வகுப்பில் அமர்ந்திருக்கும் நிலையே அற்றுப் போகும். வகுப்பு கலையும்போது யாராவது உலுக்கி எழுப்பினால் தான் கனவு பிரிந்து எழுந்து வருவான்.

ரமணனின் அப்பாவுக்குத் தன் மகன் பெரிய 'இன்ஜினீயராய்' வர வேண்டும் என்று நெஞ்சு கொள்ளாமல் ஆசை. யார் யாரையோ கெஞ்சி, எங்கெங்கோ சிபாரிசு பிடித்துத்தான் அவனைப் பொறியியல் கல்லூரியில் சேர்த்தார். அவனுக்கு ஒவ்வொரு சம்பளப் பணம் கட்டும் போதும் அவருக்கு அதே பாடுதான். மீண்டும் மீண்டும், யாரிடம் வாங்குகிறாரோ, எங்கே இறைஞ்சுகிறாரோ தெரியாது. எப்படியோ குறித்த தேதிக்குள் ரமணன் கைக்குப் பணம் வந்து சேர்ந்து விடும். ஒரு முறை கூட அவன் அபராதத்தோடு சம்பளம் கட்டியவன் அல்ல. மகன் பெரிய இன்ஜினீயராகிப் பணமாய்க் கொழிக்கும் போது இந்தக் கடனை அடைப்பது எம்மாத்திரம் என்ற அலட்சியம் அப்பாவுக்கு. இதெல்லாம் ரமணனுக்குத் தெரிந்து தான் இருந்தது. இருந்தும் படிப்பில் நாட்டம் பதிந்தால் தானே!

கல்லூரியில் ரமணனைச் சேர்த்த கையோடு அவனை ஹாஸ்டலிலும் சேர்த்தார் அவனுடைய தந்தை. கல்லூரியின் அருகே ஹாஸ்டலும் இருப்பதால் மகனின் படிப்புக்கு இது வசதியாய் இருக்கும் என்ற எண்ணம் அவருக்கு.

ஒரு மாதம் ரமணன் ஹாஸ்டலில் இருந்தான். அவனுடைய சுபாவத்துக்கு அந்தச் சூழ்நிலை ஒத்து வரவில்லை. உடன் ஒத்த நண்பர்களின் கோஷங்களும், கேளிக்கைகளும் சலிப்பை விளைவித்தன. எதற்காக இப்படிக் கூக்குரல், எதைக் கண்டு இத்தனை ஆரவாரம் என்று அலுத்துக் கொள்வான். தாமரையிலை நீர் முத்துப் போல் யாருடனும் ஒட்டாமல் ஒதுங்கி விடுவான்.

அவனுடைய ஒதுக்கமும், தவ நிலையும் அவர்களுடைய பரிகாசத்துக்கு வாட்டமாக அமைந்தன. அவர்களுடைய கிண்டலும் கேலியும் பொறுக்க முடியாமல் எல்லை மீறிப் போய் ஒரு நாள் ஹாஸ்டலிலிருந்து டாக்ஸி வைத்துக் கொண்டு வெளியே வந்து விட்டான் ரமணன்.

அன்றிலிருந்து இந்த அறையில்தான் தங்கியிருக்கிறான். இந்தப் பவழ மல்லிகை மரத்தைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறான். இப்படித்தான் யோசிக்கிறான்.

யோசிக்க யோசிக்க ரமணனுக்கு என்னென்னவோ தத்துவங்கள் அதனுள்ளிருந்து, தனித் தனியாயும் ஒரே வடிவாயும் விழித்துக் கண் சிமிட்ட ஆரம்பித்தன. மாடியறை — தனி

யறை. அவனுடைய தவத்தைக் கலைப்பார் யாருமில்லை. வாய் மூடிய மௌனம் தன்னைச் சூழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் கிடந்தான். கண்ணெதிரே இருப்பதைக் காணுமல், தன் நெஞ்சோடு தானே பேசிக் கொள்ளும் போது எத்தனை இன்பமாய்ப் போகிறது!

அவன் குடியிருந்த வீட்டின் கீழ்ப் பகுதி வெகு நாட்கள் வரை காலியாகப் பூட்டிக் கிடந்தது. அதுவும், ஒரு வேளை, ரமணனைப் போலவே நிஷ்டையில் லயித்து மௌனமாய் நின்றதுவோ!

திடீரென்று ஒரு நாள் கீழ்ப் பகுதியில் பூட்டு அசையும் ஓசை. நாதாங்கியிலிருந்து சங்கிலி அவிழ்ந்து விழும் 'ஜல் ஜல்'. பல நாட்கள் புழங்காத கதவாதலால், திறக்கப் படும் போது 'கர்.....மர்'.. ரமணன் யோகம் கலைந்து ஜன்னல் வழியே நிமிர்ந்து பார்த்தான்.

கீழ்ப்பகுதியில் புதிதாய் ஒரு குடித்தனம் வந்திருக்கும் அறிகுறி தென்பட்டது. வாசலில் நின்ற கைவண்டிகளில் சாமான்கள் முடிச்சு முடிச்சாய் மூரண்டிக் கொண்டு நின்றன.

சற்றைக்கெல்லாம் ஏதோ காரியமாய் மாடிப்படிகளில் அவன் இறங்கி வரும் போது, கலகலவென்று வளையல்கள் குலுங்கும் ஒலி. புடவைத் தலைப்பை ஒதுக்கிக் கொண்டு சற்றே நகர்ந்து அவனுக்குச் செல்ல வழிவிடும் காலடியின் மெத்தென்ற அரவம். பிரி அவிழ்ந்த பின்னலைப் பின்னுக்கு ஒதுக்குகையில் ஊஞ்சலாடும் கதம்பச் சரத்தின் மல்லிகை வாசனை.

மல்லிகை — பவழ மல்லிகை!

வெள்ளை வெளேர் என்று அலையும் ஐந்து இதழ்களைப் போல வெள்ளாடை... பவழ வண்ணத்தில் தலை நீட்டும் காம்பைப் போல் தலைப்பின் ஓரம்.

பவழ மல்லிகை!

''மல்லிகா!.....'' — கூடத்தில் யாரோ அழைக்கும் குரல்.

''இதோ வந்துட்டேன் மாமி!....''

மல்லிகா — மல்லிகை — பவழ மல்லிகை!

கீழே வந்த காரியத்தை மறந்துவிட்டு, ரமணன் மாடிக்கே திரும்பி விட்டான். 'ஈஸி சேர்' அவனை ஏந்திற்று. தென்றல் நெற்றி வியர்வையை ஒற்றியது.

நெடுநேரம் அவனுடைய சிந்தையிலிருந்து அந்த நிமிர்ந்த முகமும், அப்போது குலுங்கும் வளையலின் ஒலியும், பின்னுக்கு ஒதுங்கிய பின்னலும், அதில் ஊஞ்சலாடும் பூச்சரமும் அகலாது அலைந்தன.

சிந்தனையை உதறிக் கொண்டு கல்லூரிக்கு அவசரம் அவசரமாய்க் கிளம்பினுன். கீழ்ப் பகுதியைக் கடக்கும் போது காரணமற்ற ஒரு காரணத்துக்காக அவன் கண்கள் சுழன்று தேடலில் ஈடுபட்ட போது அவளுடைய விழிகளின் கருமணிகளைத் திரும்பவும் சந்திக்க நேர்ந்தது. மை தீட்டிய விழிகள்! மைக்கூண்டைத் திறந்தாற் போன்ற விழிகள்!

அவள் மேஜையின்மேல் கட்டுக்கட்டாய்ப் புத்தகங்களைச் சீராக அடுக்கி வைத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கும் இன்னும் கல்வி முடியவில்லையா?

அத்தனை புத்தகங்களையும் லாகவமாய்த் தனது மடித்த கைகளுக்குள் கொடுத்து மார்போடு அணைத்தபடி வாசற்படிகளைக் கடந்த போதுதோட்டத்தின் இலைகளிடையேகோத்து வாங்கி விழும் ஒளிச் சித்திரங்கள் அவள் வதன ஒளிர்வில் நிழலாட்டமாய் நலுங்கின. அந்த விநோதத்தை ரசிக்கும் நினைவில் அவன் இமைகள் சற்றே அழுத்தின.

''மாமி, காலேஜுக்குப் போயிட்டு வரேன்!'' அவள் விடை பெறும் வகையில் குரலெழுப்பும் விதமே புதுமையாக இருந்தது. இப்போது ரமணன் அதை ரசிக்கத் தலைப்பட்டான்.

அவளுடைய குரலின் குழைவில் ரசிக்கும் படியாக அப்படியொரு தனி இனிமை இருந்தது உண்மைதான். இன்னும் சரியாக மழலை மாருத குழந்தையின் குரல். சுருதி பேதம் இல்லாத குழலின் கீதம்!

அந்தக் குரலை மறுபடியும் கேட்க வேண்டும் என்ற ஆசையாலோ என்னவோ, வாசற் கேட்டைத் தாண்டும்போது, கேட்டின் தாழை மாட்டியபடி, அவளிடம் ரமணன் சட்டென்று அந்தக் கேள்வியைக் கேட்டான். கேட்ட விதத்தில் நடுக்கம் இருந்தது. பதில் தந்த விதத்தில் தயக்கமில்லை.

''எந்த காலேஜ்?''

''எஸ். ஐ. ஈ. டி. பியூஸி!..நீங்கள்?...''

''என்ஜினியரிங், பைனல் இயர்!....''

''பரஸ்பரம் பெயரே தெரியாத போது..''

அவன் இடை மறித்தான். ''உங்க பேரு எனக்குத் தெரியும். என் பேரு ரமணன்!''

பாதை பிரியும்போது அவள் விழிகள் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தன. அதே புன்னகை — பவழ மல்லிகையின் மலர்ச்சியில் தெரியும் புன்னகை.

எதற்காக இந்தப் புன்னகை?

அன்று கல்லூரியில் ரமணன் பாடத்தைக் கவனிக்கவில்லை. கவனிக்க முயன்றும் முடியவில்லை. திரும்பத் திரும்ப ஒரே வினாதான் எழும்பிற்று: 'எதற்காக இந்தப் புன்னகை?'

எதற்காக என்று எளிதில் காரணம் காட்ட முடியவில்லை. அநேக சமயங்களில் அநேக நிகழ்ச்சிகள் இப்படித்தான் காரணமின்றியே நேருகின்றன. அவைகளைக் காரணம் கேட்காமலே ரசித்துக் கொள்வதில் தான் அர்த்தமிருக்கிறது.

இரவில் பூத்துப் பகலில் வாடும் மலர்கள் சில; பகலில் பூத்து இரவில் குவியும் மலர்கள் சில. எப்போது பூக்கின்றன, எப்போது உதிருகின்றன என்று யாருக்கும் தெரியாமலே பூத்து உதிரும் மலர்கள் பலவுண்டு. அந்த ரகத்தில் மல்லிகாவின் புன்னகையும் ஒன்று.

ரமணனுக்கு அப்படித்தான் தோன்றியது. அன்றையிலிருந்து, அவளுடைய புன்னகை தனக்கு எங்கெங்கே கிட்டும் என்று அவனுக்குத் தெரியாது. ஏன், அவளாலேயே சொல்ல முடியாது.

அதிகாலை வேளையில், கையில் பற்பொடியுடன், எதிர்வீட்டுப் பவழமல்லிகை மணத்தை நுகர்ந்தவாறு மாடி வளைவில் படியிறங்குகையில், வாசல் தரையில் நீர் தெளித்து அவள் கோலமிட்டுக் கொண்டிருப்பது ரமணனின் பார்வையில் சிக்கும். பாதையை அடைக்கும் பிரும்மாண்டமான பூக்கோலத்தின் நடுவே பதித்து வைத்த பரங்கிப் பூப்போல் பாவாடை விரித்து புரள மண்டியிட்டுக் கோலத்தைச் செப்பனிட்டுக் கொண்டிருப்பவள் அவனைக் கண்டதும் சட்டென நிற்பாள். நெற்றியில் விழும் குழல் அலைகளைப் புறங்கையினுல் ஒதுக்


இக் கொள்கையில், காலையின் பொன்னொளி மேனியில் பளபளக்க அவள் தருகிற முல்லைப் புன்னகை அவன் தினமும் காணும் முதற் புன்னகை.

எட்டு மணி சுமாருக்கு வீட்டுக்குப் பொதுவான குளிக்கும் அறைக்குள் நுழைந்து, கதவை இழுத்துத் தாளிட்டு, தொட்டியிலிருந்து நீர் இறைக்கும் போது, அறைக்கு வெளியே யாரோ குடத்தைத் தரையில் வைக்கும் 'நற நற' சத்தம்கேட்கும். குலுங்கும் வளையலொலி கேட்கும். இடுப்பில் துண்டுடன், தாளிட்ட கதவைச் சற்றே திறந்து கொக்கைப் போல் கழுத்தை வெளியே நீட்டி, குடத்தை வாங்கி அதில் நீரை நிறைத்து அவளிடம் திரும்பத் தரும் போது கிடைக்கும் புன்னகை, கன்னம் குழியும் புன்னகை.

மாலையில் கல்லூரியிலிருந்து வந்ததும் கை கால்கள் கழுவிக் கோவிலுக்குச் சென்று, தெய்வத்தை வலம் வந்து, அவன் பிரசாதத்துடன் திரும்பும்போது வாசற்குறடுகளில் அவள் வேடிக்கை பார்த்து நிற்பாள். கையிலிருக்கும் கோவில் குங்குமத்தைப் பொட்டலமாக அவளிடம் தருவான். அளவாய் அமைந்த விரல்களால் நெற்றியில் வட்டமாய்த் திலகம் இட்டுக் கொண்டு நிமிரும் போது நீலம் பளபளக்கும் விழிகள் நன்றியோடு காட்டும் புன்னகை, மற்றொரு புன்னகை.

இரவில் ஒன்பதரை மணிக்கெல்லாம் வாசல் திண்ணையில், பிரம்பு நாற்காலியில், மார்பில் விரித்துப் போட்ட புத்தகம் மெல்ல நழுவ, வட்ட நிலவு முகம் தூக்க மயக்கத்தில் தொய்ந்து கவிழும் போது, அவள் தொண்டையை ஒரு முறை கனைத்து விட்டுக் கொண்டே அவனைக் கடந்து செல்வாள். சட்டென விழித்துக் கொண்டதும் தன் நிலையை உணர்ந்து வழியும் தாவணித் தலைப்பைத் தோள்பட்டையில் தள்ளிக் கொண்டு தருகிற புன்னகை, நாணம் கமழ் புன்னகை.

ஆனாலும் அவன் வெகு நாட்கள் வரை அதிகம் பேசியதில்லை. அவ்வப்பொழுது தேவையின் காரணத்தினால் சர்வ சகஜமாகப் பரிமாறிக் கொண்ட ஓரிரு வார்த்தைகளிலும் ஒருவித அர்த்தமுமில்லை. இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொரு நிமிஷமும் அவளோடு தான் சம்பாஷணை செய்திருந் போல் உணர்ந்தான். தங்களுடைய சம்பா



ஷிமையின் பாஷை தங்களுக்கும் அடிக்கடி இமையோடும் புன்னகைதான் என்று நினைத்தான். புன்னகையின் பொருளும் கவர்ச்சியும் வேறு எந்தச் சொல்லிலும் இல்லையென்ற நிர்மானம் அவனுக்கு.

மாடியிலிருந்து பலகணியின் எண்ணற்ற கண்கள் வழியே ஒரு நாள் அவள் எண்ணெய் நீராடி, மஞ்சளின் பசுமை போகாமல் வரும் போது பார்த்ததும் தான் அவனுக்கு இப்படித் தோன்றியது. கட்டவிழ்ந்து அலையலையாய் மலை அருவி போல் முழங்காலைத் தொடும் கூந்தலின் கற்றைகள். தோளின் பால் வண்ணத்தில் முத்து முத்தாய்த் துளிர்த்த நீர்த் திவலைகள்...சிலை, சிலை. வார்த்தெடுத்த சிலை, கடைந்தெடுத்த சிலை!.... தெய்வீக அழகு!

குழந்தையெல்லாம் தெய்வங்கள். கள்ளமில்லாதவை யெல்லாம் தெய்வங்கள். அப்படியானால் மல்லிகாவெனும் குழந்தையும் தெய்வம்தானே?

எது எப்படியோ? அவனுடைய மாமாவுக்கும் மாமிக்கும் மல்லிகா எப்போதும் குழந்தைதான். மாமா அவளைக்கூப்பிடுவதே 'குழந்தை' யென்றுதான். மாமியின் மடியில் தலை வைத்துக் கொண்டு இக் குழந்தை பாடம் படிப்பதை அடிக்கடி பார்த்திருக்கிறான் ரமணன்.

நாளடைவில் மல்லிகாவைப் பற்றிய எல்லா விவரங்களையும் ரமணன் தெரிந்து கொண்டு விட்டான். மாமா மாமிக்குச் சொந்தக் குழந்தையில்லாததால் மல்லிகாவை அவளுடைய பெற்றோர்களின் அனுமதியோடு தங்கள் குழந்தையாகவே வளர்க்கிறார்கள்.

ஒரு நாள் மல்லிகாவின் மாமாதான் மாமியிடம் சொல்லிக் கொண்டிருந்தார். வாசற் கட்டைத் தாண்டும் போது யதேச்சையாக அவர்களின் பேச்சு அவனை எட்டியது.

''இந்த வரன் ரொம்ப நல்ல இடம். நம்ம சக்திக்கும் சரியானது. ஆனால் மல்லிகா பியூஸியை முடிக்கட்டுமென்று பார்க்கிறேன்.''

ரமணனின் மனத்தில் இச் சொற்கள் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் மனத்துக்குள் ஓர் உள் மனம் இருக்கே, கேணிக்குள் கேணி இருப்பது போல, அங்கே ஏதோ நெருடினாற் போலிருந்தது.

நடையை இழுத்துக் கொண்டு அவன் உள்ளே செல்கையில் மல்லிகாவின் குரல் கீழே இசைத்தது. ''...பியூஸி முடிஞ்சதும் நான் டாக்டருக்குப் படிக்கப் போகிறேன்!..''

சரேலென்று அவனது பார்வை, பாய்ந்த வேகத்திலேயே, படியேறும் தன்னை மல்லிகாவின் விழிகள் பின் தொடரக் கண்டு திரும்பியது.

விட்ட இடத்திலிருந்து அவன் யோசனை தொடர்ந்தது.

அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. இந்தக் குழந்தைக்கா வரன் தேடியாயிற்று? நிஜமாகவே இன்னும் அவள் குழந்தையா?

இயற்கையின் சிருஷ்டியில் பெண்மையே மகத்தான விநோதமல்லவா!

மல்லிகாவின் மாமா — மாமிக்கு உண்மையிலேயே ஒரு பொறுப்பு வந்து விட்டது என்பதை ரமணன் உணர்ந்தான். நாற்றங்காலில் முளைத்த நாற்றைப் பிடுங்கி நல்ல விளை நிலத்தில் நடுவது அவர்களின் பொறுப்பு.

அப்படி நினைத்துக் கொண்டதும்தான் அதை அவனுக்கு நிரூபிப்பது போல் சில நிகழ்ச்சிகள் நேர்ந்தன.

சென்ற மாதம், அவனுடைய மாமாவுக்குக் காலில் பெரிய கட்டி கிளம்பி அந்தண்டை இந்தண்டை நகர முடியவில்லை. முழங்காலின் மூட்டுக்குக் கீழ் கட்டி. கூடத்துக் கட்டிலில் படுக்க வைத்திருந்தார்கள். வலியின் வேதனை தாங்காமல் மெத்தையில் அப்படியும் இப்படியுமாய் அலைபோல் புரண்டு 'ஆ. ஆ'வென அவர் அலறும் அலறல் மாடிக்கும் கேட்கும். 'ஐயோ மல்லிகா, தாங்க முடியவில்லையே!' என்ற ஓலம் நெஞ்சைப் பிழியும். மாமாவுக்குப் பக்கத்திலிருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ததெல்லாம் மல்லிகாதான். காலேஜுக்குப் பத்து நாள் லீவு.

கூடத்தின் ஜன்னல் வழியே அவள் சிசுருஷை செய்வதைப் பார்த்தபடியே அநேக தடவை சென்றிருக்கிறான் ரமணன். கூட்டைச் சுற்றிச் சுற்றி வந்து தவிக்கும் பட்சிபோல், கட்டிலைப் பிரதட்சணம் வந்து தவித்துக் கொண்டிருப்பாள், பாவம்!

அந்தக் காட்சியில் அவன் நெஞ்சில் இதழ் விரிகின்றது. இல்லை, இதழ்களையும் தாண்டி ஓர் உண்மை ரகசியமாய் எட்டிப்பார்க்கிறது. தாவர நூலில் படித்த பாடம் ஞாபகம் வருகிறது.

அரும்பு மலருகையில் அதன் இதழ்கள் வண்டுகளைக் கவரவென்றே அழகழகாய் அமைந்திருந்தாலும், இதழ்களுக்குள் இதமாய் ஒரு நுட்பமான நேர்த்தியான ஆதாரபாகம் மகரந்தத்தோடு கிண்ணம் போல் இருக்கிறதே — அது மாதிரி! மல்லிகாவின் குழந்தை உள்ளத்தில் அவளையே அறியாமல் ஒரு மென்மை சேர்ந்து கொண்டிருக்கிறது. இதுவே பெண்மையின் புது மலர்ச்சி! தாய்மையின் எழில் மலர்ச்சி!

பெண்கள் பிறக்கும் போதே தாய்மையோடுதான் பிறக்கிறார்கள். அதனால்தான் அவர்களிடம் இத்தனை பரிவும், பாசமும் தங்கியிருக்கின்றன.

மாமாவுக்குச் சேவை செய்து மகிழும் இத் தருணம் மல்லிகை குழந்தையல்ல — ஒரு தாய்! அவளின் இயற்கையான தாய்மைத் தவிப்பு இதனால் நிறைவு பெற முயல்கிறது. இல்லையா?

இது என்ன ஆராய்ச்சியோ: ரமணனுக்கே சரியாகப் புரியாத ஆராய்ச்சி! பிறரிடம் சொன்னால் புரியவா போகிறது?

ஒரு நாள், ரமணன் காலேஜிலிருந்து வரும் போது, மாடியிறக்கத்தில் அவன் காலடியில் ஒரு சின்னஞ்சிறு நாய்க்குட்டி அவனைச் சுற்றிச் சுற்றி வந்து முன் போக முடியாமல் பின்னும் நகர முடியாமல் திணற அடித்தது. இத்தனை நாட்களும் இல்லாமல் இந்த வீட்டில் இது ஏது புது ஜீவன்?

குட்டியின் கொழு கொழு உடலின் மெத்தும், தணிந்து விம்மும் வயிற்றுப்புறச் சதையின் நயமும், புசுபுசு கழுத்தின் மேல் தொங்கும் காதும், நீர் வழிய நீட்டிய தளிர் நாக்கும் குட்டியைப் பார்க்கவே பிரமாதமாயிருந்தது.

குனிந்து குட்டியை ஆசையோடு கையில் எடுத்தான் ரமணன். மிருதுவான உடல், பிடிக்குள் சிக்காமல் நழுவியது. தரையில் விழுந்தது. 'வீல், வீல்' அலறல்; அபசுவரமாய்

ஒலித்தது. என்னவோ ஏதோவென்று பதறிய வண்ணம் குலுங்கக் குலுங்க உள்ளேயிருந்து ஓடி வந்தாள் மல்லிகா. பாய்ந்து குட்டியை வாரி அணைத்துக் கொண்டாள்.

மல்லிகாவுக்குச் செல்லமா இந்தக் குட்டி! (நாய்க்குட்டிக்கெல்லாம் இந்தக் காலத்தில் என்னமாய் அதிர்ஷ்டம் அடிக்கிறது!)

அவளது மார்பில் சௌகரியமாய்ப் புதைந்து கொண்டு குட்டி துயில் போயிற்று. தன் விரல்களால் அதன் முதுகுப் புறத்தை அவள் வருடிக் கொண்டிருந்தாள்.

''....எனக்கு நாய்க்குட்டின்னு பிடிக்கும்னு தெரிஞ்சு என் சிநேகிதி ஒருத்தி கொடுத்தாள். 'மின்னி'ன்னு பேர் வச்சிருக்கேன்!....''

ரமணனின் கண்களுக்குள் ஒரு சுடர் ஒளிர்ந்தது. அவன் இப்போது மல்லிகாவையும் மல்லிகாவின் கரங்களில் ஒரு நாய்க்குட்டியையும் காணவில்லை. மல்லிகாவின் இளமையெழிலையும் தாண்டி அவளுக்குள் சுடர்விடும் அந்தத் தாய்மையைத்தான் அவன் வழிபட்டுக் கொண்டு நின்றான்.

உணர்ச்சி தொண்டையை அடைத்தது. மெய்சிலிர்க்க மாடிக்குச் சென்றான். நெஞ்சக் கிளர்ச்சியைத் தனக்குத் தானே சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

அவள் மேல் கொண்ட பிடிப்புக்கு ஒரு விவரமே இல்லை. ஒரு வடிவமே இல்லை. ஊதுவத்திப் புகை போல் ஒரு மணம் மட்டுமே சூழ்ந்திருக்கிறது. காற்றில் வரும் பாட்டுப் போல் ஒரு நாதம் மட்டும்தான் தேங்கியிருக்கிறது. மணத்துக்கும் நாதத்துக்கும் வடிவம் எதற்கு? விவரம் எதற்கு? விவரமும் வடிவமும் இல்லாமலே அவை இனிமையாக இல்லையா என்ன?

அதனாலே இத்தனை நாட்களாகியும் அவன் அதற்கு வடிவம் கொடுக்க முற்படவில்லை. ஓர் உருவக் கோட்டுக்குள் அந்த அன்பின் எல்லையை அடக்க அவனுக்கு மனம் வரவில்லை. ரோஜாப் பூக்களைக் கூடையில் இட்டு அமுக்கினால் இதழ்கள் கொட்டிப் போவதைப் போல் இதனால் அன்பின் தூய்மை குன்றிப் போகுமே என்று பயந்தான். நெஞ்சுக்குள் ஏற்றிவைத்த சுடராய் அதை நலுங்கக் கூட விடாமல் போற்றத் தொடங்கினான்.


இதுவே சிறப்பான ஒரு பக்தி மார்க்கத்துக்கு ஒப்பாக அவனுக்குத் தோன்றியது. இளமைக்கும், அழகுக்கும், பெண்மைக்கும் அஞ்சலி செய்யும் பக்தி! இதுவரையில் இல்லாத புதுவிதமான பக்தி!

அதுமாதிரி குருட்டுத்தனமாக இல்லாததையெல்லாம் சிந்தித்துக் கொண்டு மூளை குழம்பும் ஒரு சமயம். அப்போதுதான் அவனுக்கு ஓர் ஆசை கிளர்ந்தது.

பத்திரமாய்த் தன்னோடு நன்னற்றதாய் வைத்துக் கொண்டிருக்கும் இவ்வெண்ணங்களை நினைவின் மிதப்பிலிருந்து மீட்டு, சிறிய சிறிய கதைகளாகத் தொகுத்து வெளியிட்டால் என்ன?

ஒரு கணம் நெஞ்சம் குளிர்ந்தது. நினைவின் தன்மையில். அங்கே ஒழித்துப் பெருக்கிக் கழுவிக் கோலமிட்டாற்போல் ஒரு லட்சணம்.

நல்ல ஆசை — தான் பைத்தியமானது போதாதென்று பிறரையும் பைத்தியமாக்க முனையும் ஆசை!



''ஏனுங்க? இதென்ன அபாயம்னு போட்டிருக்கு. எதைக் குறித்துப் போட்டிருக்கும்?''

''எனக்குத் தெரிந்த வரையில் அதோ அந்த ஓட்டலை உத்தேசித்துத்தான் போட்டிருக்குன்னு நினைக்கிறேன்!''

ஆரம்பத்தில் ரமணன் எழுதியதெல்லாம் திரும்பி வந்தது. எடுத்த எடுப்பில் பிறருக்கு இத்தனை குழப்பங்களும் எப்படிப் புரியும்? இத்தனை தத்துவங்களும் எப்படி விளங்கும்?

திடீரென்று ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக அவனுடைய ஒரு கதை அச்சேறி விட்டது: அவ்வளவுதான்; ரமணன் ஆனந்தக் கூத்தாடி விட்டான்.

அவனுடைய கதை பிரசுரமாகியது என்று அவளுக்கும் எப்படியோ தெரிந்து விட்டது; அன்று மாலை— கொல்லைப்புறத்து மதிற்சுவரின் முனைத்திருக்கும் செடியையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பவள் தனக்காகத் தான் காத்து நிற்கிறாள் என்று அவன் அறிவான். தான் வருவதை உணர்ந்ததும் அவள் முகம் கனிவது அவனுக்குத் தெரியும்.

அவளருகே சென்றதும் நின்றான். அவள் கண்கள் அவன் மேல் தங்கின.

செடியின்மேல் வைத்த நாட்டம் மாறாமலே ''நீங்கள் கதையெழுதுவீர்கள் என்று என்னிடம் சொல்லவேயில்லையே!....'' என்றாள்.

''படித்த கதை எப்படியிருந்தது என்று இன்னும் சொல்லாமலே நிற்கிறீர்களே?'' என்றான் ரமணன் பதிலுக்கு.

''எனக்குப் பிடித்திருந்தது....''

''அப்படியானால் வேறு யாருக்கும் பிடிக்காது என்று அர்த்தமா?''

பதறிப் போய் அவள் முகம் திரும்பியது. அவசரமாய், "...நான் அப்படிச் சொல்லவில்லை. அப்படிச் சொல்ல எனக்குத் தகுதியும் இல்லை...." என்றாள்.

அவன் புன்னகை புரிந்தான். அவனே தொடர்ந்தான்.

"ஆனால் கதையின் முடிவு இப்படிச் சோகமாய் இருந்திருக்க வேண்டாம்.."


"அப்படியா? எனக்கென்னவோ இழப்பதில் இருக்கும் இன்பம் அடைவதில் இல்லையென்று தான் தோன்றுகிறது. கண்ணீரில் கிடைக்கும் ஆனந்தம் வேறெதிலும் இல்லை என்று கவிஞர்களே சொல்லுகிறார்கள். அவர்களின் ஈடேறாத ஆசைகளின் வேதனைகள்தான் நமக்கு இனிய காவியமாய்க் கிடைக்கின்றன."

"ஷியர் பெஸிமிஸம்!" அவனையே அறியாமல் வந்து விட்ட வார்த்தைகள் அவை.

"இருக்கலாம். ஆனால் நான் அதையே பூர்ணமாய் நம்புகிறேன். நம்பிக்கைதானே எதற்கும் ஆதாரம்!...."

அவன் முகம் கேள்வியோடு அவளை நோக்கிற்று. அவள் நிறுத்தவில்லை.

"......எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. நான் சின்னக் குழந்தையாய் இருந்த போது பொம்மைக் கடையில் ஒரு பொம்மையைப் பார்த்து விட்டு வாங்க ஆசைப்பட்டேன். விலை அதிகம் என்று சொல்லி அம்மா வாங்கித் தர மறுத்து விட்டாள். அதை அடையமுடியவில்லையே என்று நான் ஏங்கி நின்ற போதெல்லாம் ஊறிய வேதனை ஏதோ ஒரு வகையில் இன்பமாய் இருந்தது. அந்தப் பொம்மையை அடைவதே ரொம்ப நாட்கள்வரை என் லட்சியமாயிருந்தது. அதே போன்ற வேதனையைத் தான் இந்தக் கதையில் சொல்லியிருக்கிறேன்."



"அந்தப் பொம்மை கிடைத்திருந்தால் நீங்கள் இன்னும் சந்தோஷப்பட்டிருப்பீர்கள், இல்லையா?...."

"அப்படித்தான் நடக்கவில்லை. கடைசியில் ஒருநாள் நான் அதை வாங்கியே விட்டேன். வாங்கிய அன்று சந்தோஷமாயிருந்தது. வாஸ்தவம்தான். பொம்மையைக் கீழே வைக்காமல் சதா விளையாடினேன். மெல்ல மெல்ல என் கைபட்டுப் பொம்மை அழுக்காகி விட்டது. என் ஆர்வமும் அதோடு குறைந்து விட்டது. ஒரு சமயம் பொம்மை கீழே விழுந்து உடைந்ததும் நான் வருத்தப்படவில்லை. ஒருவேளை அந்தப் பொம்மை எனக்குக் கிடைக்காமலே போயிருந்தால் நன்றாய் இருந்திருக்குமோ என்னவோ....!"

"மன்னிக்க வேண்டும். நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. பிடிக்கவும் இல்லை...."

சரேலென்று அவள் உள்ளே சென்றுவிட்டாள். ரமணன் அதிர்ச்சியோடு பார்த்தான்.

அவள் முகம் கன்றிப்போயிருந்தது. விழிகள் நிறைந்து விட்டன. தவறாகப் பேசி விட்டோமா? தினமும் போல் நாலே வார்த்தையில் பதில் சொல்லாமல் ஏன் இப்படி மூச்சு விடாமல் பேசத் தோன்றியது?

அவள் செல்லும் பின்னழகைக் கண்ணுற்று அவன் கண்கள் காரணமில்லாமலே பனித்தன.

அதற்குப் பிறகு அடிக்கடி மல்லிகா அவன் கண்களில் தென்படுவதில்லை.

தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருந்தன அவளுக்கு. அவனுக்கும் தான். அவள் ஓயாமல் ஒழியாமல் எடுத்த புத்தகத்தைக் கீழே வைக்காமல் படிக்க ஆரம்பித்து விட்டாள். அவனால் தான் படிக்க இயலவில்லை.; மனம் பதியவில்லை. இந்த நாளில் பெண்களுக்கு இருக்கும் பொறுப்புணர்ச்சி ஆண்களுக்கு எங்கே வருகிறது?

எப்படியோ ஒருவாறாகத் தேர்வுகளும் முடிந்து விட்டன.

விடுமுறை தொடங்கியதும் ரமணன் ஊரைப் பார்க்கக் கிளம்பி விட்டான். கிளம்பும் போது மல்லிகாவைப் பார்த்து, சொல்லிக் கொண்டுதான் கிளம்பினான்.

"எப்போது பார்க்கலாம் மறுபடியும்?" என்று அவன் கேட்ட கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை. பதில் சொல்ல முடியாது நெஞ்சு கேவிற்றோ?

வருவதை முன்கூட்டியே அறிவிக்கும் கேவலா அது? அதற்கும் முன்பே அதை அறிந்து உருவாக்கிக் கொண்ட விரக்தியா?

வாழ்வென்று அமைந்து விட்டால் அதில் ஏன் இத்தனை குழப்பங்கள்? ஏன் இத்தனை இருப்பங்கள்? ஏன் இத்தனை ஆசைகள்?— மனத்தை ஒழித்து விட்டால் ஆசைகள் ஒழியுமோ? மனத்தை ஒழிக்கும் மார்க்கமென்ன?

விடுமுறை முடியவில்லை. அதுவரை கூட ரமணனால் அவஸ்தையைத் தாங்க முடியவில்லை. திடீரென்று ஒரு நாள் மௌனமானதோர் அழைப்பு நெஞ்சைத் தட்டிய மாதிரி இருந்தது. மல்லிகாவின் அழைப்பா அது?

நினைத்துக் கொண்டதும் வண்டியேறி ஊரை விட்டுக் கிளம்பி வந்து விட்டான். இங்கே அவனுடைய வருகைக்காக எத்தனை செய்திகள் காத்திருந்தன?— அதனதன் தனித் தனியான கொடுமைகளுடன்.

அத்தனை செய்திகளில் இப்படியும் ஒரு செய்தி இருந்தது.


ரமணனின் கண்ணிமைகள் அழுந்தின. இமைத் திரையின் நிழலாட்டத்தில் என்னென்னவோ காட்சிகள் தோன்றி மறைந்து தோன்றின. அந்த வீட்டின் முன் பக்கத்தில்

இரண்டு நாட்களுக்கு முன் போட்ட பந்தல்; பந்தலின் வாயிலிலே பூவும் குலையுமாய் நாட்டிய வாழை; அங்கேயும் இங்கேயுமாய் ஜன அலைச்சல்.

நின்ற இடத்தில் நிலம் நடுங்கிற்று. கண்கள் இருண்டன. கீழே விழாதவாறு வாசற்கதவின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு தரையில் சற்று நேரம் அமர்ந்து விட்டான்.

ஆகாயத்தில் மந்தை மந்தையாய் மிதந்து கொண்டிருக்கும் கரு மேகங்கள் தாழ்ந்து கீழிறங்கி அவனைச் சூழ்ந்து மொய்த்தன. அது அலை அலையாய்ப் பேரிரைச்சலுடன் அவனை மோதித் தள்ளி அலைத்தெடுத்தன. கவிந்த கோஷங்களிடையே ராக நயத்தோடு அவளுடைய 'பெயர்' மட்டும் சுருதி சுத்தமாய்ப், பிரிந்து வந்தன.

"...மல்லிகா! மல்லிகை! பவழமல்லிகை!"



தயங்கித் தயங்கி மாடிக்கு ஏறி அறையை அடைந்தது பிரம்மப் பிரயத்தனம்.

எதையுமே அவன் இப்போது இழந்து நிற்கவில்லை. ஏன் என்றால் கடைசிவரை தன்னுடைய அன்புணர்ச்சிக்கு அவன் வடிவம் கொடுக்கவில்லை; அடைய முடியும் என்று கனவிலும் நினைத்ததில்லை. கைகூடாது என்றே தீவிரமாய் நம்பினான்.

'இழப்பதில் இருக்கும் இன்பம் என்றும் அடைவதில் இல்லை.' ரமணன் கண்ட எத்தனையோ நூதன தத்துவங்களில் இதுவும் ஒரு தத்துவம்! அந்தத் தத்துவம் தன் மூலமாகவே நிரூபணமாகி நிலைபெறவே இவ்வாறெல்லாம் நேர்ந்திருக்கிறதோ!

அத்தத்துவ ஞானம் இப்போது எங்கே? தீரா இன்பம் என்பது எங்கே?

அரை நினைவு நிலையில் தாளிட்ட கதவை யாரோ மெல்லத் தட்டுவது கேட்டது. எழுந்து போய் அறைக்கதவைத் திறந்தான்.

திறந்த கதவினிடையே, சட்டமிட்ட ஓவியம் போல மல்லிகா நிற்பாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. மனத்தில் சிறையிட்ட பாசம் எழுந்த வேகத்தில் ரமணனுக்குத் தொண்டையை அடைத்தது. கண்ணில் நீர்த் திரை விழுந்தது.

முன்னிலும் பன்மடங்கு வசீகரத்துடன் அவள் தோன்றினாள். குழலை அழுந்த வாரி, நடு வகிடு தெரியாமல் உச்சிப்பூ அணிந்து, தோளில் புரளப் புரள மல்லிகை சூடியிருந்தாள். தன்னொளியைத் தானே நாணாமல் நிறையும் விழியும் தாழ்ந்த முகமுமாய் வனப்பின் ஜொலிப்பில் அவளைக் கண்டதும் ரமணன் சட்டென்று தலையைக் கவிழ்ந்து கொண்டான்—புடம் போட்ட பொன்னைப் போல் வேதனையின் தூய்மையில் அவள் உருகுவதைக் காணச் சகிக்காமல்.

விழுந்த பார்வையில் அகஸ்மாத்தாய் மேலாக்கின் பின்னரங்கில் தவழும் மாங்கல்யம் தட்டுப்பட்டது. நிலத்தைக் கீறும் கால் விரல் நகங்களிலும், மெத்தென்ற பாதங்களின் விளிம்பிலும் ஆசையாய் இட்டிருந்த மருதாணி நன்றாகப் பற்றியிருந்தது.

ரமணனுக்கு நெஞ்சுக் குழல் விக்கியது. "கன்கிராஜுலேஷன்ஸ், மல்லிகா!"

அவள் தலை நிமிரவில்லை. ஜன்னல் கம்பிகளை ஆதாரத்துக்காகப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

"...அவர்கள் வீட்டில் இன்றைக்கு என்னை அழைத்துப் போகிறார்கள். ராத்திரி ஒம்பது மணிக்கு 'டிரெயின்!' சொல்லிண்டு போகலாம்னு வந்தேன்...."

சட்டென்று அவள் திரும்பினாள். "கீழே எல்லாரும் காத்துக் கொண்டிருப்பார்கள். நான் போயிட்டு வரேன்!..."

"ஊம்!..." அவ்வளவுதான் அவன் பதில்.

மாடியிறக்கத்தில் வளையும் போது ஒரு முறை மலர விழித்துப் பார்த்தாள். அந்த விம்மலில் ஆயிரம் கேள்விகள் குமுறின.

படியில் இரு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்தது. "...இனிமேல், இதுபோல் பொம்மைக் கதை எழுதாதீர்கள்...அதனாலே தான் மாமாவிடம் எது சொல்லவும் எனக்கு வாயில்லாமே போச்சு!...."

ரமணன் அதிர்ந்து போய் நிமிர்ந்தான். அதற்குள் அவள் மாடி யிறங்கிப் போய் விட்டாள்.

வெளிக் காண்பிக்காமல் உள்ளுக்குள்ளே மறுகியதை என்னமாய்ச் சொல்லி விட்டுப் போய் விட்டாள்!....

ரமணனுக்குப் பெரும் ஓய்ச்சல் கண்டு விட்டது.

அந்த நேசத்தை அவளால் ஒழிக்கமுடியாது. அவனை அவளால் என்றும் மறக்க முடியாது.

இதயச் சதையைப் பட்டை பட்டையாய் உரித்தெடுத்தாற் போல் பற்றி எரிந்தது.

ஆனால் அப்போதும் ரமணன் அழவில்லை. அழுதால் நாளடைவில் அந்த வேதனை குறைந்து போகலாம். அதில் அவனுக்கு விருப்பமில்லை. அந்த வேதனைதான் அவனுடைய நிரந்தர இன்பம்; இனி வாழ்வின் ஒரே ஒரு இன்பம்! அதையும் இழக்க அவனுக்குத் துணிவில்லை. கண்ணீராய்க் கொட்டிவிட அவன் தயாரில்லை.

இதயத்துக்குள்ளேயே போற்றினால் சிப்பியின் முத்து போல், மங்காமல் மாறாமல் இத்துயர் என்றென்றும் மகோன்னதமாய்த் துலங்கிக் கொண்டிருக்கும்.

திரும்பவும் அவனுக்கு நினைவு வந்தது —

வைகறை நேரத்தில், எதிர் வீட்டுத் தோட்டத்தில், தெருவை நோக்கிச் சாய்ந்திருக்கும் பவழ மல்லிகை மரத்தில் சிறியதும் பெரியதுமாய்க் கோடி கோடிப் பூக்கள் தினம் தினம் பூக்கின்றனவே — அவை எதற்காகப் பூக்கின்றன? பூத்ததுமே எதற்காக உதிருகின்றன? காலடியிலும், காரடியிலும் நசுங்கவென்றே அவை பூக்கின்றனவோ?

ஒரு வேளை, இப்படிப் பூத்ததும் அழிவதில் தான் பவழ மல்லிகையின் பெருமையே இருக்கிறதோ? அழிந்த பின்னும் மணம் குன்றவில்லையே — அது எப்படி?

இளமை திரும்பினுல்!

கடந்த பதின்மூன்று வருஷங்களாக டிரைவர் நாச்சிமுத்துவை எனக்குத் தெரியும். அதற்கு முன்னுலிருந்தே 'பலராம் டிரான்ஸ்போர்'டில் அவர் இருக்கிருர் என்றாலும், எனக்கு அப்போதிலிருந்துதான் உத்தியோக விஷயமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை சென்னைக்குப் புறப்பட்டுப் போய்த் திங்கட்கிழமை விடியற்காலம் திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இரண்டு வேளைகளும் நான் பிரயாணம் செய்யும் பஸ்களுக்கு நாச்சிமுத்து டிரைவராக அமைந்தது தற்செயலாகத்தான். இதர பிரயாணிகளெல்லாம், பஸ்ஸில் இடம் பிடிக்க அடித்துப் பிடித்துக் கொண்டு ஏற வேண்டிய நிலையில் இருக்க, நான் மட்டும் சரியாகப் பஸ் புறப்படும் நேரத்துக்கு வந்து நாச்சிமுத்துவுக்குப் பக்கத்து ஆசனத்தில் கிடக்கும் காக்கித் தொப்பியை எடுத்து அவரிடம் கொடுத்து விட்டுச் சௌகரியமாக அமர்ந்து விடுவேன். இது பதின்மூன்று வருஷப் பழக்கத்தில் எனக்குக் கிட்டிய சலுகை.


இன்றைக்கு ஐந்து நிமிஷங்கள் முன்னதாகவே பஸ் நிலையத்தை அடைந்து விட்ட நான் நாச்சிமுத்துவைப் பார்த்ததும் திடுக்கிட்டு விட்டேன். இத்தனை வருஷப் பழக்கத்தில் ஒரு நாள் கூட அவரை இந்தக் கோலத்தில் நான் கண்டதே இல்லை. 'ஏறும் வழி'க் கருகில் பஸ் மீது சாய்ந்தபடி இடது காலைத் தூக்கிமுட்டுக் கொடுத்தபடி வைத்துக்கொண்டு வானத்தைப் பார்த்தபடி நின்றிருந்த அவர் கையில் இருந்த சிகரெட்தான் என் அதிர்ச்சிக்குக் காரணம்.

எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி ஆச்சரியமாகக் குறைந்து, அவர் உடையில் இருந்த மாறுதலும் எனக்குப் புலப்பட்டது. வழக்கமாக அணியும் உத்தியோக உடுப்பை — எண்ணெய்க் கறை ஏறிய காக்கிப் பாண்டையும் கோட்டையும் - இன்று காண முடியவில்லை. பதிலாக இடுப்பில் எட்டு முழ ஜரிகை வேஷ்டி. தும்பைப் பூவாக வெளுப்பு. மேலேயும் வெள்ளைச் சட்டை. முழுக்கைகளைப் பட்டையாக மடித்து விட்டுக் கொண்டிருந்தார். சட்டை வழியாக உள்ளே பனியனின் அரை வட்டம் தெரிந்தது.

அவர் கவனத்தைத் திருப்ப இலேசாக இருமினேன். என்னைப் பார்த்த போது அவர் சிறிது கூச்சப்பட்டார் என்பது அவர் பார்வையிலிருந்தே தெரிந்தது.

'என்ன விசேஷம்?' என்பது போல் அவரைச் சிரித்த முகத்தோடு பார்த்தேன்.






''உள்ளே போய் ஒக்காருங்க. வரேன்'' என்று நகர்ந்தார்.

வெளியே நாச்சிமுத்து யாரிடமோ பேசிக் கொண்டிருந்தார். வருபவர்களுக்கெல்லாம், ''உள்ளே போய் உக்காருங்க'' என்று உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருந்தார். நான் பார்த்த நேரத்தின் ஒரு பகுதியில் நாச்சிமுத்து யாரோ ஒரு கிழவருக்கு — இரண்டு மூன்று பெண்கள் உடன் வர வந்தவர் — கையிலிருந்த மூட்டையை வாங்கிக் கொண்டு பஸ்ஸில் ஏறுவதற்கு உதவி செய்வது தெரிந்தது.

டிரைவர் ஆசனத்துக்கு மேலேயிருந்த மணி கிணுகிணுத்தது. நாச்சிமுத்து பக்கத்துக் கத



வைத்திறந்து கொண்டு ஒரு 'ஜம்ப்' செய்து மேலே ஏறினார்.

கைக்குட்டையை எடுத்து உதறும்போதே 'கம்'மென்று வாசனை மூக்கைத் துளைத்தது. நான் மூச்சை இழுத்துச் சுழிப்பதைக் கண்டதும், "இது லாவண்டருங்க" என்றபடியே கைக்குட்டையைச் சாய்மானத்தில் விரித்துப் போட்டு விட்டு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டார். சாவியைத் துவாரத்தில் பொருத்தித் திருப்பி விட்டு 'ஸ்டார்டர்' பித்தானை அமுக்கிய போது வண்டி உறுமிக் கொண்டு குலுங்கியது.

வண்டி கிளம்பி விட்டது. நாச்சிமுத்துவாக ஏதாவது பேசுவார் என்று எதிர்பார்த்தேன். அவர் வாயைத் திறக்கவில்லை. அடிக்கொரு தரம் முகத்தைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டு எதிரே பதிக்கப்பட்டிருந்த கண்ணாடியில் தெரிந்த தம் பிரதிபலிப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் முகம் வழுவழு வென்று 'ஷேவ்' செய்யப்பட் டிருந்தது. சரியாகத் துடைக்கப் படாமல் விடப்பட்டிருந்த முகப் பவுடர் திட்டாக இடது தாடையில் தெரிந்தது. நாச்சிமுத்துவின் பழைய நடை, உடை, பாவனைகளைப் பற்றிய நினைவில் ஈடுபட்டு விட்ட எனக்கு அவரிடம் தோன்றியிருக்கும் இன்றைய மாறுதலுக்கான காரணத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நினைப்பு தாற்காலிகமாக எழாமல் இருந்தது.

மாம்பலத்தில் கம்பெனிக்குச் சொந்தமான காலனி வீடுகளுள் ஒன்றில் குடியிருக்கிறார் நாச்சிமுத்து. நான்கைந்து வருஷங்களுக்கு முன்னால் குஞ்சும் குளுவானுமாகப் பத்து வயதிற்குட்பட்ட நான்கு குழந்தைகளை விட்டு விட்டு அம்மை நோயில் குளிர்ந்து போய் விட்டாள் அவர் மனைவி. தாயில்லாக் குழந்தைகளைக் குறை தெரியாமல் வளர்க்க வேண்டிய பொறுப்புச் சுமை பறி கொண்டு விட்ட சிரிப்பு, பதிலாக நிறைந்த சுருக்கங்களை நிலவ விட்டிருக்கும் முகம். நேரமில்லாததினாலோ, சோம்பேறித்தனத்தினாலோ அல்லது விரக்தியினாலோ ரோமம் அகற்றப்படாமல் புதராக அதில் மண்டிக் கிடப்பதை அடிக்கடி பார்த்திருக்கிறேன். அப்படியே மாதத்துக்கு ஒரு முறை 'ஷேவ்' செய்து கொண்டாலும் ஒழுங்காகச் செய்து கொள்ள மாட்டார். மாடு

மேய்ந்த புல் தரைமாதிரி இட்டுத் இட்டாக ரோமத் துளிகள் கன்னங்களிலெல்லாம் ஒட்டிக் கொண்டிருக்கும். அப்படிப்பட்டவரிடம் மின்னல் மாதிரி ஒரு வாரத்துக்குள் எவ்வளவு பெரிய மாறுதல்!

''மாயா வலிதை பார்த்துட்டீங்களா?'' கமன்று கொண்டிருக்கும் கிராம போன், தட்டின் பாதியில் ஊசியை வைத்ததுபோல் சம்பந்தா சம்பந்தமில்லாமல் திடீரென்று கேட்டார் நாச்சிமுத்து. அவர் குறிப்பிட்டது முந்தா நாள் வெளியாகி யிருந்த ஒரு திரைப் படம். 'நான் பார்த்து விட்டேனே' என்ற தோரணையில் இருந்தது அந்தக் கேள்வி. எனக்குத் தெரிந்தவரை நாச்சிமுத்து சினிமாவுக்கே போக மாட்டார். அப்படியே எப்போதாவது போனாலும் அது 'இந்தப் புள்ளைங்க தொந்தரவைப் பொறுக்க முடியாததினாலே தான்' இருக்கும். போய் விட்டு வந்ததையும் ஒரு முக்கியமான விஷயமாக்கி அதற்கென்று சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு என்னிடம் அவர் இதுவரை தெரிவித்ததில்லை. இன்றைக்கு?

''நான் பார்க்கலே. நீங்க பாத்துட்டீங்களா?'' என்று கேட்டேன்.

''ஓ. நேத்து நைட் 'ஷோ' போயிருந்தேன்'' என்று தயாராக வைத்திருந்த பதிலைக் கொட்டினார் அவர். இதைத்தான் உணராதது போல் அமரிக்கையாகச் சொல்ல விரும்பினாலும் பேச்சில் ஆர்வம் தலைகாட்டி விட்டதை அவரால் தவிர்க்க முடியவில்லை. தொடர்ந்து அவரேதான் பேசினார்.

''ரிலீஸ் ஆன ரெண்டாவது நாளே படம் பாத்திடறதுன்னு என்ன சும்மா இருக்குதுங்களா? 'டிக்கெட்'டிலே அன்னைக்கு விழி பிதுங்கிப் போச்சு. அந்த க்யூவிலே எவன் நின்னுக்கிட்டு நெரி படறதுன்னு பேசாமே ஒண்ணு இருவது டிக்கட்டை மூணு ரூவா கொடுத்து வாங்கிக் கிட்டுப் போயிட்டு வந்துட்டேன். படம் பாத்தா சோபாவிலே 'பேனுக்'கு அடியிலே குந்திக்கிட்டுப் பாக்கணும். காசுக்குக் கஞ்சத் தனப்பட்டுக்கிட்டு எச்சிலையும் துண்டு பீடியையும் மிதிச்சுக்கிட்டு, ஒருத்தர் மேலே ஒருத்தர் இடிச்சுக்கிட்டு...சே... கொடுக்கிற காசுக்குத் தகுந்தாப்பலேதான் சௌகரியமும் இருக்கு.''

நான் பேசாததற்குக் காரணம், அவர் பேசுவதைக் கேட்போம் என்று நினைத்தது மட்டுமல்ல; வியப்பு என் வாயை அடைத்து விட்டதும் கூடத்தான். இன்றைக்கு இந்த நாச்சிமுத்துவுக்கு என்ன வந்து விட்டது?

''படம் 'இங்கிலீஷ்' 'டைப்'பிலே எடுக்க 'டிரை' பண்ணியிருக்காறுவ. அதுக்குள்ளாறே அவ்வளவு 'ஸ்டாண்டர்ட்' வந்துடுதா தம்பளவங்களுக்கு! ஆறு ரெண்டு மூணு இடம் 'ஸஸ்பென்ஸ்' பிரமாதம். 'காதல் மலர்ச் சோலையிலே'ன்னு ஒரு ரேபட். நான்வேணும்னு சொல்றேன் பாருங்க. இந்த வருஷ 'ஹிட்' அதுதான். அந்த 'பேக்ரௌண்ட்' கேக்க தப்பிலே மனசு துள்ளுது.''

''நடிப்பெல்லாம் எப்படி?'' நானும் ஏதாவது பேசவேண்டுமே, என்பதற்காக ஒப்புக்குக் கேட்டு வைத்தேன்.

''ஹீரோ சுகமில்லே. அத்திலிக்கு அத்திலி மோதறனுவோடே நடிப்பு ஏ கிளாஸ். 'லவ்' ஸீன்னி'லே என்ன 'பிரீ'யா நடிக்கிறுங்கி தீங்க! முப்பத்தைஞ்சு வயசு ஆவுதாம் அவளுக்கு. பதினாறு வயசிலே ஒண்ணும் எட்டு வயசிலே ஒண்ணுமா ரெண்டு பசங்க பள்ளிக் கூடத்திலே படிக்கிறுனுவளாம். படத்திலே அவளைப்பார்க்கக்கொள்ள நமக்கு இந்த நினைப் பெல்லாம் வரவே மாட்டேங்குது. பதினெட்டு வயசுப் பொண்ணு கணக்கா அந்த வெட்டும் வெடுக்கு வெடுக்குன்னு பேசறதும்...அடேங் கப்பா....!'' நாச்சிமுத்து வாயைப் பிளந்து வியந்தார். ஆச்சரியப்பட்டார். நானும்தான். மூன்று ரூபாய் கொடுத்துப் படம் பார்க்கும் தாராளமும், கலகலப்பான பேச்சும், படத்தை அலசி ஆராயும் ரசனையும், அந்த ரசனைக்குப் படத்தின் இதர அம்சங்களை விட்டுவிட்டு இந்த வயதிற்குரிய மனோபாவத்துக்குப் புறம்பான மோகனத்தை இலக்காக்கிக் கொண்டதும்..? முன்பின் அறிமுகமில்லாதவரைப் பார்க்கும் தயக்கம். நாச்சிமுத்துவைப் பார்க்கும் என் பார்வையில் ஏற்பட்டது. அனுதியான காலத்தில் பருவ காலங்கள் மாறி மாறி வரும். ஏழு பருவங்களை அனுபவித்தாக வேண்டிய குறுகிய மனித வாழ்க்கையில் ஒரு முறை வந்ததே மறுமுறையும் வருவதற்கு நேரமிருக்கிறதா..? இல்லை யென்றால் நாற்பத்தி ஐந்து வயதுக்கு மேலே இருபது. இருபத்தி ஐந்து வயதில் இருக்கும் ஊதாரித்தனம் நாச்சிமுத்துவுக்கு எப்படி வந்தது? லோகாயத சுகங்களில் ஆழ்ந்த ஈடுபாடு ஏன் வந்தது...?—

பூந்தமல்லியில் பஸ் நின்றது. பிரயாணிகளில் பலர் பஸ் நிற்கும் பத்து நிமிஷ நேரத்தையும் பணத்தையும் செலவழிக்கக் கீழே இறங்கிச் சென்றனர். நாச்சிமுத்துவும் இறங்கிப் பின்னால் போய் யாரையோ விசாரித்துக் கொண்டிருந்தார்.

''தாத்தா! ஒரு காப்பி வேணுமின்னு குடிச்சிட்டு வருவோம். வாங்களேன்.''

நாச்சிமுத்துவின் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.


''இப்ப ஒண்ணும் வேண்டாம் தம்பி. வீட்டிலே போய்ப் பார்த்துக்கலாம்'' என்று அந்தக் கிழவர்தான் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

''இந்த ஊரிலே மல்லிகைப் பூ ரொம்ப விசேஷம். ரெண்டு மொளம் வேணு வாங்கவா?'' என்று கேட்டார் நாச்சிமுத்து.

''இதெல்லாம் என்னாத்துக்குத் தம்பி அநாவசியச் செலவு உனக்கு. அப்புறம் வேணுமின்னு பூக்கடையிலே பார்த்துக்கலாம். வா'' என்றார் கிழவர்.

''பூக்கடையிலே இம்மா நல்ல பூ கிடைக்குதா உங்களுக்கு? அங்கே போயி ஒண்ணுக்கு ரெண்டா விலை கொடுத்து வாடின பூவை வாங்கறதை இங்கியே நல்லதா வாங்கிட்டுப் போறது.''

மறுபடியும் பேசியிருந்தால் கிழவர் மறுத்திருப்பார் என்றுதான் தோன்றியது எனக்கு. நாச்சிமுத்துதான் அவர் எதிரே இல்லை. கிழவரின் பதிலை எதிர்பாராமலேயே போய் விட்டுச் சில நிமிஷங்களுக்குப் பிறகு திரும்பியவர், தன் கையில் இருந்த பூச்சரத்தைக் கிழவரிடம் கொடுத்தார். அடுத்த ஐந்து நிமிஷங்களும் என் பார்வைக்குத் தப்பியிருந்து திரும்ப வந்து தன் ஆசனத்தில் அமர்ந்த போது நாச்சிமுத்துவின் கையில் பிரபல சினிமாப் பத்திரிகையின் அந்த மாதத்திய இதழ் ஒன்று இருந்தது.


கவலையின்றி
குளுமையாக இருங்கள்
காற்றில் ஈரமும், சூரிய வெப்பம் அதிகமாயிருக்கும் பொழுது, நாள் முழுதும் குளுமையாக இருக்க ஆப்கன் லாவண்டர் தடவிக் கொள்வதை விட வேறு நல்ல வழியில்லை. புத்துணர்ச்சியையும், உங்கள் மேனிக்கு ஒரு அலாதி வனப்பையும் அளிக்கிறது. ஞாபகமிருக்கட்டும்! கமால் ஸோப், ஆப்கன் டால்கம், ஆப்கன் ஸ்னோ இந்த மூன்றும் இன்றைய நவநாகரீக நாரீமணிக்கு "அவசியம்" தேவை.
KAMAL
ஆப்கன் ஸ்னோ
அழகு சாதனங்கள்

"பார்க்கிறீங்களா?" மரியாதைக்குத்தான் பத்திரிகையை நீட்டினார் நாச்சிமுத்து.

"இல்லே, பாருங்க." அதைப் புரிந்து கொண்டவனாகத் திரும்பினேன். நாச்சிமுத்து ஸ்டியரிங்கின் மீது புத்தகத்தை வைத்துக் கொண்டு ஒவ்வொரு பக்கமாகப் புரட்டினார். உயர்ந்த ரக ஆர்ட் காகிதம். கண்ணைப் பறிக்கும் வண்ணப் படங்கள். ஓர் இதழின் விலை ஒரு ரூபாய்! நாச்சிமுத்துதான் விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்! என்னால் பொறுக்க முடியவில்லை. இந்தப் புரட்சிக்கான காரணத்தைக் கேட்டு விடலாம் என்றால் மற்றவர்கள் சொந்த விஷயத்தில் தலையிடுவதை மனம் அவ்வளவாக விரும்பவில்லை. விரும்பியிருந்தால் அவரே சொல்லியிருக்க மாட்டாரா? மனத்துக்குப் பயந்து, ஆவலுக்குக் கட்டுப்பட்டு மறைமுகமாக ஒரு முறை கேட்டாகி விட்டது. இப்போதும் கேட்டேன்.

"குழந்தைகளுக்கு இன்னைக்குப் பொட்டலம் வாங்கலையா?"

"நெதம் நெதம் என்ன பொட்டலம்? ஒரு நாள்தான் இல்லாமல் இருக்கட்டுமே!" என்றார் நாச்சிமுத்து. பதில் கூறும் போது என் பக்கம் திரும்பாத அவர் முகம், புதுவிதமாகச் சிகையை அலங்கரித்துக் கொண்டு முதுகைக் காட்டி முகத்தைத் திருப்பி 'போஸ்' கொடுத்துக் கொண்டிருந்த சினிமா நடிகை ஒருத்தியின் புகைப்படத்தில் லயித்திருந்தது. இன்றைக்கு என்னவோ சொல்லி விட்டார்! நெதம், நெதம் 'ராவ் கடையில்தான் எந்தப் பட்சணமும் நமுத்துப் போகாமல் நமுநமு




வென்று இருக்கும்' என்று பஸ் நிற்கும் இடத்திலிருந்து ஒரு பர்லாங் தூரம் மெனக்கெட்டு நடந்து போய் நான்கு குழந்தைகளுக்கும் நூல் சுற்றிய எட்டு மந்தாரை இலைப் பொட்டலங்களை வாங்கி, காக்கித் தொப்பியை நிமிர்த்திக் கூடையாக்கி அதில் வைத்துக் கொண்டு பரக்கப் பரக்க ஓடி வந்தது எனக்கல்லவா தெரியும்? ஒரு நாள் பட்சணம் வாங்கக் காசு இல்லையோ அல்லது இருந்ததைத்தான் தொலைத்து விட்டாரோ? சரியாக ஞாபகம் இல்லை, குழந்தைகளுக்குப் பொட்டலம் வாங்க முடியாத நிலை ஏற்பட்ட போது, 'பெத்தவ கொஞ்சம்கூட ஈவு இரக்கம் இல்லாம தவிச்சா தவிக்கட்டும்னு எல்லாத்தையும் விட்டுட்டு நிம்மதியாப் போயிட்டா. வீட்டுக்குப் போனா அனாதைக் குழந்தைங்க கணக்கா நாலும் வரிசையா வாசலிலே நிற்கும். என்னைக் கண்டதும், 'அப்பா, அப்பா' என்று ஓடியாந்து காலைக் கட்டிக்கிறப்போ வெறுங் கையை எப்படிக் காட்டுவேன்!' என்று கூறிய நாச்சிமுத்துவிடம் மனிதத் தன்மையின் பூரணத்துவத்தைக் கண்டு விட்ட உணர்வில் என் மனசு நிறைந்ததையும், நான் வற்புறுத்திக் கொடுத்த அரை ரூபாயை ஏற்றுக் கொண்டவர் முகம் மேகம் விலகியது போல் திடீரென்று மகிழ்ச்சி ஒளி வீசியதையும் என்னால் மறக்க முடியுமா? அடைத்துக் கொண்டு விட்ட நெஞ்சிலிருந்து திக்குத் திக்கி வெளி வந்த வார்த்தைகள் அப்போது போல் எப்போது நினைத்தாலும் மனத்தைத் தழுதழுத்து அதிரச் செய்கிறதே! இப்போது அவர் மகிழ்ச்சி ஒளியையும், என் மன நிறைவையும் இருட்டடிப்புச் செய்துவிட்ட மனோபாவம் எது?

பஸ் பிராட்வேயை அடைந்து விட்டது. நான், பஸ்ஸை விட்டு இறங்குபவன் உடனேயே போய் விடாமல் மனசு உறுத்த உறுத்தப் பிளாட்பாரத்திலேயே நின்றேன். இந்தக் கடைசி நேரத்திலாவது நாச்சிமுத்து ஏதாவது சொல்லுவார் என்ற நம்பிக்கை, சொல்ல வேண்டும் என்ற ஆசை. பின்னாலேயே இறங்கி வந்தவர் கொஞ்சம்கூட என் மீது இரக்கம் காட்டாமல் "திங்கட்கிழமை பாப்போங்க" என்று பட்டுக் கத்திரித்ததைப் போல் பேசி விட்டு பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த கிழவரைக் கவனிக்கச் சென்று விட்டார்.

ஞாயிற்றுக் கிழமை முழுதும் நிலை கொள்ளாத நிலை எனக்கு. போட்டுக் கொண்ட சட்டைக்குள் புகுந்து முதுகெல்லாம் ஊர்ந்து ஓடும் பூச்சியை உதறிவிட விரும்பி, முடியாமல் திண்டாடும் அசௌகரியம். திங்கட்கிழமை நாச்சிமுத்துவை பஸ் ஸ்டாப்பில் பார்த்த பிறகுதான்.. பார்த்த பிறகு நான் இரட்டை அதிர்ச்சிக்கு உள்ளாக வேண்டும் என்று ஞாயிற்றுக் கிழமை இருபத்து நான்கு மணி நேரத்தில் ஒரு கணம்கூட நினைத்ததில்லை. பெருக்கி விட்டு வந்த அடிபோடு அறையில் புழுதி படிந்த மாதிரி இது என்ன வேஷம்! அவர் பழைய தோற்றத்திலேயே நின்றார். ஒரு புதுமைக்குப் பிறகு வந்த இந்தப் பழைய நிலையை இரண்டாவது புதுமையாகத்தான் என்னால் ஏற்க முடிந்ததே தவிர பழைய நாச்சிமுத்துவைப் பார்க்கிறோம் என்ற நினைவே இல்லை. உடல் முழுதும் சிராய்த்த புண் சிறிது ஆறியிருப்பது போல்

கறுப்பு இட்டு இட்டாக ஊறிக் கொண்டிருந்த அதே காக்கிபாண்ட், பெரிது பெரிதாகப் பழுப்பு நிறத்தில் பித்தான் வைத்த காக்கி கோட், தொங்கிப் போயிருந்த கோட்டுப் பையில் கத்தை கத்தையாகத் திணிக்கப்பட்டிருந்த பெரிய டைரியைக் கவ்விப் பிடித்துக் கொண்டிருக்கும் எவர்ஸில்வர் 'கிளிப்' எண்ணெய் வடியும் முகத்தில் கறுப்பும் வெளுப்புமாகப் புள்ளிகள். புயல் அடித்த தோப்பு மாதிரி தாறுமாறாகக் கிடக்கும் கிராப்புத் தலை, காலில் முதலை மாதிரி வாயைப் பிளந்து கொண்டு இரண்டு டயர் செருப்புக்கள். புனருத்தாரணம் செய்த கோயில் இடிந்து விழுந்தமாதிரி இது என்ன மாற்றம்?



''வாங்க, பஸ்ஸிலே குந்திக்குவம்.'' எனக்காகவே காத்திருந்தவர் போல் என்னைக் கண்டதும் வரவேற்றார் நாச்சிமுத்து. இருவரும் அவரவர்கள் ஆசனத்தில் அமர்ந்ததும், ''அன்னிக்கு உங்களைப் பாத்தப்ப எனக்கு ரொம்ப ஆச்சரியமாப் போயிடுத்து'' என்றேன்.

''மனசு இடிஞ்சு சபலத்துக்கு உள்ளாயிடுச்சிங்க.'' நாச்சி முத்து வாயினால் பேசினாலும் பார்வையால் எதையோ பிடுங்க முயலுபவர் போல் கண்களின் வழியாக மனத்தைச் சூனியத்தில் பதித்திருந்தார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவரே தான் பேசினார். ''நம்ப நிலைமைதான் உங்களுக்குத் தெரியுமே! வயத்தை வாயைக் கட்டி நாலு காசு சேர்த்து வைச்சிக்கிட்டு நான் கொஞ்சம் அசௌகரியமாக இருக்கிறது சில பேர்கள் கண்ணை உறுத்தியிருக்கிறது. 'அவ' போன அன்னையிலேயிருந்தே என்னைச் சுத்த ஆரம்பிச்சுட்டாங்க. அப்பெல்லாம் மசிஞ்சு கொடுக்காத மனசு இப்ப என்னவோ இடிஞ்சு தளர்ந்து போச்சு. அன்னிக்குப் பஸ்ஸிலே பார்த்திருப்பீங்களே, கடைசி ஸீட்டிலே குந்திக்கிட்டிருந்தாங்களே, ஒரு கிழவரும் மூணு பொம்பிளைங்களும், அதிலே சிவப்புப் புடவை கட்டிக்கிட்டு நடுவிலே குந்தியிருந்திச்சே அந்தப் பொண்ணுதான்...!''

நான் கிழவரை மட்டும்தான் கவனித்திருந்தேன். அதுவும் அரைகுறையாகத்தான். அந்தப் பெண்களில் ஒருத்தி நாச்சிமுத்துவின் மாற்றத்துக்குக் காரணமாக இருக்கப் போகிறாள் என்று நான் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

''நான் சரியாகக் கவனிக்கலே'' என்றேன்.

''அந்தக் கிழவரு எனக்கு மாமா மொறை வேணும். அந்தப் பொண்ணுக்கு இருபத்திரண்டு வயசு ஆவுதாம். பார்க்கிறதுக்கும் சுமாரா இருக்குது. அப்பா அம்மா ரெண்டு பேரும் கிடையாதாம். கிழவருக்குத் தூரத்து உறவு. அந்தப் பொண்ணைக் கட்டிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அவரு தலையிலே விடிஞ்சு போச்சு. நாலைந்து வருஷங்களாகவே என்னைச் சுத்திக்கிட்டு இருந்தாரு. எனக்குத் துளிக்கூட இஷ்டமில்லே. ஆனால் தாட்சிண்யத்துக்குக் கட்டுப்பட்டு மொகத்திலே அடிச்சாப்பிலே 'முடியாது'ன்னு பதில் சொல்ல வேண்டாம் என்று இத்தினி நாட்களும் ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழிச்சுக்கிட்டு வந்துட்டேன். போன திங்கட்கிழமைதான்....''

எனக்குப் புரிந்து விட்டது. தன் மனமாற்றத்துக்குக் காரணத்தைக் கூறுவதற்குக் கட்டியம் கூறுவது போல் பெரிதாக மூச்சு விட்டார் நாச்சிமுத்து.

''அன்னைக்குப் பஸ்ஸைக் கொண்டு போய் ஷெட்டிலே விட்டுட்டு வீட்டுக்குப் போகக் கொள்ள மணி ஏழாயிடுச்சு. வாச மாடத்திலே விளக்கைக் காணும். லட்சுமி வார நேரம். கொல்லைக் கதவு தொறந்து கிடக்குது. பெரிசு மூணும் பள்ளிக்கூடம் போய் வந்த அலுப்பு, கூடத்திலே மூலைக்கொண்ணாத் தூங்கிக்கிட்டிருக்கு. சின்னப் பயலுக்குப் பசி போல இருக்கு. எடுத்துப் போக ஆளில்லே. இவனே எடுத்து வைச்சுக்கிட்டுத் திங்கப் பார்த்திருக்கான். அந்த வயசுப் பய ரெண்டு படி வடிக்கிற பானையைச் சோத்தோட தூக்கிட முடியுமா? அடுப்பிலேயிருந்து பானை சாஞ்சு சோறெல்லாம் கீழே கொட்டி அப்படியும் விடாமல் வெறுஞ் சோத்தை அள்ளி அள்ளித் தின்னுக்கிட்டிருக்கான். நான் போறேன், அன்னாபிஷேகம் செய்தாப்பிலே வாயி கையி, உடம்பெல்லாம் சோறு. 'அதோடே, 'அப்பா'ன்னு ஓடியாந்தான். எனக்கு எப்படி

பிருககும் மனசு? மறு நாளே காஞ்சீபுரத்திலே கிழவரைப் பார்த்தப்ப, 'பொண்ணைப் பார்க்கணுமே'ன்னேன். 'நீ வீட்டுக்கு வர வேணும். நாளே பட்டணம் காட்ற சாக்கிலே சனிக்கிழமை அன்னிக்கு நீ போற பஸ்ஸிலே கூட்டியாறேன். அப்ப பார்த்துக்கன்னுரு கிழவரு.'' நாச்சிமுத்து நிறுத்தினர்.

இத்தனை வயதுக்கு மேல் அவர் செய்த முடிவு சரிதானு? அவர் எதைச் செய்தாலும் அது சுயநலத்துக்காக இருக்காது என்று மட்டும் என்னல் நிச்சயமாகச் சொல்ல முடியும். கல்யாணத்துக்குப் பிறகு அந்தப் பெண்ணுக்காக இரங்குவதைவிடக் கல்யாணத்துக்கு முன்னல் இருக்கும் நாச்சிமுத்துவின் நிலைக்கு என் மனம் அதிகமாக இரங்கியது.

''முகூர்த்தம் எப்ப? வர்ற மாசத்திலேயா?'' என்று கேட்டேன்.

''கேளுங்க, கிழவரு சொல்லிட்டாரே தவிர எனக்கு மட்டும் மனசு சமாதானப் படவே இல்லே. 'என்னடா இத்தினி வயசுக்கு மேலே மனசு இப்படிப் போவுதேன்னு இருந்திச்சு. அன்னிக்குக் கிழவருகிட்டே 'பொண்ணைப் பார்க்கணும்'னப்ப குழந்தைங்களது சௌகியம்தான் முக்கிய நோக்கமா இருந்திச்சுன்னுலும் அதுக்கப்புறம் இதுலே சொந்த ஆதாயம் என்ன இருக்குது'ன்னு யோசிக்க ஆரம்பிச்சுது. உங்ககிட்டே சொல்றதுக்கு என்னுங்க? போன ஒரு வாரமும் அந்தப் பொண்ணை என்னுலே மறக்கவே முடியல்லீங்க. அதோட வாழப்போறதைப் பத்தியே மனசு நினைச்சுக்கிட்டிருந்திச்சு.

''அதுவோ வயசுப் பொண்ணு. ஏழைங்களுக்கு ஆசைப்படக் கூட அருகதையில்லேன்னு கடவுளு சட்டம் வைச்சிருந்தாருன்னு பரவாயில்லே! அந்தப் பொண்ணு மனசிலே என்னென்னெல்லாம் நினைச்சுக்கிட்டிருக்குதோன்னு நினைக்கிறப்பத்தான் கொஞ்சம் சங்கடமாக இருந்திச்சு. அதுக்காக என்னை இனி மேல் இருபத்தி அஞ்சு வயசுப் பையனு மாத்திக்க முடியாதுன்னுலும் மனசிலேயும் தோற்றத்திலேயும் கொஞ்சம் வரவழைச்சுக்கிட்டால் அந்தப் பொண்ணுக்குக் கொஞ்சம் திருப்தியாக இருக்காதான்னு நெனைச்சேன். இந்த ஒரு வாரமும் அதுக்காக என்னை 'ட்ரெயின்' பண்ணிக்கிறதிலேயே செலவழிஞ்சு போச்சுங்க. சினிமா டிராமாவுக்குப் போறது, சீட்டியடிக்கிறது, எங்கேயாவது சினிமாப் பாட்டுக் கேட்டா கூடக்கூடச் சேர்ந்து பாடறது, இளவட்டங்களோட அரட்டை அடிச்சுக்கிட்டு ஊரைச் சுத்தறது, விதம் விதமாக 'டிரஸ்' பண்ணிக்கிறது. வெள்ளிக்கிழமை ஒரு நாள்தானே என்னை நீங்க பாத்திங்க. மத்த நாள்ளே பார்க்கலியே!'' நாச்சிமுத்து சிரித்தாரோ என்னவோ? பெருமைப் பட்டுக் கொள்ளுகிறாரோ, தம்மைத் தாமே கிண்டல் செய்து கொள்ளுகிறாரோ என்று புரிந்து கொள்ள முடியாதபடி பேச்சு!

''வாலிபப் பருவம் விலை ஓசந்தது. விலை ஓசந்ததுங்கறுங்களே, அது என்னு, எனக்கு அந்த ஒரு வார அனுபவத்திலேதாங்க புரிஞ்சுது. அந்த ஒரு வாரமும் சினிமா, டிராமா, கதைப் புஸ்தகம், சிநேகிதங்களைச் சேர்த்துக்கிட்டு ஹோட்டலுக்குப் போறது, டிரஸ்ஸுன்னு இளமையா இருக்கிறதுக்கு எழுபது ரூபா வரைக்கும் செலவழிஞ்சு இருக்குதுன்னு பார்த்துக்குங்களேன்.'' நாச்சிமுத்து இப்போது நிஜமாகவே சிரித்து விட்டார். நானும் தான். இரண்டு பேர்கள் சிரித்ததும் சாதாரணச் சிரிப்பே அல்ல.

''ஒரு நாள் ரெண்டு நாள்னு பரவாயில்லே. அந்தப் பொண்ணைக் கட்டிக்கிட்டு அதுக்கு ஆசையெல்லாம் தீர்ந்து கிழவியாற வரைக்கும் வாரம் எழுபது ரூபாய் கொடுத்து வாலிபத்தை விலைக்கு வாங்கறதுன்னு நமக்குக் கட்டுப்படி ஆகாதுங்க. ஆனு ஒண்ணு. என் தோல்வியை ஒப்புக்காமல் பேசறேன்னு நினைச்சாலும் நெனைச்சுக்குவீங்க. உண்மை என்ன தெரியுமா? இந்த ஒரு வார வாழ்க்கை ரொம்ப 'போர்' அடிச்சுப் போச்சுங்க. நான் செய்த எந்தக் காரியமும் பாந்தமாகவே படலே. எதுலேயும் மனசு கொஞ்சம்கூட ஒட்டல்லே. நமக்குச் சொந்தமில்லாத பணக்காரன் வீட்டுக்காரிலே ஓர் ஓரத்திலே ஒண்டிக்கிட்டுப் போறாப்பலே ஒரு கூச்சம்.

''நேத்து லீவு நாள்தானே! சமைச்சுக் குழந்தைகளுக்கும் போட்டுட்டு நானும் சாப்பிட்டுட்டுப் படுத்தேன். மனசு ஒரே உளைச்சல். 'அப்பாகிட்டே நான்தான் படுத்துக்குவேன், நான்தான் படுத்துக்குவேன்'னு நாலுக்கும் சண்டை... கடைசியிலே என்மேலே காலைத் தூக்கிப் போட்டுக்கிட்டுத் துவாரபாலகங்க மாதிரி பக்கத்துக்கு ரெண்டா படுத்துதுங்க...அந்த ஸ்பரிசம்....சாயந்திரம் நாலையும் பீச்சுக்குக் கூட்டிக்கிட்டுப் போய் வீடு திரும்பறப்போ மனசு தீர்மானப்பட்டுப் போச்சு. அந்த வருஷத்தை எப்படி ஓட்டினேம்? போனதை யெல்லாம் மறுபடியும் கொண்டாந்து மனசிலே இனிச்சிக்கிறதுன்னு அது சரிப்பட்டு வராதுன்னு தோணிப் போச்சு! பழகலேன்னு பாலு கூடத்தான் புளிக்குது. நமக்கெல்லாம் கஷ்டம்தாங்க பாந்தமா இருக்குது. இப்பக் காஞ்சீபுரம் போன உடனே கிழவரைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி விட்டுத்தான் மறுவேலே. நம்ப இருக்கிற நிலையிலே அந்தப் பொண்ணுக்காக இரக்கப்படுவதைத் தவிர வேறே என்னங்க செய்ய முடியும்?'' நாச்சிமுத்து முடித்து விட்டார்.

புனருத்தாரணம் செய்த கோயில் இடிந்து தான் விழுந்து விட்டது. நான் நினைத்ததற்கு மாருக அதற்குள் இந்த ஒரு வார காலம் இருந்த தெய்வமும் புதிதாக இருந்திருக்கிறது. அதுவும் கோயிலின் இடிபாடுகளுக்குள்ளே அகப்பட்டு அழிந்து போய் விட்டது. இப்போது மீண்டும் பழைய கோயிலில் பழைய தெய்வமே மாற்ற முடியாதபடி புதிய சக்தியோடு பிரதிஷ்டை ஆகிவிட்டது.

எனக்கு என்னவோ நாச்சிமுத்துவையே கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் தோன்றியது. கும்பாபிஷேகம் ஆன கோயிலைப் பார்க்கும் போது ஏற்படும் நிறைவை அனுபவிக்கச் சில நிமிஷங்கள் செலவழித்து கொண்டிருந்த போது மனம் கேட்டது. 'வாலிபப் பருவம் என்ற பழம் இந்த நாச்சிமுத்துவுக்கு நிஜமாகவே புளிக்கிறதோ?' தலைக்கு மேலே இருந்து, 'புறப்படலாம்' என்று கிணுகிணுத்த மணி என் மனக் கேள்விக்குப் பதிலாக எனக்கு மட்டும் 'ஆமாம்' என்றது.

படித்துப்  பாருங்கள்

மணிமங்கலம்

சித்தர்களின் பாட்டுகளிலிருந்து பிறந்த கருத்துக்கள்; அந்தக் கருத்துக்களிலிருந்து பிறந்த கதைகள் என்று சோமுவின் கதைகளைச் சுருக்கமாகச் சொல்லி விடலாம். சிறு கதை வேண்டுமானாலும் சிறுகதைகள்; நல்ல கவிதைகளுக்கு விளக்கமும் விரிவுரையும் வேண்டுமானாலும் இதுவும் இங்கே காணலாம். மணிமங்கலம் ஒரு செம்பொன் மங்கள மணி மாலை.

பதினொரு கதைகளில் ஒன்று வில்லன் காதல். அதற்கு வேறு பெயரிட்டால் இந்தக் கொத்தில் அபஸ்வரம் இருக்காது— ''ஒரு காஞ்சிப் பித்து'' என்று மறு பதிப்பில் இந்தக் கதைக்கு மட்டும் பெயர் மாற்றி விடலாம் என்பது எம் அபிப்பிராயம்.

பிரசுரம்: பாரதி பதிப்பகம், தியாகராய நகரம், சென்னை—17. விலை ரூ. 2.00.

கதை சொன்னவர் கதை

பதினொன்று வயதுச் சிறுவன் அவன். தன் தாயாரிடம் போய் அவன், ''அம்மா! டென்மார்க்கின் தலைநகர் கோபன் ஹேகனுக்குப் போகிறேன்!'' என்றான். தாயார் ஆவலுடன் மகனைப் பார்த்து, ''அங்கே போய் என்ன செய்வாய்?'' என்று வினவினாள்.

''புகழ் சம்பாதிக்கப் போகிறேன்!'' என்று பதிலளித்தான் சிறுவன்.

எல்லாரும் பொருள் சம்பாதிக்கப் பிரியப்படுவார்கள்; இந்தச் சிறுவன் புகழ் சம்பாதிக்க ஆசைப்பட்டான். அவன் ஆசைப்பட்டது வீண் போகவில்லை. பின்னால் அகில உலகிலும் குழந்தைக் குலம் போற்றிப் புகழும் ஆசிரியராக வந்தான். அந்தச் சிறுவன் தான் பிரபல குழந்தைக் கதாசிரியர் ஆண்டர்சன். ஆண்டர்சனின் கதைகள் நூற்று இருபது மொழிகளில் வெளிவந்துள்ளன.

கதை சொன்னவர் கதைத் தொகுதியிலே ஆண்டர்சனும், ஈசாப்பும், கவி ரவீந்திரரும், சார்லஸ் பெரால்டும் இடம் பெற்றுள்ளனர். ஒவ்வொருவருடைய கதையும் அவர் தம் வரலாற்றுக் குறிப்பும் சுவையுடன் தரப்பட்டுள்ளன. இந்த நல்ல நூலைக் குழந்தைச் செல்வத்துக்கு வழங்கியவர் அழ. வள்ளியப்பா.

பிரசுரம்: தமிழ்நிலையம், புதுக்கோட்டை. விலை ரூ. 1.

டிரான்ஸிஸ்டர் ரேடியோ

இப்போதெல்லாம் தெருவில் பலபேர் தோளில் டிரான்ஸிஸ்டர் ரேடியோவைத் தொங்க விட்டுக் கொண்டு போவதைக் காணலாம். இது ஒரு புது மாதிரி நாகரிகமாகவும் கருதப்படுகிறது.

சாதாரண ரேடியோப் பெட்டிகளை விட டிரான்ஸிஸ்டர் செட்டுகளிலே பல அநுகூலங்களிருக்கின்றன. கிரிஸ்டல் ரேடியோ முறையில் தோன்றிய இடையூறுகளைப் போக்க வழி தேடிய போது டிரான்ஸிஸ்டர் முறையைக் கண்டு பிடித்தார்கள். சாதாரண ரேடியோப் பெட்டிகளில் காணும் வால்வுகளுக்கும் இந்த டிரான்ஸிஸ்டர் முறை அமைப்புக்கும் வித்தியாசம் உண்டு.

டிரான்ஸிஸ்டர் வால்வோ அல்லது இதர உறுப்புக்களோ சீக்கிரம் கெடுவதில்லை. ரேடியோப் பெட்டிகளிலே நாம் காணும் வால்வுகள் 2000 மணி நேர உபயோகத்துக்குப் பின் தீய்ந்து விடும்.

டிரான்ஸிஸ்டர் ரேடியோவைப் பற்றிக் கூறும் இந்நூலும் அதைப்போலவே கையடக்கமாக 60 பக்கங்களில் முடிந்து விட்டது. ரேடியோ செயல்படும் முறை பற்றி ஏற்கெனவே அறிந்தவர்களுக்கு இந்நூல் பயன்படும். மற்றவர்களுக்கு அவ்வாறு சொல்வதற்கில்லை. 'மற்றவர்கள் இதே ஆசிரியரும் இன்னும் பலரும் ரேடியோவைப் பற்றி எழுதியிருக்கும் ஆரம்ப விளக்கப் புத்தகங்களைப் படித்துத் தேர்ந்தபின் இந்நூலைச் சிரமமின்றிப் புரிந்து கொள்ளலாம்.

''கலெக்டர் பேஸை கற்றில், குறைந்த கரண்ட் ஓடும். ரெக்டிபையர் சுற்றில், கரண்ட் எதிர்ப்புறமாக ஓடுகிறது. ஆனால் எமிட்டர் பேஸை சுற்றில், கரண்டு ஓடும்போது கலக்டர் பேஸை சுற்றைப் பாதிக்கிறது...'' என்று இந்த *ரீதியில் ஆசிரியர் சொல்லிக் கொண்டு போவது ரேடியோ நுணுக்கங்களைப் பற்றி நன்கு அறிந்தவர்களுக்குத்தான் புரியும். அடுத்த பதிப்பு, மற்றவர்களுக்கும் புரியும் படியான முறையில் அமையும் என்று எதிர்பார்க்கிறோம். ஆசிரியர் ரேடியோ விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்றவர். ஓர் எளிய முறைப் பதிப்பு வெளியிடுவது அவருக்குக் கடினமாயிருக்காதென்று நினைக்கிறோம்.

ஆசிரியர்: எம். கான் முகமது பி. ஏ. கிடைக்குமிடம்: காலேஜ் ஆப் இன்டஸ்ட்ரீஸ், 35—36, வடக்கு சித்திரை வீதி, மதுரை. விலை: ரூ. 2.50.

மாயக்கள்ளன்

ஆத்மரங்கன் ஒரு விசித்திரப் பிறவி. அவனிடம் ஓர் அபூர்வ சக்தி இருந்தது. அவன் நினைத்தபொழுது வெவ்வேறு வகை உருவங்களை எடுக்க முடியும். அப்படி யிருந்தும் அவனால் மலை உச்சியிலிருந்த தன் தாய் தந்தையரைக் காண முடியவில்லை. எல்லாம் மாயக்கள்ளன் செய்த திருவிளையாடல்கள் தான். ஆத்மரங்கனுக்கு என்ன நேரிடுமோ என்ற ஆவலைத் தூண்டிப் படிக்க வைக்கிறது இப் புத்தகத்தில் சம்பவங்கள். கடைசியில் அந்த மாயக்கள்ளன் யார் என்பது வெட்ட வெளிச்சமாகிறது. அந்த மாயக்கள்ளன் ஆத்மரங்கனின் மனத்துக்குள்ளேயே இருந்து ஆட்டி வைத்த மனக்குரங்குதான். ஆத்மரங்கன்

மனக்குரங்கை அடக்கிக் கட்டுக்குள் வைக்கவும் அவன் நினைத்த காரியமெல்லாம் சாதகமாகிறது. தன் தாயையும் தந்தையையும் அவன் காண்கிறான். மனத்தைக் கட்டுப்படுத்தா விட்டால் அது எத்தகைய ஆட்டமெல்லாம் ஆடும் என்பதைச் சித்திரிக்கும் அழகான குழந்தை நூல் இது.

ஆசிரியர்: பெரியசாமித் தூரன்; பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-5. திருச்சி-2 விலை ரூ. 2-75.

காவேரியின் அன்பு

சொந்தையிலுள்ள அத்தனை பேருமே அவனை வெறுத்தார்கள்; கரும் பூதம் என்று கேலி செய்தனர்; ஏன், அவனைப் பெற்ற தந்தையே அவனைத் தூஷித்து வந்தார். அன்பையே அறியாத அந்தக் கரும் பூதத்துக்குத் தன் இனிய வார்த்தைகளால், அன்பினால், மனிதத் தன்மை கொடுத்தாள் காவேரி. கரிய பூதம் வீராசாமியாயிற்று. அவனை அடித்துத் துன்புறுத்தியவர்களிடமிருந்தும் மீட்டாள் காவேரி. அந்தக் கரிய சிறுவனிடம் காவேரி கொண்டிருந்த பாசம் அவனைச் சென்னைக்கே அழைத்துச் செல்லும்படி தூண்டியது. சென்னையில் எல்லோரும் அவனிடம் அன்பு செலுத்தினர். ஆனால் காவேரியின் அண்ணன் முத்து இதற்கு எதிரிடை. வீராசாமியை அளவு கடந்து அவன் வெறுத்தான். அதனால் வீட்டை விட்டே வெளியேற நினைத்தவனுக்குத் துரை தன் எஸ்டேட்டில் வேலை கொடுக்க முன் வருகிறான். தந்தை வாங்கிக் கொடுக்க மறுத்த ஸ்கூட்டர் வீராசாமியின் உதவியினால் கிடைத்ததும் முத்துவின் மனம் மாறுகிறது. ஸ்டேஷனுக்கு ஓடி வந்து வீராசாமியிடம் தன் அன்பைப் பொழிகிறான். 'அன்புக்கு அடிபணியாதவரில்லை' என்ற தத்துவத்தை அழகுறச் சித்திரிக்கிறது இந்தக் குழந்தை நூல். இந்த நூலை எழுதியவர் பூவண்ணன்.

பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-5 திருச்சி-2. விலை ரூ. 1.50.

Finance of Foreign Trade and Foreign Exchange

பொருளியலில் ஒரு முக்கிய பகுதி அந்நியச் செலாவணியும், அதற்கு ஆதாரமாக உள்ள வெளி நாட்டு வர்த்தகமும். நமது நாட்டின் தற்போதைய நிலைமையில் இவைபற்றிய விஷயங்களை, இவற்றில் சம்பந்தப்பட்ட பாங்கர்கள், வர்த்தகர்கள் முதலியோர் மட்டுமின்றி, சாதாரண மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும். விஷயங்கள் சிக்கலானவை என்றாலும் ருசிகரமானவை. எளிய முறையில் தெளிவுடன் விளக்கினால் படிப்பவர்க்குச் சுலபமாகப் புரியும். இம்முறையில் எழுதப்பட்டிருக்கிறது இப் புத்தகம். எழுதியவர் திரு கே. வி. வேங்கடராமன். ஆசிரியர் அந்நியச் செலாவணி சம்பந்தமாக நேரிடை அநுபவமுள்ளவர். புத்தக அறிவினால் மட்டுமின்றி, நடைமுறை விவகாரங்களில் பழக்கப்பட்ட வராகையால், கடினமான இவ்விஷயங்களையும் மிகத் தெளிவுடனும் சந்தேகங்கள் ஏற்படக்கூடிய இடங்களில் நிச்சயத்துடனும் விளக்கி வைக்கிறார். வெளி நாட்டு வர்த்தகத்துக்கு ஆதாரமாக அமைந்துள்ள தத்துவங்கள், ஏற்றுமதி-இறக்குமதி கணக்குகள், கணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் முறைகள், அதற்குக் கையாளப்படும் செலாவணிப் பத்திரங்கள், அவற்றின் தன்மைகள் முதலியவை நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. அயல் நாட்டு வர்த்தகம் நடைபெறும் விதங்கள், அதில் கையாளப்படும் தனிச் சொற்கள், தஸ்தாவேஜிகள், இன்ஷியூரன்ஸ் முறைகள், ஏற்றுமதி செய்வோர் பணம் பெறும் முறைகள், இறக்குமதியாளர்கள் பணம் செலுத்தும் முறைகள், இவ்விரண்டு வகையிலும் பாங்கிகள் அளிக்கும் உதவி முதலிய முக்கியமான விஷயங்களும் தக்க உதாரணங்களுடன் இந்நூலில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. விஷயத் தெளிவுக்காக நாணயத்தைப் பற்றிய குறிப்புகளும், நமது நாட்டு நாணயத்தின் வரலாறும், ரிஸர்வ் பாங்கி நாணயப் புழக்கத்தையும் கடன் நிலவரங்களையும் இயக்கும் விதங்களும் சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கின்றன.

கிடைக்குமிடம்: ஆசிரியர் கே. வி. வேங்கடராமன், 10, துக்காராம் இரண்டாவது தெரு, சென்னை-17. விலை ரூ. 6-00.

Shree Narayana Ashram Silver Jubilee Souvenir

சுவாமி நாராயணர் பூர்வாசிரமத்தில் யார் என்பது அநுமானத்தால் மட்டுமே தெரியும். ஆனால் பின்பு சந்நியாச ஆசிரமத்தில் அவர் புரிந்த தெய்வப் பணியும், தேசப் பணியும் பலருக்குப் பிரத்யட்சமாகத் தெரிந்த விஷயம். 'பகவந்நாம ஞானமே ஜீவனசாரம்' என்பதை மந்திரமாகக் கொண்டு, இமயத்தின் மடியில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு சுற்றி வாழ்ந்த மலைநாட்டினரின் மனத்தைப் பதப்படுத்தியவர் ஸ்ரீ நாராயணர். கல்வி நிலையங்கள் பலவற்றைத் தோற்றுவித்தவர். அவரது ஆன்மசக்தியே அந்த வனாந்தரத்துக்கும் பலரை ஈர்த்துப் புண்ணிய ஸ்தாபனங்கள் பலவற்றை அங்கே நிறுவச் செய்தன. 1956-ல் ஸ்ரீ நாராயணர் உடலைத் துறந்தபின்னும் அன்பர்கள் அவரது பணிகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். சென்ற 1961-ம் ஆண்டில் ஆசிரமம் நிறுவி இருபத்தைந்தாண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு விழா நடத்தி இந்தச் சிறப்பு மலரை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இதில் ஆங்கிலப் பகுதியொன்றும், இந்திப் பகுதி ஒன்றும் உள்ளன. பற்பல மதங்களைச் சேர்ந்த குருமார்கள்; பெரியோர்கள் ஆகியோரின் மணிமொழிகளும் ஸ்ரீ நாராயணரைப் பற்றிய நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகளும், நெஞ்சை நிரப்பும் அவரது வாக்குகளும் இடம் பெற்றுள்ளன.

பிரசுரம்: நாராயண ஆசிரமம், ஹிமாசல பிரதேசம். விலை தரப்படவில்லை.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.


வீட்டுச் சலவையின்
பெருமை
ஸர்ப் சலவையின்
அருமை
Surf
AMAZING BLUE POWDER
FOR THE WHITEST WASH!
சட்டை, வேட்டி, சேலை, ரவிக்கை, துண்டு, சிறுவரின் உடைகள் ... நம் வீட்டுத் துணிகள் எல்லாவற்றுக்கும் ஏற்ற சலவை ... வீட்டிலேயே ஸர்ப் சலவை ... வெகு இலகுவாக வெள்ளைவெளேரென்று துப்புரவாக்கும் சலவை! எல்லாம் ஸர்ப் செயல், அதன் அளவுகடந்த ஆற்றல்! இன்றே செய்வீர் ஸர்ப் சலவை ... இல்லத்திற்கான இணையற்ற சலவை!
ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை!
ஹிஸ்தான் லீவர் தயாரிப்பு
SU. 24-X52 TM

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon